பக்கங்கள்: இருபது

Registered as a Newspaper

# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 21 சனிக்கிழமை (04 - 04 - 1998) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 44

# புலிகளுக்கு எதிராக பிரிட்டனிலும் சட்டம்?

## விரைவில் வரலாம் என சஞ்சிகை ஒன்று தகவல்

கொழும்பு, ஏப்ரல் 4

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டம் பிரிட்டனிலும் விரைவில் வரலாம்.

'பார் ஈஸ்ட்டன் எக்கனமிக் ரிவியூ' என்ற ஆங்கில சஞ்சிகை இந்தத் தகவலை வெளியிட்டிருக்கின்றது.

உலக நாடுகளில் உள்ள தீவிரவாத அமைப்புக்களுக்கு பிரிட்டனில் நிதி திரட்டுவது கிரிமினல் குற்றம் என்று தெரிவிக்கும் சட்டம் ஒன்றை பிரிட்டிஷ் அரசு விரைவில் கொண்டுவரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமது நாடுகளில் உள்ள தீவிரவாதிகள், பிரிட்டனில் தாராளமாகச் செயற்படவும், நிதி திரட்டவும் பிரிட்டிஷ் அரசு அனுமதித்துள்ளது என ஸ்ரீலங்கா, சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் குற்றம் சுமத்தியதை அடுத்து—

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 4 தமிழர்கள் கைது!

மட்டக்களப்பு, ஏப். 4

அம்பாறை — மொனறாகலை வீதி, சியம்பலாண்டுவ சோதனைச் சாவடியில் வைத்து 4 தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பிலிருந்து புறப்பட்ட இரு லொறிகளில் பயணம் செய்த சமயம் சில தினங்களுக்கு முன்னர் இவர்கள் கைதாகினர்.

சியம்பலாண்டுவ விசேட அதிரடிப்படை முகாமில் இந்நால்வரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-21)

## கப்பல் சேவை கோரி நகரில் நேற்று ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலையிலும், வவுனியாவிலும், மன்னாரிலும் தங்கி உள்ள தமிழ் மக்களை அழைத்து வருவதற்காக கப்பல் சேவை உடனடியாக நடத்தக் கோரி புளொட் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் நேற்று ஊர்வலமாகச் சென்று யாழ். செயலகத்தில் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் எஸ். கிருபைராஜா அரச அதிபர் க. சண்முகநாதனிடம் மகஜரைக் கையளித்தார்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட அரச அதிபர் தற்பொழுது பொருள்களை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## தீவிரவாதத் தகவல்களை திரட்ட பொலீஸ் பிரிவு

### தனியாக அமைக்கப்பட்டது

கொழும்பு, ஏப். 4

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்கு தனியான புலனாய்வுப் பிரிவு ஒன்று பொலீஸ் திணைக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

''பயங்கரவாத புலனாய்வு பிரிவு'' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பிரிவுக்குப் பொறுப்பாகப் பிரதிப் பொலீஸ்மா அதிபர்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## உடனடி யுத்த நிறுத்தம் கோரி கையெழுத்து இயக்கம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 4

★ உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, சமாதான சூழ்நிலையை உருவாக்க அரசும் புலிகள் இயக்கமும் முன்வரவேண்டும்.

★ யுத்த நிறுத்தத்தை உருவாக்குவதற்கான முயற்சியில் வடக்கு - கிழக்கில் உள்ள 27 தமிழ் எம். பிக்களும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

— இவ்வாறு கோரும் கையெழுத்து வேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி மகஜருக்கு ஆதரவாகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை வடக்கு — கிழக்கில் மும்முரமாக இடம் பெற்று வருகின்றது.

தென்பகுதியில் அரசுக்கு எதிராகத் திணிக்கப்படும் அரசியல் போராட்டங்களுக்கு தீர்வு காண்பதற்கு அரசு விழுந்தடித்துக் கொண்டு செயற்படுகின்றது. ஆனால் நாட்டின் தேசியப் பிரச்சினையாக உருவாகியிருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்துக்கு தீர்வு காண்பதில் அதேயளவு அவசரத்தையும், தீவிரத்தையும் அரசு காட்டுவதாக இல்லை. எனவே அத்தகைய தீர்வுக்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் என்று மேற்படி கையெழுத்து சேகரிக்கும் இயக்கத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (உ-7)

## இலங்கையில் காவலில் உள்ள 21 இந்திய மீனவர்களின் உறவினர்கள் சீற்றம்!

### தீக்குளிக்கவும் முஸ்தீபு

புதுடில்லி, ஏப். 4

இலங்கைக் கடற்படையினரின் காவலில் உள்ள 21 இந்திய மீனவர்களையும் விடுவிக்க தமிழ் நாடு அரசு உடனடி நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றஞ்சுமத்தி அந்த மீனவர்களின் உறவினர்கள் நேற்று வெள்ளி இராமேஸ்வரத்தில் தீக்குளிப்பு முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன் மீனவர்களை விடுவிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடு செய்வதாக இந்திய காவல்துறை வட்டாரங்கள் உறவினர்களுக்கு உறுதிமொழி வழங்கியதாகவும் —

அதனைத் தொடர்ந்து அவர்களின் தீக்குளிப்பு முயற்சி கைவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மல்லாவியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

வவுனியா, ஏப். 4

கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சைக் கண்டித்து நேற்று வன்னி மல்லாவியில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

மல்லாவி வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணியில் உயர்தர வகுப்பு மாணவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வரை நடந்த இப்பேரணி முடிவில் அகதிகளுக்கான ஐ. நா. அலுவலக வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (உ-3)

## துறைமுக ஊழியரான தமிழர் கைது!

கொழும்பு, ஏப். 4

கொழும்புத் துறைமுகத்தில் பணியாற்றும் தமிழ் எழுதுவினைஞர் ஒருவர் விசேட பொலீஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

துறைமுகத்திலிருந்து வெளியேற்றப்படவிருந்த கொள்கலன் ஒன்றுக்குப் போலி இலக்கம் வழங்கியுள்ளார் எனக் கிடைத்துள்ள தக

[ 8 ஆம் பக்கம் பார்க்க]

## வழங்கப்பட்ட 40 பஸ்களில் பத்து பஸ்கள் மட்டுமே தற்போது சேவையில்

யாழ்ப்பாணம், ஏப். 4

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அண்மையில் வழங்கப்பட்டிருந்த நாற்பது பஸ்களில் பத்து பஸ்கள் மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் உள்ளன.

தேர்தலின் போது பாவனைக்காகக் கொண்டுவரப்பட்ட நாற்பது பஸ்கள் தேர்தல் பணியின் பின்னர் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த பஸ்களில் பெரும்பாலானவை மேலும் பாவிக்க முடியாத அளவு பழுதடைந்திருக்கின்றன. அதில் பாவிக்கக்கூடிய நிலையில் இருந்த பஸ்களும் திருத்தப்பட்ட பஸ்களுமாக பத்து பஸ்கள் மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஏனைய முப்பது பஸ்களும் உடனடியாகப் பாவிக்கக் கூடிய நிலையில் இல்லை என்றும் —

உரிய திருத்த வேலைகள் முடிந்த பின்னர் அவை பாவனையில் ஈடுபடுத்தப்படும் என்றும் —

வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கல்விப் பணிப்பாளருக்கு உணர்வுபூர்வ அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 4

வலயம் ஒன்று கல்விப்பணிப்பாளர் இரத்தினராசாவின் பூதவுடல் நேற்றுக் காலை வலயம் ஒன்று அலுவலகத்தில் வைக்கப்பட்ட போது, ஏராளமானவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கொழும்பிலிருந்து விமான மூலம் நேற்றுக் காலை 11.00 மணிக்கு எடுத்து வரப்பட்ட பூதவுடல் வலயம் ஒன்று அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தபோது பெரும் எண்ணிக்கையான பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வித்திணைக்கள அதிகாரிகள் மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினர்.

யாழ். நகர கமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டு அஞ்சலியுரை நிகழ்த்தினர். கல்விமான்கள், கல்வி அதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசி இன்னும் சீராகவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். நகரப்பகுதியில் சில இடங்களுக்கான தொலைபேசிச் சேவை நேற்றும் சீராகவில்லை.

நேற்று முன்தினம் பெய்த திடீர் மழை காரணமாக நிலத்துக்குக் கீழான கேபிள் வயர் பழுதடைந்ததால் இந்தச் சேவை பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

திருத்தவேலைகள் நேற்றும் [illegible] றன. (உ-3)

## உரிமை கோரப்படாத மூன்று விக்கிரகங்களும் கீரிமலை ஆலயத்துக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 04

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மல்லாகம் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு உரிமையாளர்களை அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த தெய்வ விக்கிரகங்களை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திடம் ஒப்படைக்கும்படி நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார்,

நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மூன்று தெய்வ விக்கிரகங்களும் ஒரு திருவாசியுமே இவ்வாறு கையளிக்கப்பட்டன.

இவற்றில் திருவாசி கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்குச் சொந்தமானதென்று ஆலயக் குருக்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொண்டார்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் பொன்னம்பலம்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பொன்னம்பலம் 31-03-98 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற ஆறுமுகம் தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ் சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், தவமலர் (கனடா), தவபாலசிங்கம் (லண்டன்), ஜெயராஜ் (லண்டன்), பத்மமலர் (வடபிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில்), ராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற குலசிங்கம், வாகீஸ்வரி (லண்டன்), கௌசல்யா (லண்டன்), காலஞ் சென்ற சிவபாதசுந்தரம், மங்கையர்க்கரசி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவராஜ் (கனடா), பிருந்தா (கனடா), பத்மராஜ் (லண்டன்), குலராஜ் (கனடா), ஸ்ரீகாந் (லண்டன்) அஞ்சலா (லண்டன), பஞ்சுளா (லண்டன்), பிரவீன (லண்டன்), பிரமிளா (லண்டன்), சிவரூபன் (லண்டன்), சியாமளா (லண்டன்), தர்ஷன், நவீன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், கோபிநாத் (கனடா), மங்களநாத் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06-04-98 திங்கட்கிழமை லண்டனில நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்;
திருமதி பத்மமலர் சிவபாதசுந்தரம்
(C.T.B.)

வன்னியசிங்கம் ஒழுங்கை,
தாவடி வடக்கு,
கொக்குவில். (54629)

---

திருமதி
## சின்னத்தங்கம் வயிரமுத்து

பன்னாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி சின்னத்தங்கம் வயிரமுத்து வியாழக்கிழமை (2.4.98) இந்தியாவில் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ் சென்ற வயிரமுத்துவின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை, மகாஜனக் கல்லூரி), கனகசபாபதி (இ.போ.ச. யாழ்ப்பாணம்), அகிலாண்டநாயகி, இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற லிகிதர்), கமலாம்பிகை, காலஞ் சென்ற இலக்மனேஸ்வரன், யோகேஸ்வரன் (அம்பனை முருகன் கமக்களஞ்சியர், லோகநாயகி (விக்ஸ் அட்வட்டைசிங் கம்பனி, கொழும்பு), விக்கினேஸ்வரி, விக்கினேஸ்வரன் (லண்டன்), கார்த்திகேயன் (பொறியியலாளர், நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயாரும், இளைய தம்பி பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம், ஏரம்பமூர்த்தி, கதிர்காமத்தம்பி, அருட்சோதி, சிவனேஸ்வரன், சகுந்தலாதேவி, உமா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3.4.98 வெள்ளிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கதிர்காமத்தம்பி (சிங்கம்)
(மருமகன்)

பொன்னையாலேன்,
கொக்குவில். (54617)

---

திருமதி
## இராசம்மா பொன்னையா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா பொன்னையா 02.04.98 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் பராசக்தி (இளைப்பாறிய தொலைக் கல்விச் சிரேஷ்ட போதானாசிரியர், மருதனார்மடம்) ஞானசக்தி, துரையப்பா (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) நாகரட்ணம் (யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) தவராஜா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் கனகராஜேஸ்வரன் (இளைப்பாறிய மருந்தாளர், மக்லீட் வைத்தியசாலை, இணுவில்) குணரட்ணம் (இளைப்பாறிய துறைமுக உத்தியோகஸ்தர்) சரஸ்வதி சிவஞானராஜா (இ.போ.ச காரைநகர்ச்சாலை) இரஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதிலா (சைவமங்கையர் கழகம், கொழும்பு) கோபிராஜ் (யா/ யூனியன் கல்லூரி) புவிராஜ் (சண்டிலிப்பாய் வடக்கு யா / தமிழ்க் கலவன் பாடசாலை) தரணிதரன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) சிவறதன், சிவறதனி (யா/சைவசன் மார்க்க வித்தியாசாலை, ஏழாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை 03. 04. 98 அன்று நுகேகொடையில் நடைபெற்றன.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சி. சிவஞானராஜா
(மருமகன்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம். (54625)

---

# குருபூசையும் நூல் வெளியீடும்

யாழ். திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவரின் குருபூசையும், பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினத்தால் எழுதப்பட்ட அவரது வரலாற்று நூல் வெளியீடும் நாளை காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற இருக்கின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபைத் தலைவர் ஆ. மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுரை, பிள்ளைக்கவி வ. சிவராசசிங்கத்தின் வெளியீட்டுரை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணனின் ஆய்வுரை ஆகியன இடம்பெறும். (உ-3)

## கூட்டம்

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலின் நிர்வாக சபையின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலில் நடைபெறும். (இ-4)

★ ★ ★

சாவகச்சேரிகல்விக் கோட்டத்துக்குட்பட்ட அதிபர்கள், முதன்மை ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர்கல்லூரியில் நடைபெறும்.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாக கோட்டக் கல்வி அலுவலர் தெரிவித்துள்ளார். (உ-3)


யாழ்.
**றீகல்** வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
கார்த்திக், ரம்பா, கவுண்டமணி, செந்தில், மணிவண்ணன்
நடித்த
**உள்ளத்தை அள்ளித்தா**
அடுத்த வெளியீடு
**காதலுக்கு மரியாதை**
தினசரி:- 10-30, 2-30
தொ.பே.இ. 021 - 2999
(54597)

நெல்லியடி
**மஹாத்மா**
வெண் திரையில்
இன்று முதல்
மோகன் - கார்த்திக்
ரேவதி
நடித்த
**மௌனராகம்**
காட்சிகள் 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
காலை 10-30
எம்.ஜி.ஆர். நடித்த
**படகோட்டி**
மாலை 2-30
**மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்**
தொலைபேசி இல. 070-212223
(54347)


---

# புதுவருடத்தை ஒட்டிய நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 4
புதுவருடத்தை ஒட்டி நடத்தப்படும் 'நல்லெண்ணத்துக்கும் மற்றும் உறுதிக்குமான' நிகழ்ச்சிகளில்பல்வேறு போட்டிகள் இன்று நடைபெறவிருக்கின்றன.

இன்று காலை 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் வீதியோட்டப்போட்டி நடைபெறும்.

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் — ஆண், பெண் பிரிவுகளுக்கான — கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இன்று பிற்பகல் 3. 00 மணி முதல் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொள்வார்.

இதேவேளை யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும். யாழ். பல்கலைக்கழக வலைப்பந்தாட்ட ஆடுகளத்தில் நடைபெறும் இப்போட்டிகள் நாளையும் தொடர்ந்து இடம்பெறும். இச்சுற்றுப் போட்டியில் ஒன்பது கழக அணிகள் பங்கு பற்றுகின்றன.

இதே சமயம் —

புதுவருடத்தை ஒட்டிய சைக்கிளோட்டப் போட்டி நாளை காலை நடைபெறவுள்ளது.

சைக்கிளோட்டப் போட்டியில் பங்குபற்றும் ஆண் — பெண் போட்டியாளர்கள் நாளை காலை 7.00 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்குக்கு சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் —

விவசாய, பனை, தென்னை வள, கைப்பணி, சிறு கைத்தொழில் கண்காட்சி நாளை யாழ். புனித சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயத்தில் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட விவசாயிகளின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும் விவசாயப் பொருட்காட்சியில் யாழ். மாவட்ட விவசாய உற்பத்திப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்படும் என்று உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) த. சிவலோகநாதன் தெரிவித்தார்.

இக் கண்காட்சியில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காட்சியும் இடம்பெறும் என்று பனை, தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பல்துறை சார்ந்த உற்பத்திப் பொருள்கள் இக் கண்காட்சியில் வைக்கப்படும். (உ-3)

## தேடுதல்

சுதுமலை, ஏப். 4
பண்டத்தரிப்புப் பகுதியிலும் சுதுமலை மதவடிப் பகுதியிலும் படையினர் நேற்று தேடுதல் நடத்தினர். (இ-139)

## சமய நிகழ்வில்

நவாலி, ஏப். 4
அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை காலை 7.00 மணி முதல் ஸ்ரீ ராம நவமி விழா இடம்பெறும். (ஐ-30-100)

---

# மரண அறிவித்தல்கள்

## கணேஸ் கோபாலசாமி

(முன்னாள் கணக்காளர், அளவெட்டி — மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்)

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸில் தற்சமயம் வசித்து வந்தவருமான கணேஸ் கோபாலசாமி 28 - 3 - 98 பிரான்ஸில் காலமானார்.

அன்னார் விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், குகநேசன், வசந்தராணி, சிவநேசன், ஜெபநேசன், மீரா, மாதநேசன், வைகுந்தநேசன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை (6 - 4 – 98) பிரான்ஸில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
உறவினர்

இணுவில். (சி/3328)

---

## வைரமுத்து நடராசா

யாழ். நாயன்மார்கட்டைச் சேர்ந்த வைரமுத்து நடராசா 2-4-98 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், திரு. ந. கருணாகரன் (C.E.B. (S.C) Colombo), கி. கலாநிதி (ஜேர்மனி), ந. சத்தியாகரன் (சுவிஸ்), காலஞ்சென்ற ந. உமாகரன், ந. சுதாகரன் (சுதாஸ் போட்டோ), ந. ஸ்ரீகரன் (பிரான்ஸ்), ந. ரஜனிராஜ் (யா/ நா. ம. வித்தியாசாலை), ந. அனித்தா (யா/க. ம. ம. வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கு. கிருபாகரனின் (ஜேர்மனி) மாமனாரும், காலஞ்சென்ற திருமதி ப. தங்கச்சியம்மா, திருமதி கு. இராசபூரணம், திரு. வை. வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், கோப்பாய் கந்தவேள் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கு. சகானாவின் (ஜேர்மனி) பேரனும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (4 - 4 – 98) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புதிய நேரம் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திரு. வை. வேலாயுதபிள்ளை

77/1, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (54645)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்குடுதீவுப் பகுதியில் நிலை கொண்டுள்ள புலிகளால் படைத்தரப்புக்கு இக்கட்டு நிலை!

யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து பாதுகாப்பு வட்டாரங்கள் சிரத்தையும், கவலையும் கொள்ளத் தொடங்கியிருப்பதாகத் தெரிய வருகின்றது.

யாழ்ப்பாணத்துக்குள் புலிகள் அதிக எண்ணிக்கையில் ஊடுருவியிருப்பதாகவும்—

அரசுக்கு சமாந்தரமாக— நிர்வாகக் கட்டமைப்பு மீது— தமது கட்டுப்பாட்டையும் ஆதிக்கத்தையும் பேணுவதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும்—

படையினருக்கு உளவுத் தகவல்கள் கிடைத்திருப்பதாக உயர்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த உளவுத் தகவல்களை வைத்துக்கொண்டு பதில் நடவடிக்கைகளை படைத்தரப்பு ஆரம்பித்திருப்பதையே இது விடயம் தொடர்பாக முப்படைகளின் பலாலித் தலைமையகம் இவ்வாரம் விடுத்த பத்திரிகை அறிக்கைகள் கோடிகாட்டுகின்றன.

கடந்த ஞாயிறன்று அதிகாலை நாவற்குழிப் பகுதியில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய் மாலையில் குளப்பிட்டிக்கு அருகிலும்—

புதன்கிழமை காலை விளான் பகுதியிலும்—

படையினர் மீது தாம் நடத்திய கிளைமோர் தாக்குதல்களின் போது ஆறு படையினர் உயிரிழந்ததாகவும், எட்டுப் படையினர் காயமடைந்ததாகவும் புலிகள் அறிவித்துள்ளனர்.

குளப்பிட்டிக்கு அருகில் நடந்த சம்பவத்தின் போது தாங்கள் புலிகள் வைத்த பொறியில் சிக்கியதை படையின் மூத்த அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டார்.

''அப்பகுதியில் அதுவரை காலமும் நிலை கொண்டிருந்த துருப்புக்கள், அவ்வேளை வடமராட்சி கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட — மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான — இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றுவதற்காக அங்கு அனுப்பப்பட்டிருந்தனர். அதனால் சம்பவம் நடந்த பிரதேசத்தில் புதிய துருப்புகள் அனுப்பப்பட்டிருந்தன. அத் துருப்புகளுக்கு அப்பிரதேச புவியியல் நிலைமைகள் தெரிந்திருக்கவில்லை; சூழலும் புரிந்திருக்கவில்லை. இந்நிலையில் இருள் கவியும் வேளையில் — ஒரு பிரதேசத்தில் புலிகள் கிளைமோர் கண்ணிகளுடன் தாக்குதல்களுக்குத் தயாராக இருப்பதாக — ஒரு நபர் மூலம் படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. புலிகள் அனுப்பிய தகவல் இது என்பதைத் தெரிந்து கொள்ளாத துருப்புகள், தகவலில் குறிப்பிட்ட இடத்தை நோக்கி வேகமாக விரைந்தனர். ஆனால் அவர்கள் அப்பிரதேசத்தை எட்ட முன்னரே — இடைவழியில் — காத்து நின்ற புலிகள் முன்னேறிய படையினர் மீது கிளைமோர்த் தாக்குதலை நடத்தி அவர்களுக்குச் சேதத்தை ஏற்படுத்தினர் — என்று அந்த உயரதிகாரி மேலும் தகவல் வெளியீட்டார்.

புலிகளின் ஊடுருவல் குடாநாட்டில் அதிகரித்திருப்பது பற்றிய விடயம் கடந்த வாரமும் இதே பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை மிக 'ஸீரியஸாக' எடுத்திருக்கும் படைத் தரப்பு கடந்த வாரம் ஒரு பகிரங்க அறிக்கையை விடுத்திருக்கின்றது.

அந்த அறிக்கையில் — ''பாதுகாப்புப் படையினரின் எச்சரிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் மத்தியிலும் சிலர் புங்குடுதீவுக்குச் சென்று விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தூயவனைச் சந்தித்துள்ளனர்.

''இந்தச் சந்திப்பின் போது அவரிடம் இருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றதுடன் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கும் அவர்கள் இணக்கந் தெரிவித்துள்ளனர்.

''புலிகளுக்கு உதவுவதன் மூலமோ அல்லது புலிகளின் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதன் மூலமோ யாழ்ப்பாணத்தில் பிரச்சினையை உண்டாக்க வேண்டாம் என்று நாம் உங்களுக்கு ஆலோசனை தெரிவிக்கின்றோம்.

''புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்ற எமது அறிவுறுத்தலை மீறும் அரச ஊழியர்கள், வர்த்தகர்கள் மற்றும் ஏனையோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் பாதுகாப்புப் படையினருக்கு ஏற்பட்டுள்ளது'' — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அறிக்கை மூலம் யாழ்ப்பாண நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்கள் பின்வரும் தகவல்களை உறுதிப்படுத்தியிருக்கின்றன.

(i) புங்குடுதீவில் புலிகள் தாராளமாக இயங்குகின்றார்கள் அது. படைத்தரப்புக்கும் நன்கு தெரியும்.

(ii) படைத் தரப்பையும் மீறி சிலர் புலிகளின் பிரமுகர் தூயவனைச் சந்தித்துள்ளனர். அவரின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளுக்கு உதவவும் அவர்கள் இணங்கியுள்ளனர்.

**பாசுபதன்**

இந்த இரண்டு விடயங்களையும் பார்க்கும் போது புங்குடுதீவில் புலிகளைச் சந்திக்கும் பிரமுகர்கள் பற்றிய தகவல்களை படைத்தரப்பு திரட்டி வருகின்றது; அல்லது ஓரளவேனும் அறிந்துள்ளது என்பது தெரியவருகின்றது.

புங்குடுதீவில் புலிகள் தாராளமாக நடமாடுகின்றார்கள்; சுதந்திரமாகச் செயற்படுகின்றார்கள் என்பதை சுயாதீன செய்திகளும் ஊர்ஜிதப்படுத்துகின்றன.

அப்படியானால், புங்குடுதீவுக்குச் சென்று புலிகளைச் சந்திக்க முயலும் — அல்லது புலிகளினால் 'அழைக்கப்பட்டு' அதற்காக அவர்களைச் சந்திக்கச் செல்லும் — பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் படைத்தரப்பு— தானே நேரில் புங்குடுதீவுக்குச் சென்று அங்கு புலிகளை ஒடுக்கி, அவர்களின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தி வைக்கலாமே? அதைவிடுத்து பொது மக்களுக்கு மட்டும் எச்சரிக்கை விடுக்கும் வேலையை படைத்தரப்புச் செய்வது ஏன்? — என்ற கேள்விகள் இயல்பாகவே மக்கள் மத்தியில் எழுகின்றன.

அதற்கு காரணங்கள் இரண்டு.

(i) பரந்த புங்குடுதீவுப் பிரதேசத்தைப் பிடித்து கட்டுப்படுத்தி வைத்திருப்பது படையினருக்கு அவ்வளவு சுலபமானதல்ல; அதற்கு அளவுக்கு அதிக துருப்புகள் தேவை.

(ii) அப்படித் துருப்புகளை அங்கு முடக்கினாலும், அங்கிருந்து வெளியேறும் புலிகள் குடாநாட்டின் மற்றோர் இடத்துக்கு நகர்ந்து தமக்கு ''அலுப்புத்'' தருவார்கள் என்பது படைத்தரப்புக்கு நன்கு தெரியும்.

எனவே அதிலும் பார்க்க கேந்திர முக்கியத்துவம் அற்ற புங்குடுதீவை புலிகளிடம் தற்போதைக்கு விட்டு வைத்திருக்கலாம் என்று படைத்தரப்புக் கருதியிருக்கக் கூடும்.

எது எப்படி என்றாலும், யாழ். நகருக்கு சுமார் பதினைந்து மைல் தொலைவில் உள்ள ஓரிடத்தில் புலிகள் ஆறுதலாக இருந்து — பொதுமக்களைச் சந்தித்து— நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தளம் ஒன்றைப் பேணுகின்றனர் என்பது மட்டும் உண்மை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினர் முழு வல்லமையுடன் அரச ஆணையைச் செல்லுபடியாக்கி விட்டதாகக் கூறுவது ஏற்புடையதா என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

யாழ். நகரிலிருந்து வேலணை ஊடாகச் சென்றால் வேலணையின் முடிவில் வருவது வேலணைத்துறை. அங்கிருந்து சுமார் மூன்று மைல் (ஐந்து கிலோ மீற்றர்) தொலைவில் உள்ளது புங்குடுதீவு.

புங்குடுதீவையும் வேலணையையும் இணைக்கும் — சுமார் மூன்று மைல் நீளமான — 'வாணர் பாலம்' 1953 இல் அமைக்கப்பட்டது.

பாய்க்கப்பல் ஒன்றின் வடிவை ஒத்த புங்குடுதீவு 28.9 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை உடைய மிகப் பரந்த பிரதேசத்தைக் கொண்டது. கரையோரங்களில் பல வளைவு சுழிவுகள் காணப்படுகின்றன. கட்டடங்களும், வீடுகளும், கடல்களும், காணிகளுமாக விரிந்து பரந்து கிடக்கும் புங்குடுதீவின் மையப்பகுதி ஊடாக பிரதான வீதி செல்கின்றது. மடத்துவெளி, குறிஞ்சிக்காடு, ஆலடி, ஆஸ்பத்திரிச் சந்தி, சந்தையடி, பெருங்காடு, குறிகாட்டுவான் — சிறுப்பிட்டி ஆகியவை வழியாகச் செல்லும் இவ்வீதியின் இரு பக்கங்களிலும் பல நூற்றுக் கணக்கில் வீடுகளும், கட்டடங்களும், கோயில்களும் அமைந்துள்ளன.

வேலணையின் முடிவிடமான வேலணைத்துறையில் படையினரின் கடைசி தடை முகாம் உள்ளது. அதற்கு அப்பால் வாணர் பாலத்தைத் தாண்டி புங்குடுதீவுக்குள் நுழைந்தால், புங்குடுதீவின் நுழை வாயிலான மடத்து வெளியில் ஈ. பி. டி. பியினர் தமது முகாம் ஒன்றை அமைத்து வருவதைக் காணமுடியும். (இந்த முகாம்தான் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.)

அதற்கு அப்பால் புங்குடுதீவின் எந்தப் பகுதியிலும் படையினரின் நிலைகளோ, முகாம்களோ, நடமாட்டமோ ஏதுமில்லை.

அப்படி படையினரின் பிரசன்னத்தைப் பார்க்க வேண்டுமானால், புங்குடுதீவைத் தாண்டி குறிகாட்டுவானுக்குப் போனால் அங்கு கடற்படையினரைக் காண முடியும்,

ஆகவே புங்குடுதீவுப் பிரதேசம் படையினரின் நடமாட்டம் இன்றி — புலிகளின் கைகளில் — பரந்து கிடக்கின்றது.

புங்குடுதீவைக் கைப்பற்றுவதற்காக அல்லது அதை முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக இராணுவம் அங்கு செல்ல வேண்டுமானால் வேலணையில் இருந்து வேலணைத்துறை ஊடாக புங்குடுதீவை நோக்கி முன்னேற வேண்டியிருக்கும். அவ்வாறு நகரும் படை சுமார் ஐந்து கிலோ மீற்றர் நீளத்துக்கு கடலுக்கு குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் 'வாணர் பாலத்தை' தாண்ட வேண்டும்.

ஆனால் வேலணைத்துறையில் அத்தகைய நகர்வு ஆரம்பிக்கப்பட்டால்—ஐந்து கிலோ மீட்டருக்கு அப்பால் — புங்குடுதீவுப் பிரதேசம் ஆரம்பமாகும் மடத்து வெளியில் நின்று பார்க்கவே அத்தகைய நகர்வு தெரிந்துவிடும்; புங்குடுதீவில் இருக்கும் புலிகள் பாதுகாப்பான இடங்களுக்கு மாறிவிடுவர். அது கடல் வழியாக வன்னியாக இருக்கலாம். அல்லது பரந்த புங்குடுதீவுப் பிரதேசத்துக்குள்ளேயே பாதுகாப்பான மறைவிடமாக இருக்கலாம்.

எனவே எது எப்படியென்றாலும் பெரும்படை நகர்வு ஒன்றை மேற்கொள்வதன் மூலம் புங்குடுதீவில் நிலை கொண்டுள்ள புலிகளை துரத்திவிட முடியாது.

வேண்டுமானால் படை

(6ஆம் பக்கம் பார்க்க)

---

இரண்டொரு வாரங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள மூத்த அரச அதிகாரி ஒருவருக்கு மற்றொரு மூத்த இராணுவ அதிகாரி தொலைபேசி அழைப்பு எடுத்தார். சம்பந்தப்பட்ட அரச அதிகாரி அன்றைய தினம் 'லீவு' என்று பதில் வந்தது. வழமையான பாணியில் ''ஏன் சுகமில்லையா? எங்கு போனார்'' என்று கேட்டார் இராணுவ அதிகாரி. பதிலளித்தவர் சாதாரணமாகப் பேசியிருக்கலாம். அதைவிடுத்து தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பதற்றத்துடன் தடுமாறித் தடுமாறி ''கோயிலுக்குப் போயிருக்கின்றார்'' என்றார். அப்பதிலை 'ஸீரியஸாக' எடுக்காத இராணுவ அதிகாரி ''எந்தக் கோயிலுக்கு?'' என்று அடுத்த கேள்வியைப் போட்டார். பதிலளித்தவர் மீண்டும் தடுமாற்றத்துடன் ''நயினாதீவுக்கு!'' என்றார்.

அப்போதுதான் அந்த இராணுவ அதிகாரிக்கு பொறி தட்டியது போலும்.

''நயினாதீவுக்கா? எந்தப் பாதையால் சென்றார்?'' — என்று அடுத்த கேள்வி பிறந்தது.

பதிலளித்தவர் மீண்டும் தடுமாற்றத்துடன் ''குறிகாட்டுவான் பாதையால்'' என்றார். தொலைபேசியை வைத்த இராணுவ அதிகாரி, சம்பந்தப்பட்ட அரச அதிகாரி புங்குடுதீவில் தரித்து நின்றாரா? யாருடன் பேசினார்? என்பதையெல்லாம் அறிய பல்வேறு முயற்சிகளை எடுத்தார் எனத் தெரியவருகின்றது. ஆனாலும் பலன் பூஜ்யம்தான்.

சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் நேரில் கூட சாடை மாடையாகக் கேட்டுப்பார்த்தார்,

''நயினாதீவுக்கு கும்பிடப்போனேன்''—என்று கூறி ஒரே வெட்டாக வெட்டி விட்டார் அந்த அதிகாரி.

இப்போது அந்த அதிகாரி போன வாகனம் என்ன? யாருடன் போனார்? என்பதை எல்லாம் அறிய சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரி பல பக்கங்களிலும் முயற்சித்து வருவதாகத் தெரிகின்றது.

இதற்கிடையில் புங்குடுதீவில் புலிகளின் செயற்பாடு பற்றிய தகவல்கள் வெளியானதை அடுத்து வேலணைத்துறையைத் தாண்டிச் செல்லும் ஆள்களை படைத்தரப்பும் அதன் உளவுப் பிரிவும் அதிக நோட்டமிடத் தொடங்கியிருப்பதாகவும் தெரிகிறது.

கடந்த முதலாம் திகதி நயினாதீவு கும்பாபிஷேகம். அதனைச் சாட்டாக வைத்து போகும் வழியில் புலிகளையும் தரிசிக்க யாழ். பிரமுகர்கள் முயற்சிக்கலாம் என்று கருதி நயினாதீவுக்குச் சென்ற பக்தர்கள் மீது படைத்தரப்பு ஒரு கண் வைத்திருந்ததாகவும் தகவல். யாழ்ப்பாண மக்கள் ''பக்த கோடிகள்'' அல்லவா? படையினரின் கண்ணைச் சுழித்தார்களோ தெரியவில்லை.

புங்குடுதீவு விவகாரத்தில் படைத்தரப்புக்கு மற்றொரு பிரச்சினை.

குடாநாட்டில் அரசஅதிபர் தொடங்கி பல்கலைக் கழகத் துணைவேந்தர், பதிவாளர், கல்வி அதிகாரிகள் என திணைக்களத் தலைவர்கள் வரை — சாதாரண வர்த்தகர்கள் தொடக்கம் பெரிய 'பிஸ்னஸ்' முதலைகள் வரை— பலரும் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்களே! அவர்கள் தமது சொந்த இடத்துக்குப் போவதாக கூறிக் கொண்டு தீவகத்துக்குச் சென்றால் அதை எப்படி மறிப்பது? அப்படிப் போனவர்களில் எத்தனை பேர் புலிகள் தரிசனம் செய்தனர்என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? —படைத்தரப்புக்கு தலையிடி தரும் விடயங்கள் இவை. ★



# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மலிவு விலையில் முட்டை இடும் வெள்ளை சிவப்பு புதுக்கோழிகளும், இறைச்சிக் கோழிகளும் Kg 130/- விற்பனைக்கு உண்டு. (தின சரி காலை 9 – 12 வரையும் மாலை 4 – 6 வரையும்) தொடர்பு: பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். [54549]

### தவறிவிட்டது

சி. பஞ்சலிங்கம் என்பவருடைய 430041667V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் தாவடிச் சந்திக்கும், கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மஞ்சவனப்பதி முருகன் ஆலய காரியாலயத்தில் ஒப்படைக்கவும். [50017]

சு. நிர்மலாதேவி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (725694334V) சாவகச்சேரி பஸ் வண்டியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுகுமார். வர்த்தகவங்கி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்து உதவவும். [54593]

அரசகுலசிங்கம் தனலட்சுமி (கல்வளை, சண்டிலிப்பாய்)என்பவரது 246731225V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை ஆஸ்பத்திரி வீதிக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். கல்வளை, சண்டிலிப்பாய். [54610]

### மணமகள் தேவை

இந்து, 32 வயது, உத்தரம் 4 ஆம் பாதம் செவ்வாய்க் குற்றமற்ற என்ஜினியருக்கு மணமகள்தேவை. தொடர்பு: செ. கந்தசாமி, கண்ணன் ஸ்ரோர்ஸ், மீசாலைவடக்கு, கொடிகாமம். [சி/3280]

### சோதிடம்

மகாதேவா சோதிட சனி மாற்றப் புத்தகம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூபா 15 பெறுமதியான முத்திரை அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். [50016]

### (O/L) MATHS

ஆண்டு – 6 இலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. [54548]

### திருத்த வேண்டுமா?

ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி. வி. அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம், (B.Sc. Ceylon, Dip. In Electronic Engineering London), 284, ஸ்ரான்லிவீதி, (நாக விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3294]

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் B. Sc Ceylon Dip. In Electronic Engineering London 284, ஸ்ரான்லி வீதி (நாக விகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

---

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

எதிர்வரும் **05 - 04 - 98** ஞாயிற்றுக்கிழமை காலை **10** மணிக்கு யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறும். இக் கூட்டத்திற்கு பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் யாவரும் தவறாது சமுகந்தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

(54517)

---

குளப்பிட்டிச் சந்தியில்!

## மகாணந்த வாசா

## உள்ளூர், சர்வதேச நேரடி தொலைபேசிச் சேவை

இங்கிருந்து நேரடி அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும், வெளிநாட்டிலிருந்து எமது இலக்கங்கள் ஊடாக அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

தொலைபேசி இல. 070 – 212216
குளப்பிட்டிச் சந்தி
(கொக்குவில் தபாலகம் முன்னால்)

(50020)

---

## அஜந்தாஸ் ஸ்ரூடியோ

★ பாடசாலைப் பிள்ளைகளின் அறிமுக அட்டை

★ தேசிய அடையாள அட்டை
என்பன துரிதகெதியில் எடுத்துக் கொடுக்கப்படுகின்றன.

★ கடந்த மூன்று மாதத்திற்குட்பட்ட சகல கலர்ப் படங்களும் வந்துள்ளன. உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். சிரமத்திற்கு வருந்துகின்றோம்.

**அஜந்தாஸ் ஸ்ரூடியோ**
வதிரி — நெல்லியடி

(54572)

---

உ
சிவமயம்
ஆனைக்கோட்டை

## மூத்தநயினார் கோயில் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

காலம்:- 05 - 04 - 1998 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3 – 30 மணி
இடம்:- மூத்த நயினார் கோயில் மண்டபம்

நிகழ்ச்சிகள்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் முன்னுரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. ஆலய வளர்ச்சிக்கான ஆலோசனைகள்
6. புதிய நிர்வாகசபைத் தெரிவு
7. நன்றியுரை
8. கடவுள் வணக்கம்.

பொதுச் சபை உறுப்பினர்களைத் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டிக்கொள்கின்றோம்,

செயலாளர்,
ஆலயநிர்வாக சபை

(50018)

---

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்.

மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை – 2 (பங்குனி)
நடைபெற்ற பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற

**மாணவர்கள் விவரம்**

| | | |
|---|---|---|
| ஆண்டு 6 | T. கார்த்திகா | J/V/G/C |
| ஆண்டு 7 | Y. துளசிகா | J/L/C |
| ஆண்டு 8 | T. துஸ்யந்தன் | J/St/J/C |
| ஆண்டு 9 | T. ரஜீவன் | J/H/C |
| ஆண்டு 10 | G. மயூரன் | J/C/C |
| ஆண்டு 11 | A. கெடின்சன் | J/C/C |
| ஆண்டு 11 Day | S. சுதேஷ் | — |

**O/L DAY CLASS** புதிய பிரிவுகள்
ஆரம்பம்: 06-04-98 8.00 – 2.00 p.m.

---

## பாதிப்புற்றோர் ஒன்று கூடல்

ஆசிரிய நியமனத்தில் உரிய வெட்டுப் புள்ளிகளைப் பெற்று வதிவிட வேறுபாடுகளால் பாதிப்புற்றோர்களுக்கான ஒன்று கூடல் இன்று 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 – 30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர். (அ–30)

---

## கண்ணீர்ப் பூக்கள்

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராக இருந்து கடமையின் சிகரமாக குறுகிய காலத்தில் தன்சேவையால் எல்லோர் மனதையும் வென்று நின்ற

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்களின் திடீர் மறைவு எம்மை மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவுத்துயரில் தவிக்கும் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/ அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை
அல்லைப்பிட்டி,

(54585)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம்
வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளரும்,
எமது சக ஆசிரியையின் மைத்துனருமாகிய

அமரர்

**சு. இரத்தினராசா**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ வண். நாவலர் மகாவித்தியாலயம்,
யாழ்ப்பாணம், (54603)

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் வலயம் – 1 இன்
கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் அமரத்துவம் எய்தியதையிட்டு நாம் அதிர்ச்சியடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.


அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/ கந்தர்மடம்
சைவப்பிரகாச வித்தியாலயம்.

(54606)

---

## 28 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 23 — 01 — 1949



மறைவு: 08 — 03 — 1998

**சபாபதிப்பிள்ளை யோகரட்ணம்**

அண்ணா என்றே அழைக்கின்றோம்
ஆனாலும் உந்தன் ஆசைமுகம்
பேசமறுத்து அடங்கிப் போனதே
அந்தப் பங்குனி எட்டினிலே!
எங்களுக்கு தாயாய் தந்தையாய்
இருந்த நீவிர் எம்மைத்
தவிக்க விட்டு ஏனோ
விண்ணுலகை எய்தினீரோ?

அன்னாரின் பிரிவால் துயருறும்

அக்கா ஜெயராணி திருநாவுக்கரசு (மன்னார்),
தம்பி மகேந்திரராசா ராஜகுலநாயகி (ஜேர்மனி,
தங்கைகள் புஸ்பமலர், விஜயலக்ஷ்மி (மல்லாகம்),
கமலாம்பிகை - தனபாலசிங்கம் (சுவிஸ்)

புகையிரத நிலையம் அருகில்,
மல்லாகம்.

(54600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவெட்டி

# கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய உபயகாரர் கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்த மகோற்சவம் மற்றும் திருப்பணி வேலைகள் பற்றி ஆலோசிப்பதற்கான கூட்டம் ஆலய மண்டபத்தில் **10 - 04 - 98** வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். அனைத்து உபயகாரர்களையும், வழிபடுவோரையும் வந்து ஆலோசனை கலக்குமாறு அன்பாக அழைக்கின்றோம்.

நன்றி.

தர்மகர்த்தா சபையினர்
கும்பழாவளை,
அளவெட்டி.

(54599)

# இதய அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம்
வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர்

## அமரர் சு. இரத்தினராசா

அவர்கள் கல்வியில் முத்து, கடமையில் இரத்தினம், கண்காணிப்பில் வைரம் போன்று உழைத்து இறை பதம் அடைந்தமையைக் கேட்டு அதிர்ச்சியடைந் தோம். அவருக்கும், அவரது பிரிவால் துயருறும் குடும் பத்தினருக்கும் எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக் கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
நிர்வாக உதவியாளர், சிற்றூழியர்,
மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை.

யா/ உசன் இராமநாதன் (ம. வி)
மிருசுவில்.

(55612)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 — 03 — 1919

மறைவு: 16 — 03 — 1997

## அமரர் ச. நாகரத்தினம்

(முன்னாள் உப அதிபர்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்)

திதி: **04 — 04 — 1998**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வமாகி விட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சந்தி!

பிரிவால் துயருறும்
-குடும்பத்தினர்

432, கே. கே. எஸ், வீதி,
யாழ்ப்பாணம்.

(54570)

# தவக்கால சிந்தனை

(39 ஆம் நாள்)

'ஒருவர் மற்றவருக்காக' என்றநிலையில் தூயஅன்பு பிறக்கின்றது என்கிறார் கள். இதனை இன்றைய நிலையில் அன்பின் அர்த் தம் பற்றிபலரிடம் கேட்ட போது, எல்லோரும் ஏதோ இருப்பைக் கொண்டு வர வைக் கொண்டு, பெரு மையைக் கொண்டே அன் புக்கு அடையாளம் இடு கின்றார்கள். ஒருவர் மற்ற வருக்காக என்பதிலும் இன்று சுத்தமான சுய நலம் இருப்பதாக உளவிய லாளர்ஒருவர்குறிப்பிடுகின் றார்.

இறை கோணத்தில் நோக்கும் போது, இயேசு வைக் கொலைக்காகத் தேடுகின்றார்கள். அக்கூட் டத்தின் தலைவன் கைப் பாஸ் கூறுகின்றான். ''உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. நம் இனம் முழுவதுமேஇறந்துபோகா தபடி ஒருவன் மட்டும் இறப்பது நலம் என்பதை நீங்கள்உணரவில்லையே'' என்ற செய்தியை அதன் மூலம் சிதறிய மக்களின் சீரானவாழ்வுக்கு தன்னை பலியாக்க முன்வரும்இறை இயேசுவின் வாழ்வைச்சிந் தித்துப் பாருங்கள்.

ஒருவன்மற்றவருக்காகத் தன்னை கையளிக்க முன் வரும் செயலே தூய அன் பின் அடையாளமாகியது. இதுவே 2000 ஆம் ஆண்டி லும் உயிர்வாழும் கிறிஸ் தவமாகியது. அதில் நீ ஒரு அங்கமானால் உன்னை மற்றவருக்காகஅர்ப்பணிப் பதில் உன்நிலை என்ன?

—யோசப் பாலா

# ஆசிரியர் சங்கம் கலந்துரையாடும்

இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கத்தின் தூதுக்குழு வடக்கு — கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு, விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவக லாலாவை இன்று சனிக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு சுண்டுக்குளி வஸ்தியான் சந்தி யில் அமைந்துள்ள யாழ். செயலக புனர்வாழ்வு புனருத் தாரண பணிமனை விடுதியில் சந்தித்து யாழ். மாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை கள் தொடர்பாக கலந்துரை யாடவுள்ளது.

இச்சந்திப்பின்போது செய லாளருடன் சங்கத்தின் ஊடாக பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவோர் அன்று குறிப்பிட்ட இடத்துக்கு வருகைதருமாறு இ. த. ஆ. சங்கத்தின் சிரேஷ்ட துணை பொதுச்செயலாளர் த. பஞ் சலிங்கம் அழைப்பு விடுத்துள் ளார். (இ)

# சமுர்த்தி பணியாளருக்கு 2 மாதச் சம்பளம் இல்லை

சுன்னாகம், ஏப்ரல் 4

யாழ். மாவட்டத்தின் வலி காமம், தென்மராட்சி, தீவ கப் பகுதிகளில் தெரிவு செய் யப்பட்ட சமுர்த்தி உத்தி யோகஸ்தர்களுக்கு கடந்த இரண்டு மாதகாலமாக சம் பளமேதும் வழங்கப்பட வில்லை. இவர்களுக்கான சம் பளம்குறித்த அறிவுறுத்தல் களும் வழங்கப்படவில்லை.

அரசாங்க அதிபரால் வழங் கப்பட்ட நியமனக் கடிதத் தில் உத்தியோக பூர்வ நிய மனக் கடிதம் வழங்கப்படு மென அறிவிக்கப்பட்ட போதும், இதுவரை அக்கடி தம் வழங்கப்படவில்லை.

இதேவேளை, இவர்களுக் கான கடமைப் பொறுப்பு கள் அறிவிக்கப்படாத நிலை யில், ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் வெவ் வேறு வகைப்பட்ட பணி களைஇவர்கள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(ஐ—27)

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கண்காட்சி

05 — 04 — 1998 ஞாயிறு

இடம்: யாழ்/ புனித சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்

நேரம்: காலை 9-30 மணி முதல் மாலை 4-30 மணி வரை

இத்துறை சார்ந்தோரையும், அனைத்துக் கூட் டுறவாளர்களையும், ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கூ. அ. உ. ஆணையாளர்
(ப. தெ. வளம்)
யாழ். மாவட்டம்.

(சி/3318)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சு. இரத்தினராசா

(கல்விப்பணிப்பாளர் வலயம் 1)

அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த் திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/ கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

(54618)

# கண்ணீர் அஞ்சலி

ஒரு நண்பனாக, சகோதரனாக, மனிதநேயமுள்ள கனவானாக வாழ்ந்த எமது கல்விப்பணிப்பாளர்

## அமரர் சு. இரத்தினராசா

அவர்களின் மறைவினால் ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர், கல்விப்புலத்திலுள்ளோர் சகலரின் துயரில் நாமும் உரிமையுடன் பங்கேற்கிறோம்.

பருத்தித்துறை
கல்விக்கோட்ட அலுவலர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(சி/3321)


# ரிப்ரொப் இன்டர் நஷனல் பிரைவேட் கம்பனியினரின் பூட்டு மார்க் கைலிகளின்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாக **த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்** ஸ்தாபனத்தினரை நியமித்துள்ளோம் என்பதனை வடமாகாண வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது தயாரிப்புக்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்:

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

42, 44, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 – 2985

தற்காலிக முகவரி: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(54511)

# வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

❖ நங்கையர்க்கேற்ற புதிய சாறி வகைகள் ❖ ஸ்கேட் அன் பிளவுஸ், ❖ கவுண் வகைகள்
❖ சிறுவர்க்கேற்ற பேபிசூட் ❖ ஆடவர்களுக்கேற்ற ரவுசர்கள் ❖ சேட் ❖ ரீ சேட் வகைகளையும்
மற்றும் துணிவகைகள் அனைத்தையும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.

அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!! இச்சலுகை சில தினங்களுக்கு மட்டுமே!!!

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(54614)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள் திருட்டு சந்தேகநபரின் பிணை மனு நீதிவானால் மறுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

சைக்கிள் திருட்டு தொடர்பாக யாழ். பொலிஸ் நிலைய பொலிஸாரினால் யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவரின் பிணைமனுவை நீதிவான் நிராகரித்தார்.

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற சைக்கிள் திருட்டுத் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இராஜகாரியர் துரைராஜா என்பவரை பிணையில் விடுமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

இவரைப் பிணையில் விடுவதற்கு பொலிஸார் கடும் ஆட்சேபனை தெரிவித்ததுடன் மேலும் பல சைக்கிள் திருட்டுகள் தொடர்பாக இவர் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று நீதிவானிடம் தெரிவித்தனர்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிவான் பி. பாலச்சந்திரன் குறிக்கப்பட்ட நபரை இம்மாதம் 3 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்திருக்குமாறு உத்தரவிட்டார்.

(இ-5)

## கலைவிழா ரத்து

யாழ்ப்பாணம், ஏப். 4

வட இலங்கைச் சங்கீத சபை நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்த இருந்த கலை விழா கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசாவின் மறைவு காரணமாக ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

# புங்குடுதீவுப் பகுதியில்...

(3 ஆம் பக்கத் தொடர்)

யினர் அங்கு தொடர்ந்து நிலைகொண்டு, பிரசன்னமாக இருப்பதன் மூலம் அப்பிரதேசத்தில் புலிகளின் சுதந்திர செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஆனால் புங்குடுதீவு போன்ற பரந்த பிரதேசத்தில் பாதுகாப்புடன் நிலைகொள்வதாயின் குறைந்தது ஒரு பிரிகேட் அணி துருப்புக்களையாவது அங்கு நிறுத்த வேண்டியிருக்கும்.

வன்னி இராணுவ நடவடிக்கைக்காகவும் நாட்டின் பல முனைகளிலும் திறக்கப்பட்டுள்ள யுத்த செயற்பாடுகளினாலும் ஏற்கனவே பெரும் படையணிப்பற்றாக் குறையை எதிர்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா படைத்தரப்புக்கு புங்குடுதீவில் மேலும் ஒரு பிரிகேட் அணியை முடக்குவது என்பது இயலாததாகவே இருக்கும்.

தேவையானால் அவ்வப்போது புங்குடுதீவுக்கு படைகளுடன் நகர்ந்து ஓரிரண்டு நாள்கள் நிலைகொண்டு புலிகளைத் துரத்திவிட்டு, யாழ்ப்பாணத்துக்கு மீளலாம். ஆனால் படையினர் வாபஸானதும் புலிகள் மீண்டும் வந்துவிடுவதை படைகளால் தடுக்க முடியாமல் இருக்கும்.

★ ★ ★

### கொழும்பு தேடுதல்களுக்கு காரணம்

நாட்டின் பல பகுதிகளிலும் ஒரே நேரத்தில் யுத்த முனைகளைத் திறக்க புலிகள் முடிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று இராணுவ உளவுத் தகவல்கள் கூறியுள்ளனவாம்.

வன்னியில் யுத்தம் நடக்கின்றது. குடாநாட்டிலும் புலிகளின் பிரசன்னம், ஊடுருவல் அதிகரித்து வருகின்றது. கிழக்கில் புலிகள் பல தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். மலையகத்திலும் புலிகளின் ஊடுருவல் தீவிரமாக இருப்பதாகத் தகவல்.

இது தவிர, கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தி, ஒரேநேரத்தில் பல யுத்த முனைகளைத் திறக்க புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக —

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் ஒரே சமயத்தில் பல தாக்குதல்களை நடத்துவதற்காக —

விசேட பயிற்சி பெற்ற — தற்கொலைத் தாக்குதல் அணியைச் சேர்ந்த — ஆண்கள், பெண்களை உள்ளடக்கிய — சுமார் இருநூறு பேரைக் கொண்ட அணியை கொழும்புக்கும் மற்றும் பல்வேறு இடங்களுக்கும் புலிகள் அனுப்பி வைத்திருப்பதாக உளவுத் தகவல்கள் தெரிவித்துள்ளனவாம்.

இத்தகவல்களின் அடிப்படையிலேயே —

இவ்வாரம் முழுவதும் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் நள்ளிரவு முதல் அதிகாலை வரை பல இடங்களிலும் பெருத்த எடுப்பில் சுற்றிவளைப்பு, தேடுதல் நடத்தப்படுகின்றது என ஊகிக்கப்படுகின்றது.

★ ★ ★

### இங்கும் பெண் கடத்தல்!

இராணுவத் தளபதியின் வாகன அணியில் வழக்கமாக இடம்பெறும் 'லாண்ட் றோவர்' வாகனம் ஒன்று அண்மையில் இராணுவத் தலைமையகத்தின் வாசலில் உள்ள இராணுவத் தடைகளைத் தாண்டி உள்ளே செல்ல வந்தது. வாசலில் காவலுக்கு நின்ற இராணுவப் பொலீஸ் பிரிவு சிப்பாய் ஒருவர் வழக்கத்துக்கு மாறாக வாகனத்தை சோதனை போடுவதற்காக எட்டிப் பார்த்தார்; அவருக்கு பேரதிர்ச்சி.

லாண்ட் றோவரின் கீழ் தட்டுப் பகுதியில் ஓர் இளம் பெண்ணை படுக்க வைத்து உள்ளே 'கடத்துவதற்கு' எடுக்கப்பட்ட முயற்சி அம்பலத்துக்கு வந்தது.

ஏன் உள்ளே கடத்த முயன்றார்கள் என்ற விடயம் வாசகர்களின் ஊகத்துக்கு.

இது விடயமாக இராணுவ சார்ஜண்ட் ஒருவர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். உயர்மட்ட விசாரணைகள் நடைபெறுகின்றன.

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### வைத்தீஸ்வரா வாழி!

செத்தார்தம் எலும்பணிந்து திரிவாய் வாழி
திகம்பரனாய்த் திகழொளியாய்த் திகழ்வாய் வாழி
சித்தாய வேடத்தாற் சிறந்தாய் வாழி
சிரித்தெல்லாஞ் செயலிழக்கச் செய்வாய் வாழி
பத்தாகிய தொண்டர் தொழு பதத்தாய் வாழி
பரமபதம் எவ்வுயிர்க்கும் பயப்பாய் வாழி
மத்தாலெழு விடமுண்டுயர் மகிபா வாழி
வண்ணைவைத் தீஸ்வரா வாழி! வாழி!

- ச. தங்கமாமயிலோன்

(இன்று சனிக்கிழமை — பதின்மூன்றாம் திருவிழா)

## இரங்கற் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 4

''காலைக்கதிர்'' நிறுவனமும், வடமாகாண பத்திரிகையாளர் சங்கமும் இணைந்து நடத்தும் மறைந்த பத்திரிகையாளர் காமினி நவரட்ணவின் இரங்கற் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில், வடமாகாண பத்திரிகையாளர் சங்கத் தலைவர் ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

# சிறுவர் உரிமை கருத்தரங்கு

யாழ்ப்பாணம் ஏப்.4

சிறுவர்கள் உரிமை சம்பந்தமான ஒரு முழுநாள் கருத்தரங்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

ஐ.நா. சிறுவர் உரிமைச் சாசனத்தையும், இலங்கைச் சிறுவர் பட்டயத்தையும் அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்தில் சிறுவர்கள் உரிமையை முன்னெடுத்துச் செல்வதற்கான முதன் முயற்சியாக இக்கருத்தரங்கு அமையும்.

யாழ். செயலகமும், யாழ். சிறுவர் பாதுகாப்பு நிதியமும் (ஐக்கிய இராச்சியம்) இணைந்து நடத்தும் இக்கருத்தரங்கில் கொழும்பில் இருந்தும் விசேட பிரதிநிதிகள் பங்குபற்றுவர் இப்பிரதேசத்தில் இருந்து பல்வேறு தரத்தினரும், அரச, அரச சார்பற்ற, சமூக நிறுவனங்களின் பிரதி நிதிகளும் விசேட அழைப்பின் பேரில் இக்கருத்தரங்கில் சமுகமளிக்க உள்ளனர். (அ)

# சிறுகதை தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 4

தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் 'மறுமலர்ச்சிக் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா நல்லை ஆதீன மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கலாநிதி செங்கைஆழியான் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சி. தில்லைநாதன் கலந்து கொள்வார்.

வடக்கு—கிழக்குமாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றுவார்.

மறுமலர்ச்சி எழுத்தாளர்களான அ. செ. முகாகானந்தம் (அ.செ.மு.) தி,ச. வரதராசன் (வரதர்) க. சொக்கலிங்கம் (சொக்கன்), சு. வேலுப்பிள்ளை (சு.வே.) தி. நடனசபாபதி (நடனம்) சு. இராசநாயகன் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்படுவர்.

விழாவின் இறுதியில் 'நூலுருப்பெற வேண்டிய ஆக்க விலக்கியங்கள்' என்ற தலைப்பில் கலை இலக்கிய கலந்துரையாடல் இடம்பெறும்.

(ஐ-ரீ)

# விசேஷ கூட்டம்

யாழ்ப்பபணம், ஏப். 4

யாழ். கைதானோர், காணாமல் போனோர் சங்கத்தின் விசேஷ கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 .30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள மேற்படி சங்கப்பணிமனையில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

# அதிரடி அரங்கு

'தோல் இருக்க சுளை விழுங்கும்' பிரகிருதிகள் பற்றிய தகவல் இது:—

கொழும்பு— யாழ்.விமான சேவையில் பயணம் செய்யும் பயணிகளின் 'சூட்கேஸ்'கள்' பொதிகள் போன்றவற்றுக்குள் இருக்கும் பொருள்கள் இடைவழியில் மாயமாக மறைகின்றனவாம்.

புறப்படும் விமான நிலையத்தில் 'சூட்கேஸ்களை', ஒப்படைத்து விட்டு, வந்து சேரும் விமான நிலையத்தில் அவற்றைப் பொறுப்பேற்று, வீட்டுக்குக் கொண்டு வந்து திறந்தால் உள்ளேயிருந்த பெறுமதியான உடுபுடைவைகள், பொருள்கள் மாயமாக மறைந்து போயிருக்கும். 'சூட்கேஸ்' அப்படியே இருக்க பொருள்களை அபகரிக்கும்— 'தோல் இருக்க சுளை விழுங்கும்'–பேர்வழிகள் யார்? யாரிடம் சென்று முறையிடுவது?— என்பதைத் தெரியாமல் விழிக்கின்றார்கள் பொதுமக்கள்.

பெரும்பாலும் பூட்டுப் போடப்படாத 'சூட்கேசுகள்', 'பாக்கு'கள் போன்றவற்றில்வரும் பொருள்களே மாயமாக மறைகின்றனவாம்.

பயணிகளிடம் மறைவில் கொள்ளையடிக்கும் கூட்டம் ஒரு புறமிருக்க, பட்டப்பகலில் பலபேர் முன்னிலையில் கைவரிசையைக் காட்டும் கோஷ்டி ஒன்று விளையாட்டுத் துறையில் புகுந்திருக்கின்றது.

பல நூற்றுக்கணக்கான ரசிகர்கள் மத்தியில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு வருகை தரும் இக்கோஷ்டி ஆட்டம் முடிந்து மத்தியஸ்தர் இறுதி விசில் ஊதும் போது ரசிகர் கூட்டத்துடன் கூட்டமாக மைதானத்துக்குள் இறங்கி, விளையாட்டுக்குப் பயன்படுத்திய உதைபந்தை நைசாகச் சுருட்டிக் கொண்டு மாயமாகிவிடுகின்றது.

அண்மையில் துரையப்பா விளையாட்டரங்கிலும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்திலும் நடைபெற்ற ஆட்டங்களில் கைவரிசையைக் காட்டியிருக்கின்றது இக் கோஷ்டி.

பெறுமதிமிக்க புதிய இரண்டு பந்துகளை உதைபந்தாட்டக்கழகம் ஒன்றும், யாழ்.பல்கலைக்கழகமும் இழந்து விட்டனவாம். இப்போது பந்துகளுக்கு கணக்குக் காட்டுவது எப்படி என்பது பொறுப்பான அலுவலகர்களுக்கு தலையிடியாக உள்ளதே.

★ ★ ★ ★

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் பலவற்றிலும் இப்போது கணனியில் கருமங்கள் ஆற்றப்படுகின்றன. தேவையான கணனிகள் சுமார் ஒரு வருடத்திற்கு முன்பே சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கு வந்து சேர்ந்துவிட்டன.

ஆனால் பிரதான பிரதேச செயலகமொன்றில் கணனிக்கென விசேட அறையொன்று கட்டப்பட்டு பல மாதங்களாகியும் கணனி மட்டும் இன்னும் வந்து சேரவில்லை!

கணனிக்கான விசேட அறையைக் கட்டுவதற்கு 1 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவானதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

கணனி இதோ வருகிறது, அதோ வருகிறது என்று சொல்லி அனேகமாக 2 மாதங்களுக்கு ஒரு முறை அந்த விசேட அறைக்கு வர்ணப்பூச்சு, மற்றும் ''வாணீஸ்'' அடிப்பு வேலைகளும் நடைபெறுவதைக் காண முடிகிறது.

கணனி மட்டும் வந்து சேர்வதில் ஏன் இவ்வளவு தாமதம் என்று விசாரித்ததில் அதனைக் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கென்று அதிகாரி ஒருவர் 3 தடவைகள் திணைக்களச் செலவில் கொழும்பு சென்று வந்தார் என்றும், ஆனால் கணனி வரவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

3 தடவை கொழும்பு சென்று வந்த செலவுப் பணத்தையும் சம்பந்தப்பட்ட அதிகாரி பெற்றுவிட்டார்.

அரசாங்க அதிகாரிகள் பலரினதும் குடும்பங்கள் கொழும்பிலும் அதிகாரிகள் யாழ்ப்பாணத்திலுமாகப் பணியாற்றுவது 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்குப் பின்னர் சர்வசாதாரணமாகி விட்டது. இதனால் அரசாங்க அலுவலின் நிமித்தம் சில அதிகாரிகள் கொழும்பு செல்லத் துடியாய்த் துடிப்பது தமது குடும்பங்களைப் பார்த்து வரவே என்று உள் விவகாரம் தெரிவிந்தவர்கள் சொல்கிறார்கள்!

இப்படிப் பார்த்தால் குறிப்பிட்ட பிரதேச செயலகத்துக்கு கணனி எப்போது வந்து சேருமென்று சொல்வதற்கில்லை என்று கைவிரிக்கப்படுகிறது!

★ ★ ★ ★

பிரபல பொருளியல் ஆசிரியர் வரதராஜன் கைது செய்யப்பட்டிருப்பது உயர்தர வகுப்பு மாணவர்களின் கல்வியுடன் தொடர்புடையவர்களிடையே பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உயர்தர வகுப்பு பொருளியல் மாணவர்களுக்கும், ஜி. ஏ. கியூ. (வெளிவாரி) மாணவருக்கும் அவரின் கைது பாதிப்பை ஏற்படுத்தும்.

1996 இல் கொழும்பில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட வரதராஜன் அதற்குப் பின்பு கிடைத்த புதிய தகவல்களின் அடிப்படையில் கொழும்பிலிருந்து வந்த விசேட புலனாய்வாளர்களினால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டிருப்பதாகவும், அவரது கைதுக்கும், யாழ். படையினருக்கும் தொடர்பு ஏதும் இல்லை என்றும் யாழ். படைவட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் வரதராஜனிலும், அவர் கல்வி போதிக்கும் 'ரியூசன்' நிலையங்களிலும் பொறாமை கொண்ட சிலர் எழுதிய 'மொட்டை பெட்டிஷனின்' அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருப்பதாக அவருடன் நெருக்கமான சிலர் கருத்து வெளியிட்டனர்.

'ரியூஷன்' நிலையங்களில் போட்டி காரணமாகவே ஓர் அப்பாவி ஆசிரியர் தடுப்புக் காவலில் இருக்கின்றார் என்பது உண்மையானால் அது கண்டிக்கத்தக்கது.

வரதராஜன் கைதுக்கு உண்மைக் காரணம் என்னவென்பதை படைத்தரப்பு அவரது மாணவர்களுக்கும், உறவினர்களுக்கும், ''ரியூசன்'' நிலையத்தினருக்கும் தெரியப்படுத்தினால் நல்லது.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையில் சலுகை!

ராகம்ஸ் பட்டுச்சோலையின்

# புதுவருட மலிவு விற்பனை

யாழ். நகரிலேயே பிரசித்திபெற்ற ராகம்ஸ் பட்டுச்சோலை

தனது வாடிக்கையாளர், நண்பர்கள், ஆதரவாளர்கள் நலன் கருதி புதுவருடத்திற்கென பிரத்தியேகமாக இறக்குமதிசெய்த

தரம்மிக்க, வர்ண வர்ண புத்தம்புதிய

அனைத்து ஜவுளிவகைகளும் 25% கழிவில் விற்பனை யாகிவருகின்றன. இச்சலுகை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையுமே. முந்துங்கள்! உங்கள் தெரிவுக்கு!!

ராகம்ஸ் பட்டுச்சோலை

24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி/3320)


## கலை, இலக்கியக் கலந்துரையாடலும் மறுமலர்ச்சிச் சிறுகதைகள் நூல்வெளியீடும்

வடக்கு – கிழக்கு மாகாணச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலா இன்று சனிக்கிழமை (04-04-1998), பிற்பகல் 2. 30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ''மறுமலர்ச்சிச் சிறுகதைகள்'' என்ற நூலினை வெளியிட்டுவைப்பார். அதன்பின்னர் 'நூலுருப்பெற வேண்டிய ஆக்கவிலக்கியங்கள்' எனும் கலந்துரையாடலை நடத்தவுள்ளார். பேராசிரியர் சி. தில்லைநாதனும் கலந்து கொள்கிறார். எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்

(54638)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு, ஆழ்ந்த கவலையுடன் எமது கண்ணீர்ப் பூக்களைச் சொரிகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், யா / நாவற்குழி மகா வித்தியாலயம்.

(54633)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயம், வேலணை.

(54635)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம் வலயம் — 1 இன் கல்விப்பணிப்பாளர்

**அமரர் சு. இரத்தினராசா**

அவர்கள் மறைந்த செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கடமையுணர்வும், நேர்மையும், மனிதாபிமானமும் மிக்க அன்னாரது மறைவு எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்பாடுகளுக்கு அவரின் மகத்தான பங்களிப்பை நாம் என்றும் நினைவு கூருவோம். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/வேம்படி மகளிர் கல்லூரி.

(சி/3325)

## விளையாட்டு விழா

வடமராட்சி, ஏப். 4 பருத்தித்துறை-கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனம் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-173)


## தேவை

ஆங்கில மருந்து விற்பனையில் அனுபவம் உள்ளவர் உடன் தேவை.

தகுதி உடையோர் முழு விவரங்களுடன் ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் வரவும்.

மயூரா மருந்தகம்

திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.

(54589)


## NOTICE

UNIVERSITY of JAFFNA.

FACULTY of MEDICINE

The Out of bounds of the premises of General Hospital, Jaffna to the Medical Students is extended till 10 th April 1998. The Lectures for the 14 th Batch will commence on 3 rd April 1998 at the Faculty of Medicine.

- Registrar

(C/3324)

NAVALAR EDUCATION CENTRE

## புலமைப் பரிசில் '98

**16 ஆவது பரீட்சை**

| | |
|---|---|
| க. பூர்ணிமா | – 181 |
| சி. சிவமைந்தன் | – 179 |
| து. கபிலன் | – 173 |
| சி. கஸ்தூரி | – 170 |
| கு. சாளினி | – 170 |
| சி. ஜனகன் | – 169 |

**17 ஆவது பரீட்சை**

| | |
|---|---|
| சி. சிவமைந்தன் | – 173 |
| க. பூர்ணிமா | – 163 |
| து. கபிலன் | – 154 |
| க. பிரணவரூபன் | – 153 |
| வ. தீபிகா | – 151 |
| சி. மோகனராஜ் | – 151 |

அடுத்த பரீட்சை 05 – 04 – 98

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(54607)

## நன்றி செலுத்தும் வழிபாடு

வலி. வடக்கு ஏப். 4 தந்தை செல்வா நூற்றாண்டு தினத்தையொட்டி தெல்லிப்பளை தென் இந்திய திருச்சபையினால் நன்றி செலுத்தும் வழிபாடு உடுவில் தேவாலயத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். (இ-86)

## எமது இதய அஞ்சலிகள்

**அமரர் சு. இரத்தினராசா**

(கல்விப்பணிப்பாளர் யாழ். வலயம்—1)

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.'

அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு, துயருற்றிருக்கும் குடும்பத்துக்கும் ஆறுதல் கூறுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/கொக்குவில் மேற்கு, சி. சி. த. க. பாடசாலை.

யா/கொக்குவில் ஸ்தான, சி. சி. த. க. பாடசாலை.

(50021)


வலி– கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி (வ–து)

## கூட்டுறவு மருந்தகம்

எம்மால் 30 – 03 – 98 இல் அச்சுவேலி சந்தியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மருந்தகத்தில் சகல விதமான ஆங்கில மருந்து வகைகளும் சகலவிதமான பால்மா வகைகளும், பிஸ்கற் வகைகளும் மலிவு விலையில் தரமானதாகப் பெற்றுக் கொள்ளலாம்.

மருந்தகம் தினமும் காலை 7 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை திறந்திருக்கும்.

அத்துடன் வைத்திய சேவையும் இடம்பெறும்.

நோயாளர்களைப் பார்வையிடும் நேரம்:–

காலை 8· 00 மணி தொடக்கம் 12·00 மணிவரை.
மாலை 3· 30 மணி தொடக்கம் 4·30 மணிவரை.

அனைவரினதும் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம்.

வலி. கிழக்கு (வ.ப.) ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி.

(சி/3322)

## மலிவு விற்பனை

SONY KV 2197 Mark II Colour T. V

Panasonic SR 30, SD 220, SD 225, SD 300, SD 320, SD 350,

L. G. AC/DC Video

SONY Video CD Playar D-V 500

VCD - Panasonic AK 80 CD Stero System
PIONEER Laser Disc CLD – S 370
PIONEER A - 656 Amplifier
PIONEE VSA .D 801S Amplifier AKAI AUDIO-Decks.

Stationary Items

Duplicating Paper, Typing Papar
Foolscap Sheet
Ball Point Pens Pencils
School Bags

பாடசாலை அப்பியாச கொப்பிகள் அனைத்தும் மலிவான விலையில் கிடைக்கும்.

அத்துடன்

HONDA 2. 5 KV Generator
HERO HONDA CD 100SS

என்பனவும் விற்பனைக்குண்டு.

இவற்றுடன்

Panasonic 180 HD
SKC 180 Video Cassette
Maxell UR 60 Cassette களையும்

பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**HERO SUPER COMPLEX**

MAIN STREET, NELLIADY, KARAVEDDY.

(54622)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பயணிகள் கப்பல் சேவை இரு தடவைகள் நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ். மாவட்டத்துக்கு திரும்பவென மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் தங்கியுள்ளவர்களை அழைத்து வர திருகோணமலைக்கும் — காங்கேசன் துறைக்கும் இடையில் இரு தடவைகள் பயணிகள் கப்பல் சேவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சேவை மூலம் இரண்டாயிரம் பேர் யாழ். அழைத்துவரப் படுவர்.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத்தலைவர் என். ஏ. ஒபடகே இத் தகவலைத் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் இரு கப்பல்களை வாடகைக்கு அமர்த்தியுள்ளார். இவ்விரு கப்பல்களுமே தற்போது வடக்கே உணவுப் பொருள்களை எடுத்து வரும் பணியில் ஈடுபட்டுள்ளன.

புத்தாண்டுக்காக இவ்விரு கப்பல்களும் பொருள்களை எடுத்துவர கொழும்புத்துறைமுகத்தில் பொருள் ஏற்றும் பணியில் ஈடுபட்டுள்ளன. அவற்றில் ஒரு கப்பல் ஓரிரு நாள்களில் காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அக்கப்பல் பொருள் இறக்கி முடிந்ததும் இரு தடவைகள் பயணிகள் சேவைகளை நடத்த ஏற்படாகியுள்ளது.

இந்தக்கப்பல் மூலம் மேலும் இரு சேவைகளை நடத்தும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இந்தப் பணிக்காக இக்கப்பலைப் பயன்படுத்தினால் வடக்குக்கு பொருள் எடுத்து வரும் பணி பாதிக்கப்படும்.

கடந்த சில வாரங்களாக சீனிக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு போன்ற நிலை ஏற்படலாம். அதைத் தவிர்ப்பதற்காகவே மாதத்தில் இரு தடவைகள் மட்டும் இக்கப்பல் மூலம் பயணிகள் கப்பல் சேவையை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது — என்றார் அவர். (ஐ-3-9)


## பயிற்சிப் பத்திரிகையாளர்

### (உதவி ஆசிரியர்/ செய்தியாளர்)

பத்திரிகைத்துறையில் உங்களுக்கு ஆர்வம் உண்டா?

பத்திரிகையாளராகவே தொடர்ந்து பணிபுரியும் விருப்பம் உள்ளவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்.

நவீன அச்சுக்கலை உட்படப் பத்திரிகையாளர் பயிற்சி பெறுவதற்குத் தம்மிடம் ஆற்றல் உண்டு எனக் கருதுபவர்கள் விண்ணப்பிக்கலாம்.


ஆகக் குறைந்த கல்வித் தகைமை: ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி. கணனியியல் அறிவு, ஆங்கில அறிவு என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும். வயதெல்லை 20 — 30 வரை.

ஆறுமாத காலப் பயிற்சிக் காலத்தின் போது அலவன்ஸ் வழங்கப்படும். தகுதியின் பேரில் நிரந்தர நியமனம் பெறுவோருக்கு அரசாங்க சம்பளச் சபை சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் ஊதியம் தீர்மானிக்கப்படும்.

பயிற்சி முடிந்தபின்னர் ஆகக் குறைந்தது மூன்று வருட ஒப்பந்தத்தில் பணியாற்ற விரும்புவோர் மட்டும் எழுத்து - நேர்முகப் பரீட்சைக்குத் தயாராக நாளை காலை 9-00 மணிக்கு நேரில் வரவும்.

பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 08 — 02 — 1969

உதிர்வு: 03 — 04 — 1997

திருமதி

**ரமணி ஜெயக்குமார்** [கனடா]

நீ உதிர்த்த
புன்னகையின் ஈரம் இன்னும்
காயவில்லை.
நீ உதிர்ந்து போனாய்!
நீ ஏற்றிய
குலவிளக்கின் கொழுந்துகள்
இன்னும் துளிர் விடவில்லை.
நீ அணைந்து போனாய்!
உன்னை இழந்த சுமையை
என்றும் சுமக்கின்றோம்.
உன்னை எரித்த நெருப்பில்
நாம் வேகின்றோம்!

— குடும்பத்தினர்.

E. S. கந்தசாமி,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். [54640]

# சாள்ஸ் அபயசேகரா காலமானார்

கொழும்பு, ஏப். 4

இனங்களுக்கு இடையே சமத்துவத்துக்கான இயக்கத்தின் (மேர்ஜ்) தலைவர் சாள்ஸ் அபயசேகரா (வயது 75) நேற்று கொழும்பில் மாரடைப்பால் காலமானார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முன்முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்த அவர், சந்திரிகா அரசு — புலிகள் பேச்சுவார்த்தை நடைபெற்ற காலத்தில், புலிகளுடன் பேசுவதற்காக அரசுப் பிரதிநிதிகளுடன் யாழ். வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## மூன்று...

(முதலாம் பக்கத்தொடர்)

பொலீஸாரால் பிடிக்கப்பட்டு நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்படும் கசிப்பு போன்ற பொருள்களுடன் சேர்த்து தெய்வச் சிலைகளையும் வைத்திருப்பது சிவநிந்தையாகும். எனவே இவற்றை அவற்றுக்குரிய மரியாதை அளித்து கோயில்களில் வைப்பதே சிறந்தது''— என்று நீதிவான் மு. திருநாவுக்கரசு பொலீஸாருக்குத் தெளிவுபடுத்தினார். பொலீஸார் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காததை அடுத்து, விக்கிரகங்களை கீரிமலை நகுலேஸ்வரக் குருக்களிடம் நிபந்தனையின் அடிப்படையில் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

விக்கிரகங்களை ஆறு மாதங்கள் கோயிலில் வைக்கும் படியும் —

யாராவது உரிமைகோரி அடையாளம் காட்டினால் தமக்கு அது குறித்து அறிவிக்க வேண்டும் என்றும் —

யாரும் அடையாளம் காட்டாமல் ஆறு மாதங்களும் இருப்பின் தமக்குத் தெரியப்படுத்தி அதன் பின் விக்கிரகங்களை நிரந்தரமாக ஆலயத்திலே வைக்க வேண்டும் என்றும் —

நிபந்தனை விதித்தார் நீதிவான்.

அதனைத் தொடர்ந்து விக்கிரகங்கள் பொலீஸாரின் முன்னிலையில் நகுலேஸ்வர ஆலயக் குருக்களிடம் கையளிக்கப்பட்டன. (உ-ரீ)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரிட்டனில் தீவிரவாத அமைப்புகள் செயற்படுவதை தடைசெய்யும் சட்டம் ஒன்று விரைவில் கொண்டுவரப்படும் என்று கடந்த நவம்பரில் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது.

அதற்கு அமைய புதிய சட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்று வருவதாகவும்—

புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தால் பிரிட்டனில் நிதி திரட்டுவதற்கும்—

பிரிட்டனைத் தளமாகக் கொண்டு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும்—

புலிகளுக்கு வாய்ப்பில்லாமல் போகும் என்று மேற்படி சஞ்சிகை தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் அரசின் தீர்மானம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிகுந்த அழுத்தம் தருவதாக உள்ளது என்றும் அச் சஞ்சிகை குறிப்பிட்டது. (உ-3)

## கல்விப்...

(முதலாம் பக்கத் தொடர்)

காரிகளும் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

அதன் பின் உடுவில் கல்விக் கோட்ட அலுவலகத்தில் அஞ்சலிக்காகப் பூதவுடல் வைக்கப்பட்டது. அதன் பின்பு அவரது கொக்குவில் வீட்டுக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டது.

அவரது பூதவுடல் நாளை (ஞாயிறு) வேலணையில் தகனம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-139-27-9)

# இப்படியும் நடக்கிறது

பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் தமது வீட்டில் இருந்த சமயம், அருகில் கிராமம் ஒன்றைச் சேர்ந்த கூட்டத்தினரால் தாக்கப்பட்டிருக்கின்றார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளியன்று நடந்திருக்கின்றது.

பாடசாலை முடிவடைந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த அக் கிராம மாணவர்கள் வழியில் ஒரு வீட்டில் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடித்து விட்டு, வாளியை அடித்து உடைத்து கிணற்றில் போட்டதாகவும் —

வீட்டுக்காரர் பாடசாலைக்கு வந்து முறைப்பாடு செய்யவே, சம்பந்தப்பட்ட மாணவர்களை அதிபர் தண்டித்ததாகவும்—

இதற்குப் பரிசாகவே கிராமத்தவர்கள் திரண்டு வந்து அதிபர் வீட்டில் புகுந்து, அவர் கையெடுத்துக் கும்பிட கும்பிடத் தாக்கியதாகவும்— கூறப்படுகிறது.

மாணவர்கள் இவ்வாறு வன்முறைப் போக்குடையவர்களாக மாறுவார்களானால் — அதற்குப் பெற்றோரும் முட்டுக் கொடுப்பார்களானால் — எங்கள் கல்வி நிலை என்னாகப்போகிறது?

நமது கல்விச் சமூகம் திருந்துமா? வெறும் விசாரணைகள், வார்த்தை சல்ஜாப்புகள் போன்றவற்றுடன் விடயத்தை மூடி மறைத்து விடுதல் நியாயமா?

★ ★ ★ ★

பிரேத பரிசோதனைக்கென, சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தின் இரு கண்களையும், சவச்சாலைக்குள் உட்புகுந்த காகங்கள் கொத்திச் சூறையாடிய சம்பவம் நேற்றுக் காலை மந்திகை மருத்துவ மனையில் நிகழ்ந்துள்ளது.

துன்னாலை மத்தியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரின் சடலத்திலிருந்த கண்களே காகங்களினால் கொத்தப்பட்டுள்ளன.

இச் சவச்சாலை பாதுகாப்பின்றி கதவுகள், ஜன்னல்கள் உடைந்த நிலையிலிருந்ததே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்களற்ற நிலையிலிருந்த சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டது. ★

# வன்னி வறியமக்களுக்கு வீடுகள் அமைக்க உதவி

யாழ்ப்பாணம், ஏப். 4

மனித முன்னேற்ற நடுநிலையம் வன்னிப் பகுதியில் இடம் பெயர்ந்து துன்பப்படும் வறிய குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதில் ஈடுபட்டுவருகிறது.

வறிய குடும்பங்களில் உள்ள இளைஞர், யுவதிகள் சுய தொழிலை ஆரம்பிப்பதற்கும் உதவி புரிந்து வருகின்றது. அத்தோடு வறிய குடும்பங்களைச் சேர்ந்த யாராவது மரணமடைந்தால் அவர்களின் மரணச்சடங்கிற்காக ஆயிரம் ரூபா வீதம் பண உதவிகளையும் அது வழங்கி வருகின்றது.

அக்கராயன், மல்லாவிவைத்தியசாலையில் கடமை புரியும் உப ஊழியர்களுக்கும் 500 ரூபா வீதம் மாதாந்த ஊக்குவிப்புப் பணத்தையும் மனித முன்னேற்ற நடுநிலையம் வழங்கிவருகிறது.

# தெற்கு பக்தர்கள் குழு மடுதேவாலயம் சென்றது

கொழும்பு ஏப். 4

மடுதேவாலயத்துக்குச் செல்வதற்கு 128 பக்தர்களை படையினர் கடந்த செவ்வாயன்று அனுமதித்தனர்.

## துறைமுக...

(முதலாம் பக்கத் தொடர்)

வலை அடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

மதுபோதை காரணமாகத் தவறுதலாக இலக்கத்தை மாறி வழங்கி விட்டதாக இவர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

ஆனால் வைத்திய அறிக்கையில் அவர் மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படவில்லை எனப் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. (உ-2)

## தீவிரவாதத்...

(முதலாம் பக்கத்தொடர்)

எஸ். ஈ. பத்திரன்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழு தற்போது கலைக்கப்பட்டுள்ளதால் அதில் பணியாற்றிய பொலீஸ் உத்தியோகத்தர்கள் ''பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு''க்குக் கீழ் கொண்டு வரப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தேசிய புலனாய்வு, சி. டி. பி. நடவடிக்கைகளை இப்பிரிவிடம் கையளிப்பது தொடர்பாக இதுவரை தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (உ-21)

ஆனால் அவர்களுடன் பத்திரிகையாளர்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று பி.பி.ஸி. சிங்கள சேவை வவுனியாச் செய்தியாளர் ஜினசேன ரத்துகமகே தெரிவித்தார்.

ஏழு அருட்தந்தையர்கள், ஏழு அருட்சகோதரிகள் குழு உட்பட 128 பக்தர்கள் மடுச் சந்தியை சென்றடைந்தது.

வவுனியாவில் இவர்களுடன் இணைந்து கொண்ட பி.பி.ஸி. சிங்கள சேவை வவுனியாச்செய்தியாளர் ஜினசேன ரத்துகமகேயும் மடுச் சந்தியை அடைந்தார்.

விடுதலைப்புலிகள் அனுமதி வழங்கிய பட்டியலில் பெயர் இல்லை என்று கூறிய படையினர் மடுவுக்குச் செல்ல அவரை அனுமதிக்கவில்லை. (ஐ-3)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

இறக்கிக்கொண்டிருக்கும் கப்பல்கள் பொருள்களை இறக்கி முடிந்ததும் பயணிகளை ஏற்றப் பயன்படுத்தப்படும் எனவும்—

தொடர்ந்தும் கப்பல் சேவையை நடத்த மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் பற்றி தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைப்பதாகவும் உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-139-9)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 4-04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி உங்களிடம் அதன்
ஒளி எங்களிடம்

**எரிக் கணேஷ்**

மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C 3278)


## கருத்துக் கலசம்

மயூரா

### தாழும் நிலையா?

ஈழத் தமிழர்கள் இன்று போல் என்றுமே இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்ததில்லை என்று சொல்லுமளவுக்கு, அவர்களின் வாழ்க்கை கேவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தமிழர்கள்—இன்றைய சந்ததியினரும், முந்திய சந்ததியினரும்—செய்த பாவங்களின் கூட்டு விளைவு தானோ இது என்று கவலைப்படும் அளவுக்கு எங்கள் நிலை தாழ்ந்து போயுள்ளது.

தமிழர்களின் இன்றைய வாழ்க்கை சீரழிந்த ஒன்று. போரின் தாக்கங்கள் ஒரு முனையாகவும் அரசின் இரக்கமில்லாத—மனித நேயம் தானும் சிறிதும் இல்லாத—கெடுபிடிகள் மறுமுனையாகவும் இரு கூர் ஈட்டியாக அவர்களைக் குத்திக் குதறிக் கொண்டிருக்கின்றன.

இந்த நிலையிலும் தமிழன் திருந்தினானா? இல்லவே இல்லை!

சமூக நலன், அடுத்தவன் நலன், மண்ணின் மேம்பாடு என்ற பரந்த வட்டத்தைப் பார்க்கத் தமிழர் கண்கள் மறுக்கின்றன; தாமாகவே மூடிக்கொள்கின்றன!

சுயநலம், அடுத்தவனைத் தட்டி வீழ்த்துவது, பணஆசை, அதிகாரத்தனம், இவர் யார் எனக்கு என்ற போக்கு, வஞ்சகம், சூழ்ச்சி, அழுக்காறு என்பனவே மலிந்துள்ளன. குறுகிய மனத்துடன் சிறிய வட்டத்தையே சுற்றிச் சுழலும் தன்மையே தொடர்கிறது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு, சிமெந்து நிவாரணம் முதற்கொண்டு அபிவிருத்திப் பணி வரை அலுவலர்கள் மட்டத்தில் ஊழல்கள், மோசடிகள் மலிந்து போய் விட்டன. கீழிருக்கும் அதிகாரிகள் மேல் மட்ட அதிகாரிகள் மீதும், மேல்மட்ட அதிகாரிகள் கீழ் மட்ட அதிகாரிகள் மீதும் மாறிமாறிக் குற்றஞ்சாட்டிப் பொறுப்பைத் தட்டிக் கழிக்கப் பழகி வருகிறார்கள். குற்றவாளி யார்; பொறுப்பு எவரிடம் என்பது புதிராக உள்ளது!

மக்களைப் பொறுத்த வரையிலும் பாதிக்கப்பட்டவன், உண்மையாகவே உதவி தேவைப்படுபவன் தனக்குக் கிடைக்கவில்லையே என்று ஏங்கினாலும் பரவாயில்லை, சம்பந்தப்பட்ட உதவிக்குத் தாம் தகுதியற்றவனாக இருப்பினும் யார் காலைப் பிடித்தாவது அதனைப் பெற்றுவிட வேண்டும் என்று நினைப்போரே அனேகர்.

அதிகாரிகளும் சரி, அரசியல்வாதிகளும் சரி, இன்றைய சந்தர்ப்பத்தை நாளைய வசதிக்குப் பயன்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளார்கள். மக்கள் பணத்தில் தான் தாம் வாழ்கிறார்கள்; உயர்ந்தார்கள் என்பதனை அறவே மறந்து விடுகிறார்கள்.

நீதி, நியாயம், நேர்மை, தர்மம், ஒற்றுமை என்பன எமது மக்கள் மத்தியில் செத்து விட்டன. இவற்றின் கூட்டு விளைவு, தமிழர்கள் இன்று அனுபவிக்கும் இன்றைய கேவல நிலையைவிட மேலும் பாதாளத்துக்குத் தள்ளிவிடுமோ என்ற அச்சத்தைத் தருகிறது.

# தற்கொலைக்குத் தூண்டும் தன்னுணர்வு மனநிலைகள்

உலகின் தற்கொலைவீதம் அதிகூடிய நாடாக இலங்கை சாதனை புரிந்துள்ளது.

தற்கொலைக்குரிய மூல காரணம் தம்மைத்தாமே தாழ்வாக எடைபோடுவதும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க இயலாமையுமே ஆகும். தற்கொலை செய்து கொள்பவர்கள் இவ்வுலகில் இருந்து விடுபட முயல்கின்றனர். உண்மையில் அவர்கள் தம்மிடமிருந்தே தப்பித்துக்கொள்கின்றனர்; தம்மை ஏற்றுக் கொள்ள முடியாது தம்மையே நிந்திக்கின்றனர். பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றை நிவர்த்தி செய்வதற்குப் பதிலாக, எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவைக் காணுமுகமாகத் தம் வாழ்க்கைக்கே முடிவைக் கொடுக்கின்றனர்.

பிரெஞ்சு நாட்டு சமூகவியலறிஞரான Durkheim என்பவர் தற்கொலை வீதத்திற்கும் சமூக நிலைவரங்களுக்குமிடையிலான தொடர்புகளை ஆராய்ந்துள்ளார். சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விலகியிருப்பவர்களில் சமுதாயம் பற்றிய உணர்வுகள் அற்றுப் போகின்றன. சமுதாய வழக்கங்கள் தமக்கு எந்த முக்கியத்துவத்தையும் கொடுப்பதில்லை என்ற உணர்வுடனேயே அவர்கள் வாழ்வர். இத்தகையோரின் தற்கொலை Anomic Suicide எனப்படும். தம்மைப் பற்றித் தாழ்வாக எடைபோடுபவர்கள் செய்துகொள்ளும் தற்கொலை Egostic Suicide எனப்படும். 'தியாகம்' எனும் உணர்வில் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தன்னுயிரைக் கொடுப்பது Altrusfic Suictde எனப்படும். இங்கு தற்கொலையானது ஒரு தற்கொடையாக அமைந்து விடுகின்றது.



யுத்தமானது தற்கொலைக்கு ஒரு மாற்றாக அமைகின்றது. எனவேதான் யுத்தம் நடைபெறும் பிரதேசங்களில் தற்கொலை வீதம் குறைவாக அமைவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. தற்கொலையானது

சாய இரசாயனப் பொருள்களை உள்ளெடுத்தல், தூக்குப் போடுதல், அலரிவிதை உள்ளெடுத்தல், கிணறு—குளம் போன்ற நீர்நிலைகளில் வீழ்ந்து அமிழுதல், எரிதல், அளவுக்கு அதிகமாக மாத்திரைகளை உள்ளெடுத்தல், வாகனங்களின் குறுக்கே வெளிப்படல் சயனைட் அருந்துதல், மின்சாரத்தில்கையை வைத்தல், துவக்கு முதலிய ஆயுதங்களினால் சுடுதல் போன்ற பல்வேறு வழிமுறைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## தனக்குத் தானே தரும் தண்டனை

கடந்த எண்பது தொண்ணூறுகளில் வட இலங்கையின் தற்கொலை வீதம் குறைவாகக் காணப்பட்டுள்ளது. இதற்குரிய பிரதான காரணங்களாக யுத்தத்தைக் குறிப்பிடலாம். யுத்தம் காரணமாக விவசாய இரசாயனப் பொருள்களின் பாவனைக் குறைவு, மின்சாரம் இன்மை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக வாகனங்களின் பாவனைக்குறைவு ரயில் போக்குவரத்தின்மை என்பன தற்கொலை வீதத்தைக் குறைப்பதில் பங்கேற்றுள்ளன. ஆயினும் அலரி விதையானது இலகுவாகக் கிடைக்கக் கூடிய வளமாகக் கலாசாரப் பிரபல்யமடைந்துள்ளது.

தற்கொலை வீதமானது போர்ச்சூழலில் குறைவடைந்த போதும் பொருளாதாரத் தாழ்வு ஏற்படும் போது அதிகரிக்கவே செய்கின்றது. உலகளாவிய ரீதியில் தற்கொலை வீதம் இளவயதினரை விட வயது வந்தோரிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் இளவயதினரின் தற்கொலை வீதமே அதிகமாகக் காணப்படுகின்றது. ஆண்களே பெண்களை விட அதிகளவில் தற்கொலை செய்து கொள்கின்றனர். குடும்பஸ்தரைவிட தனியாக வாழ்பவர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிகம். அதிக சன அடர்த்தியான இடங்களில் வாழுதல், உயர் வாழ்க்கைத் தரத்துடன் வாழுதல், மதுப்பழக்கம், போதைப் பொருளுக்கு அடிமையாக இருத்தல், சிறுபாரயத்தில் வீட்டுப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல், உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருத்தல், தொய்வு முதலிய உடலியல்நோய்களினால் அதிகளவு பாதிக்கப்பட்டிருத்தல் போன்றவை தற்கொலை செய்யத் தூண்டுவதற்குக் காரணமாக அமைந்து விடுகின்றன.

மதுவிற்கு அடிமையானவர்கள் சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர்; திருமணம், வேலை, பதவி என்பவற்றில் ஏமாற்றத்தைப் பெறுகின்றனர்; தம்மைத் தாமே தாழ்வாக எடைபோடுவர். மதுவின் நச்சுத் தன்மை அவர்களைப் பலவீனர்களாக மாற்றிவிடுகின்றது. அவையாவும் தற்கொலை செய்யும் எண்ணத்திற்கு இட்டுச் செல்கின்றன.

சோர்வு அல்லது மனத் தளர்வு, மனம் துன்பங்களை நோக்கித் திசை திருப்பப்படுவதனால் ஏற்படுகின்றது. இது உடலியல்— உளவியற் செயற்பாடுகளை மந்திக்கின்றது; நித்திரையின்மை, பசியின்மை; குடும்பவாழ்க்கையில் வெறுப்பு என்பவற்றை ஏற்படுத்துகின்றது. இத்தாக்கங்கள் மூளையில் நடைபெறும் சில உயிரிரசாயன மாற்றங்களால் ஏற்படுகின்றன. இது தற்கொலை எண்ணத்தையும் தூண்டுகின்றது.



தற்கொலை முயற்சியானது சில குடும்பங்களில் பரம்பரையாகவும் தொடர்கின்றது.

தற்கொலையானது வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு வழியாக அல்லது நரக வாழ்க்கைக்கு விடுதலையாகக் கருதப்படுகின்றது. அநேக தற்கொலைகள் தேவையற்றன. இவை தவிர்க்கப்படக் கூடிய இறப்பு ஆகும்.

ஒவ்வொருவருக்கும் இவ்வுலகில் வாழ உரிமை உண்டு. ஆனால் வாழ்க்கையை முடித்துக்கொள்ள உரிமை கிடையாது. தற்கொலை முயற்சி சட்டப்படி குற்றமாகும்.

இறப்புக்கள் யாவற்றிலும் தற்கொலை இறப்பே சமுதாயத்தை வெகுவாகப் பாதிக்கக் கூடியதாகும். தற்கொலையாளியின் இழப்பானது குடும்பத்தாருக்கும் உறவினருக்கும் வாழ்க்கை முழுவதும் ஈடுசெய்யப்பட முடியாத மனத்தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றது. இளவயதினரின் இழப்பு, சமுதாயத்தின் வலுவுள்ள உறுப்பினரின் இழப்பு ஆகும். எனவே தற்கொலையனது தனிப்பட்ட மனித இழப்பு அல்லாமல் சமுதாயத்தின் இழப்பும் ஆகின்றது.

வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் போது அதனை இலகுவாக எதிர்த்து நிற்க வலுவுண்டாகும் அல்லது அப்பிரச்சினைக்குள்ளே அகப்பட வேண்டி வரும். இந்நிலையில் அப்பிரச்சினைக்கான காரணங்கள் சிந்திக்கப்படும். நம்பிக்கை, வெட்கம், சந்தேகம் என்பன இதன்போது உருவாகும். தாமாகவே காரணம் கண்டுபிடிக்கப்படும். கோபம், பயம், குற்ற


**- சி. கம்சானந்தி -**
(மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)


உணர்வு, அவா என்பன உருவாகும். ஒரு நிலையில் வாழ்வா? சாவா? என்ற உணர்வு ஏற்படும். இந்நிலையே தற்கொலை உணர்விற்கு இட்டுச் செல்லும். இல்லையேல் பழி தீர்க்கும்


(XI ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு வாழ் தமிழருக்கு அரசாங்கத்தின் புத்தாண்டுப் பரிசு அவமானக் கைதுதானா?

தமிழ் — சிங்களப் புதுவருடம் அண்மித்துக் கொண்டிருக்கிறது.

வடக்கு — கிழக்கில் அதன் அமளி, கொண்டாட்ட ஆயத்தங்கள் இன்னும் கருக்கட்டவில்லை. புதுவருடத்தைக் கொண்டாடும் சுதந்திரமும் மனமும் தமிழனுக்கு எங்கே...?

தென்னிலங்கையில் புதுவருட வியாபாரம் களை கட்டத் தொடங்கி விட்டது. அரசாங்க வர்த்தக நிறுவனமான கூ. மொ. வி. புதுவருடத்தை முன்னிட்டு பல பாவனைப் பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இந்த வர்த்தக, வாங்குதல் — விற்பனை செய்தல், சந்தடிக்கு மத்தியில் கொழும்புப் பகுதியில் புதுவருடத்தை அண்டி விடுதலைப் புலிகள் தாக்கும் சாத்தியம் உண்டு என்ற புலனாய்வுத் தகவல்கள் பாதுகாப்புப் பகுதியினருக்குக் கிடைத்துள்ளதாம்.

அதனாலேயே கொழும்பு மாநகரையும் அதனை அண்டிய, பிரதேசங்களிலும் தமிழர் வாழும் பகுதிகள் இரவில் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்படுவதாக இப்போது காரணம் கூறப்படுகிறது!

பாதுகாப்பு விடயத்தில் அவதானம், முன்னெச்சரிக்கை தேவை என்பது உண்மைதான். ஆனால் தமிழர்கள் ஆடு, மாடுகள் போன்றும், வகை தொகையின்றியும் கைது செய்யப்படுவதும், இம்சிக்கப்படுவதும் பாதுகாப்பை உறுதி செய்யும் என்று கருதமுடியாது.

தமிழ்மக்கள் மிகவும் கேவலமான முறையில் நடத்தப்படுவதனை, அவர்களின் உரிமைகள் அப்பட்டமாக பறிக்கப்படுவதனை, பாதுகாப்புக் கருதியது என்ற போர்வையால் மூடுவது எந்த வகையிலும் ஏற்கக் கூடியது அல்ல.

இந்த அநியாயத்தை நிறுத்துவதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் இதுவரை ஆக்க பூர்வமாக நடவடிக்கை எடுக்காதது குறித்து தமிழ் மக்கள் மிகவும் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறிப் பதவிக்கு வந்த அரசு, அவர்களின் நாளாந்த —அன்றாட — வாழ்க்கையையும் கௌரவத்தையும் பாதிக்கும் வகையில் தனது பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யத் துணிவது எந்தவகையில் பொருத்தமானது?

ஆனால் அரசு இதுவிடயத்தில், தமிழர்களின் துன்ப துயரத்தை உணர்வதாக இல்லை. மரக்கட்டை மீது மழை பெய்ததுபோல கண்டு கொள்ளாமல் உள்ளது.

தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவது குறித்து ஆராய்ந்து அதனை நீக்க அல்லது மாற்று வழி ஒன்றைக் கண்டறிய சகல கட்சிகளையும் கொண்ட மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு இ. தொ. காங்கிரஸைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராசன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையைக் கேட்டிருந்தார்.

ஆனால் அப்படி ஒரு மா நாட்டைக் கூட்டுவதற்கு அரசு தயாரில்லை என்பது தெரியவந்துள்ளது.

வழமையான பாதுகாப்புக் கவுன்ஸில் கூட்டத்திலேயே தமிழர் கைது விவகாரம் ஆராயப்பட உள்ளது.

## உள்ளும் புறமும்

குறுமுனி

# புதிய வருடத்தின் பின்னர் புதிய பிரதமர் ஜெயக்கொடி?

தமிழர்கள் பாதிக்கப்படும் விடயங்களில், அக்கறையுடன் கவனம் செலுத்தி அவற்றை நீக்க நடவடிக்கை எடுப்பதற்குப் பின்னடிப்பதும், காலத்தைக் கடத்துவதும் அரசுக்குப் பழக்கமாகி விட்டது. தமிழர் பாதிப்புறுவதால் தனக்கு நேரடியான பாதிப்பு இல்லை என்ற துணிவுடன், உள்ளெண்ணத்துடன் அரசு செயற்படுவதும் இதற்கு மற்றொரு காரணம்.

தமிழர்களைக் கைது செய்து இம்சைப்படுத்துவதை நிறுத்த முடியாத அரசுக்கு — அதற்கு மாற்று வழி ஒன்றைக் கண்டுபிடிக்க முடியாத அரசுக்கு — இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விசுவாசமும் வல்லமையும் எங்கே இருக்கப் போகிறது என்ற கேள்வியே எழுந்துள்ளது.

கொழும்பு மற்றும் தென்னிலங்கைப் பிரதேசங்களில் வாழும் தமிழர்கள், சொந்த மண்ணான தமிழர் தாயகத்துக்கு —வடக்கு —கிழக்கு — சென்று எந்தவகை அவலத்தை எதிர்கொண்டாலும் பரவாயில்லை; அங்கு வாழ்வதே மேலானது என்று எண்ணுமளவுக்கு ஒருவகை நன்மையையே அரசு செய்து வருகிறது என்கிறார் எதனையும் ஆக்க பூர்வமானதாக எடுத்துக் கொள்ளும் அன்பர் ஒருவர்.

அத்தகைய ஓர் எண்ணம் தமிழர் மனதில் உதித்து அவர்கள் வடக்கு — கிழக்குப் பிரதேசங்களுக்கே போய்ச் சேரட்டும் என்ற நோக்கத்துடன்தான் கொழும்புக் கைதுகள் நடக்கின்றனவோ யாருக்குத் தெரியும் — என்று இன்னொரு அன்பர் சந்தேகம் எழுப்புகிறார்,

எதுவோ, தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் முடிவுக்குக் கொண்டு வரப்படாவிட்டால் பாரதூரமான விளைவுகளை அரசு எதிர்நோக்க நேரிடும் என்பது மட்டும் நிச்சயம்.

தமிழர்களுக்குத்தான் புதுவருடம் மந்தமாக இருக்கப் போகிறது என்பதல்ல. கொழும்பு அரசியலும் புதுவருடத்துக்குப் புதுப்பொலிவின்றி மந்தமாகவே இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

கண்டிக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தீர்வுப் பொதி சம்பந்தமான சர்வஜன வாக்கெடுப்பைப் பின்தள்ளி, மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்த அரசு தீர்மானித்தது.

ஆனால் இப்போது மாகாணசபைத் தேர்தலைப் பின்தள்ளிவிட்டு சர்வஜன வாக்கெடுப்பை முதலில் நடத்தினால் என்ன என்று மறுபரிசீலனை செய்யப்படுவதாக அறிய வந்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கியமுன்னணியின் விசேட கூட்டம் ஒன்றில் இது விடயம் ஆராயப்பட்டிருக்கிறது. மாகாண சபைத் தேர்தலை நடத்தி ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு அதிகரித்துள்ளது என்று வெளிக்காட்டுவதை விட, சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது மேல் என்ற கருத்தே அந்தக் கூட்டத்தில் மேலோங்கி நின்றதாம்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியோ மாகாண சபைத் தேர்தலுக்கான சகல நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டிருக்கிறது. அச்சபைகளின் தலைமை வேட்பாளர்களைத் தீர்மானிப்பதற்காக அவர்களுக்கு உள்ள ஆதரவு குறித்து மதிப்பீடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஏனைய சிறிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டு வருகிறது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஒரு பிரிவினர், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஒரு பிரிவினர், முஸ்லிம் கட்சி ஒன்று என்பனவற்றுடன் ஏற்கனவே பேச்சுக்கள் நடைபெற்றதாகத் தகவல்.

சிறிய கட்சிகள் அல்லது குழுக்களுடன் தேர்தல் உடன்பாடு எதனையும் செய்து கொள்வதில்லை என்றும் தமது கட்சியை நாடி வருவோரையும் சரி ஏனையோரையும் சரி ஐ. தே. க. சின்னத்தில் மட்டுமே போட்டியிட அனுமதிப்பது என்றும் அக்கட்சி கொள்கையளவில் தீர்மானித்திருக்கிறது.

மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதில் தமது கட்சிக்கே அமோக வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுக்கு இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அவர் பொதுத்தேர்தல் குறித்தும் பிரஸ்தாபிக்கத் தொடங்கி இருக்கிறார்.

வெளிநாடு சென்று திரும்பிய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாடு ஒன்றில் பொதுத் தேர்தலின் அவசியத்தை வலியுறுத்தினார். பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினால் நாட்டைச் சீராக ஆளமுடியவில்லை என்றும் அதனால்அது பதவி விலகிப் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைச் சமாளிக்க தேசிய அரசு ஒன்று தேவை என்ற கருத்தை [illegible] தார். ரணில் வெளிநாடு சென்று திரும்பிய பின்னர், அரசின் தீர்வுப் பொதிக்கான தனது மாற்று யோசனையின் மூன்றாவது பகுதியை ஐக்கிய தேசியக்கட்சி (மார்ச் மாத முடிவில்) வெளியிடும் என்று முன்னர் எதிர்பார்க்கப் பட்டது — பலமாக நம்பப்பட்டது.

ஆனால் ஏப்ரல் மாதமும் பிறந்துவிட்டது; அது பற்றிய சிறிய அளவிலான அசுகையையும் காண முடியவில்லை. பொதுத் தேர்தலை நடத்த அரசை நிர்ப்பந்தித்து வெற்றி கண்டால் மாற்று யோசனைளைத் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக்கொள்ளலாம்; இப்போது என்ன அவசியம், அவசரம் என்று ரணில் நினைத்து விட்டாரோ, என்னவோ!

மாற்று யோசனையைத் தயாரிக்கும் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான ரொனி டி மெல், அனுரா பண்டாரநாயக்காவுடன் வாதம் புரிவதில் நேரத்தைச் செலவிடுவதாலும் தாமதம் உண்டாகி இருக்கலாம். வெளியே எதுவும் தெரியவில்லை; உண்மையைச் சொல்லமாட்டார்களே!

இதற்கிடையில் ரணில் விக்கிரமசிங்கா விரைவில் இந்தியா சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச்சந்திக்கவுள்ளார் என்று அறிய வருகிறது. பாரதீய ஜனதாக்கட்சி அரசின் மீதான நம்பிக்கைப் பிரேரணை விவாதத்துக்கு வருவதற்கு முன்னரே ரணில் பிரதமர் வாஜ்பாயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக் கூறியுள்ளார். அவ்வேளை தாம் விரைவில் நேரில் வந்து சந்தித்துப் பேசுவதாகவும் கூறியிருக்கிறார்.

வாஜ்பாய் பதவி ஏற்ற கையோடு, அவரது அரசின் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தப்படுவதற்கு முன்னர் அவசரப்பட்டு, விழுந்தடித்துக் கொண்டு சந்தித்தவர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்.

'அவர் உங்களைச் சந்தித்த முதலாவது வெளிநாட்டுப் பிரமுகர் என்பதால் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை மறந்து விடக்கூடாது' — என்று நினைவுபடுத்துவதற்காகத் தான் ரணில் தொலைபேசியில் வாஜ்பாயுடன் பேசினார் என்று சிலர் அர்த்தம் கற்பிக்கிறார்கள்.

இதற்கிடையில் பிரதமர் வாஜ்பாயைச் சந்திக்கச் சென்ற கதிர்காமரினால் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியவில்லை என்று கொழும்பில் அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். வாஜ்பாய்—கதிர்காமர் சந்திப்புக் குறித்து இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கைக்கும், இந்திய அரசு வெளியிட்ட அறிக்கைக்கும் இடையில் பெரும் வேறுபாடுகள் உள்ளன. இலங்கை அரசின் அறிக்கை வாஜ்பாயின் நல்லெண்ணத்தை— விசுவாசத்தைப் பெற்றுக் கொண்டதாகப் புளுகித் தாழித்தாலும், இந்திய அரசு அறிக்கை விசேடமாக எதனையும் வெளிப்படுத்தவில்லை. இனப்பிரச்சினைக்கு சமாதானமான முறையில் அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதனையே வாஜ்பாய் வலியுறுத்தியதாக இந்திய அறிக்கை கூறுகிறது. இரு நாடுகளுக்கிடையேயும் பாரம்பரியமாக நிலவும் உறவைத் தொடரவேண்டும் என்றே இந்தியப் பிரதமர் கூறியிருக்கிறார்; அவ்வளவுதான்.

புதிய இந்திய அரசின் முக்கிய பிரமுகரான பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸை வசதியாகச் சந்திக்காமல் வந்து விட்டு, பிரதமர் வாஜ்பாய்க்குத் தாம் பட்டர்பூசியதாகக் காட்டிக் கொள்ளக் கதிர்காமர் முயன்றதாகவும் சிலர் விமர்சிக்கின்றார்கள்!

கதிர்காமரின் இந்திய விஜயம் உள்ளந்தரங்கமாக உண்மையான வெற்றி இல்லை என்பதனை அறிந்து கொண்டதால்தான் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பிரதமர் வாஜ்பாயை சந்தித்து தனது முகத்தைப் பதித்துக்கொள்ள விரும்புகிறார் போலும்!

இந்திய விஜயத்தில் மட்டும் கதிர்காமரின் சொல்லாடல் வல்லமைதேய்ந்து போய்விடவில்லை. இந்த நாட்டின் அடுத்த பிரதமராக அவரே நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பும் ஊகமும் கூட அடிபட்டுப் போய்விட்டது.

மாமன் ரத்வத்தையையே பிரதமராக்கப் பெரிதும் விரும்பினார் சந்திரிகா. பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் தமக்குப் பிரதமர் முடிசூட்டப்படவேண்டும் என்ற ஆரா ஆசையுடன் யாழ்ப்பாணத்தைப் பிடித்துக் காட்டி அதற்கான பட்டயத்தையும் சந்திரிகாவுக்கு வாசித்தளித்தார். வடக்குக்கான பாதையைத் திறந்து விட்டால் பிரதமர் முடி தமக்கே என்று இறுமாப்புக் கொண்டிருந்தார். அதற்காக வெற்றி உறுதியைத் தொடக்கினார். பத்து மாதங்கள் கடந்தும் அது முடக் கழுதையாக இன்னமும் ஆமைவேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

கண்டிக் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து பதவியை ராஜினாமாச் செய்வதாக ஓர்அரசியல் நாடகமும் நடத்திப் பார்த்தார். சகோதரி சிறிமாவோ மனம் இரங்கவில்லை.

இப்போது புதிய பிரதமர் லக்ஷ்மன்ஜெயக்கொடியேஎன்பது 90 வீதம் ஊர்ஜிதமாகிவிட்டது. சந்திரிகாவின் சகோதரி சுனேத்ராவின் செல்வாக்கு அதிகம் என்பதாலும் ஜெயக்கொடியே பண்டாரநாயக்கா குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என்பதாலும் அத்தனகலை அடங்கி உள்ள கம்பஹா மாவட்டத்தைச்சேர்ந்தவர்என்பதாலும் அவருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட உள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இம்மாதம் 17 ஆம் திகதி பிரதமர் ஸ்ரீமாவோ தமது பதவியில் இருந்து விலகுவார்; அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியே புதிய பிரதமராக நியமிக்கப்படுவார் என்பதே பிந்திய செய்தியாகும்.

பிரதமர் பதவிக்கு நியமிக்கப்படக் கூடியவர்களின் பட்டியலில் அமைச்சர் இரத்தின சிறி விக்கிரமநாயக்காவின் பெயரும் அடிபட்டது. ஆனால் அவர் ஜனாதிபதி சந்திரிகாவின் மிகமிக நெருங்கிய நம்பிக்கைக்கு உரியவர்

(XIஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிடனே கேளாயோ?

தென்னங் கீற்றிருக்கும் தேனுகந்த பழமிருக்கும்
சின்னப் பறவைகளோ அருகினிலே சிரித்திருக்கும்
தின்னப் பசியிருக்கும் தீவெல்லாம் பறந்துவர
வன்னச் சிறகெனக்கு வாய்த்திருக்கும் மானிடனே...!

அந்நாளில் கடல்மேலே ஆறாத காதலுடன்
எந்நாளும் இனிக்காணா அற்புதத்தில் திளைத்திருந்தேன்!
பொன்னோடு பொருள் தேடும் பூலோகப் பிறப்புகளில்
அன்போடு என்னினத்தில் இணைந்திருந்து களித்திருந்தேன்!

மரக்கிளையும், செடி கொடியும் எனக்காகப் பழம் கொடுக்கும்
சரக்கொன்றை மரங்களெல்லாம் வாசனையாய்ப் பூத்தூவும்
உரத்தொலிக்கும் கடல்மேலே உன்னதமாய்ப் பறந்திருந்த
சிரத்தையெல்லாம் சின்னவனே நீயறிந்ததில்லையடா!

வான் நோக்கி முகில் தொட்டு மலையெல்லாம் எட்டி
தேனொத்த குரலோடு தீஞ்சுவைப்பா பாடி...
நான் பெற்ற இன்பமெல்லாம் நடுவழியிற் பறித்து...
ஏன் பிடித்தாய் மானிடனே என் மனதைக் கொன்று?

தங்கமுலாம் கூட்டினிலே தவித்திருக்கும் நாள்தனிலே
எங்களினம் பறப்பதையே ஏக்கமுடன் பார்த்திருப்பேன்
பொங்குகிற சிறகசைத்து பூஞ்சோலை தனைச்சேர்ந்து
தங்குகிற நாள் வருமா? தருவாயா அவ்விடிவை...?

இறை எனக்கு அளித்தவரம் சிறகிருக்குது – அதை
கறைகொண்ட மனிதா உன் கரம் அறுக்குது!
முறைகேடாய் எனைப் பிடித்தல் உன் மனதிற் சரியா?
குறையின்றி எனை மெல்ல வான்தனிலே விடுவாய்

நீ அழைக்கும் இன்பெயரோ என்னுளத்தில் கசக்கும்
நான் பறந்த வான்வெளியை உள்மனமோ தேடும்!
கூவிய என் கூவலையே ஒரு பிடியில் அமுக்கி
கேவலையே தந்தாயே வாழ்வாயோ நீயும்?

எல்லையிலா ஆகாயம் எங்கும் விரித்தபடி......
தொல்லையிலாப் பூவனங்கள் தொலைவில் தெரிந்தபடி
முல்லைப்பூ மணமுகர்ந்து சிறகுதைத்துப் பறந்தால்
இல்லையென்ற என் வாழ்வும் ஓர் பொழுதில் இனிக்கும்!

வாழ்த்துக்கள் பகர்வேன், உனை வாயாரப்போற்றி நிற்பேன்
ஆழ்கடல் அனைத்தும் தாண்டி உன் பெயர் அறியச் செய்வேன்
வீழ்கின்ற போதோ உந்தன் பெயர் சொல்லி எழும்ப வைப்பேன்
பாழ் போக்கை மாற்றி விடைகொடு மனிதா நீயும்!

*= தாட்சாயணி -*

## புலம் பெயர்ந்தோன் புலம்பல்

கோப்பை கழுவி நான் காசனுப்ப
கோயில்களிலே திருவிழாவாம் கொண்டாட்டமாம்!
அகதிக்காசும் நானெடுத்து அனுப்ப
அங்கை அவை அன்னதானமாம்!
சீட்டுக்கட்டி நான் சேர்த்த காசெல்லாம்
சீதனத்திற்கே பத்தாது — ஏதோ
பேருக்கு நாங்களிஞ்சை — முழுப்
பேயனாய் முறிஞ்சு போறம்!
ஏழு மணிக்கு நானெழும்பி வேலைக்குப் போனால்
நடுச்சாமம் வந்து மெத்தையில் விழுவம்...
நாசமாய்ப் போன ரெலிபோனும் கிணுகிணுத்து
நள்ளிரவு வேளையிலும் நிம்மதியைக் குலைக்கும்!
அர்த்தசாமம் தொலைபேசி அலறும்
ஆச்சி வந்து போனெடுப்பா,
அனுப்பு ஒரு லட்சம் என்பா!
கழுவிக் கழுவி நானிஞ்சை சேர்த்த காசெல்லாம்
கனகாசாய் அங்கை போகும் உண்டியலில்,
முந்தி நான் அனுப்பின காசில்
மூத்தக்கா கனடாவில் ''செட்டில்'' ஆனா!
களவாய் நானெடுத்த அகதிக் காசில்
கடைசி அக்கா சுவிற்சர்லாந்தில்!
இருக்கும் இரண்டு தங்கைகளுக்காக
இன்னும் எத்தனைநாள் ''கழுவ'' வேணும்?
சமூக வேலை செய்து நானும்
சங்கடப்பட்ட செய்தி யாரறிவார்?
ஆற அமர இருந்து நானும் சாப்பிட்டறியன்!
அருமைத் தம்பியும் ஆஸ்திரேலியா போகவேணுமாம்
ஆதலால் நானும் ஓய்வு நேரத்திலும்
ஒட்டல் ஒன்றில் ''ஒட்டறை'' தட்டுறன்.
வீட்டுக் கூரையும் ஒழுகுதெண்டு
விமானத்தில் வந்த கடிதம் அழுகின்றது.
கடிதத்தை இஞ்சை கண்டாலே — நாங்கள்
கதிகலங்கிப் போறமப்பா!
கிடுகுவேலியை பிடுங்கிப்போட்டு
சிமெந்தில் மதில் கட்டவேண்டும் என்று
அப்பரும் அபிப்பிராயப் படுகிறார்.
அநியாய வட்டிக்கு கடன்மாறியாவது
அங்கு காசு அனுப்பத்தானே வேண்டும்?
முப்பத்திரண்டு வயது முடிஞ்சு எனக்கு
முந்தநாள் தான் ஆவுது — இனியாவது
கலியாணம் செய்யன்ரா என்று
கடிதம் எழுதுவார் எவருமில்லை — முந்தி
காத்திருப்பேன் எண்டவளும் — கனகாலம் ஆனதால்
கனடாவிற்குப் போய்விட்டாள்!
பாவம் அவளும் எத்தனை நாள்தான்
காத்திருப்பாள்? — சேர்த்து வைத்த என்
சோகமெல்லாம் — சினிமாப்படம் போல ஓடுது...
பேருக்கு நாங்களிஞ்சை பேயனாய் முறிஞ்சு போறம்.

## நிலவும் இருட்டும்

பூக்களில் அழகில்லை
பூமியில் அமைதியில்லை
நாள்கள் அழிகின்றன —
ஆனால்
நட்புக்கள் அழியவில்லை.

கண்களில் நீரில்லை
கவிதைகளில் சீரில்லை
காடுகளில் மழையில்லை
— ஆனால்
காட்சிகள் மறையவில்லை

வைரத்தில் ஒளியில்லை
வாழ்க்கையில் ஒலியில்லை
துயரத்தில் துணிவில்லை
— ஆனால்
தூரங்கள் கரையவில்லை.

காதலில்
மரியாதையில்லை
கல்யாணத்தில்
மகிழ்ச்சியில்லை
சாதலில் சாத்திரமில்லை
— ஆனால்
சண்டைகள்
குறையவில்லை.

*— நல்லை அமிழ்தன் —*

## என்று தீரும்?

கம்பியூட்டர் யுகமாக
காலம் மாறுகையில்
கைவிளக்கில் படிக்கும்
கற்காலத்தில் நாம்
அலைபோல் கண்டு
பிடிப்புகள்
அயல்நாடுகளில் நடக்க
சிலைபோலே இங்கு
செய்வதறியாது நாம்
செக்கனுக்குச் செக்கன்
உலகம் முன்னேற
நாளுக்கு நாள் எங்கோ
பின்னோக்கி நாம்
'இன்ரநெற்' என ஒன்று
வந்துவிட்ட பின்பும்
இன்றுவரை ஒன்றுமே
அறியாமல் நாம்
தொடுவானமாய்
துருவநட்சத்திரமாய்த்
தான்
எமது முன்னேற்றம்
எத்தனை காலம் தான்
எமது வாழ்வும்
இப்படிப் போகும்
எதிர்காலச் சந்ததிக்கு
நிகழ்காலத்திலே நாம்
சேர்த்திங்கு வைப்ப
தெல்லாம்
ஈடில்லா
இழப்புக்களையும்
ஏகப்பட்ட
துயரங்களையும் தானே?
எட்டாத பழமாய்த்தான்
இன்னும் சமாதானம்
அமைதிப்புறாவும்
சமாதியாகி
அதன் கல்லறையில் கூட
புற்கள் முளைத்து
விட்டன
சொற்களால் விவரிக்க
இயலாத
பற்பல சோகங்கள்
படைத்தவனும்
அமைதிக்கு
தடை விதித்து
விட்டானோ என்று
பதை பதைக்கும்
உள்ளங்கள்
படும் பாடு ஏராளம்
என்று தீரும் இந்த அவலம்
என்று தீரும் எங்கள்
தாகம்?

## இங்கு சீறும் யுத்த கங்கை

இடையறாது தொடர்ந்தோடும் யுத்த ஆற்றின்
பெயரென்ன என்நாடே? ஏன்தான் நீயும்
தடையின்றி இதைப்பாய விட்டாய்? தீயே
திரவமாகி இதிலோடும்; எமையேன் சுட்டாய்?
சடலங்கள் நிதமிதன்மேல் 'எதிர்ப்பைக் காட்ட'
'மௌன ஊர்வலம்' நடத்தும்! போரா றூர்ந்த
படலையெல்லாம் தீக்குளிக்கும்! பசுமை நீறும்!
இதுபாயும் திசைகளிலே இரத்த வாசம்.

போர்நதியோ கரையுடைத்துப் பெருகலாச்சு.
பொய்நரிகள் பிணந்தின்று கொழுத்துப் போச்சு.
சோறுக்காய் திருவோட்டோ டலையும் போதும்
சுடுகலங்கள் தெருத்தெருவாய் மலிஞ்சு போச்சு.
ஏர்... வயலில் கவியெழுத பசிநேற்றில்லை.
எறிகணைகள் கவியெழுத இன்றோ தொல்லை.
ஆரெழுவார் அணைகட்ட? நாதியில்லை!
அழிவொன்றே முடிசூடி அடிக்கும் கொள்ளை.

'நதி' மூலம் அறியாமல் பேசுகின்றோம்.
நியாயத்தை நாட்டாட்டில் புயலோயாதாம்
இதைமறந்தோம். நோயெவ்வா றூன்றிற் றென்ற
காரணத்தைத் தெரியாமல்... 'ரொனிக்' உட்கொண்டால்
வதங்கிய 'மெய்' பிழைக்குமென்று வருவோர்க்கெல்லாம்
மடிவிரித்து வெறுங்கையோடுள்ளோம்! 'போராம்
நதிமூலம்' அறிந்துள்ள தாய்நா டேநீ...
இனியுமூமையாய்க் கிடந்தால் நாமா வாழ்வோம்?

*— அருணன் —*

## அழகின் அவலம்

மண் இடைத் தேன் தெறிக்க மொட்டவிழ் நேரம் அந்தி
விண்ணிடைத் தோன்றுமந்த வெண்ணிலா முகம் சிரிக்கும்
கண் இடைச்செந்நீர் சிந்தக் கலங்கிட்டதாயைப்பார்த்துத்
துண் ணென மனம் துடிக்கும் விடியுமுன் கடலில் வீழும்.

உண்மையாய் உவகைதுள்ளும் உள்ளத்தைப் பார்க்கத்திங்கள்
வெண்மழை கொட்டும் ராவில் மழலையும் மகிழ்ந்து துள்ளும்
அன்னையை இழந்து ஆவின் பாலினைக் குடித்த பிள்ளை
அகதியென்றறிந்த திங்கள் அழுதிடும் முகம் கறுக்கும்.

புன்னகை இழந்து நிற்கும் பூமியை மணம்முடிக்கப்
பொன்னகைக் குவிய லோடு பௌர்ணமி நிலவு ஏங்கும்
ஆசையாய் அமுத அன்பைச் சீதனம் தர நினைக்கும்
அழைத்திடத்துடிக்கும் பூமி இருட்சேலை இழுத்துமூடும்

உறவுகள் பிரித்து ஊமை உணர்வுடன் உயிர் தரித்த
உடல்களைக் காண வானம் உடுக்கண்ணைத் திறக்கும் நேரம்
புதிய இப்பூமிபெற்ற விதவைகள் கண்டு ராவில்
மதிவர மறுக்கும் பூமி விதவையாய் ஏங்கி நிற்கும்.

நிம்மதி இழந்த மக்கள் நிலையினைக் கண்டு பாரும்
நிம்மதி கேட்டுக் காற்றை நிலவிடம் தூதனுப்பும்
நிம்மதி இறந்த சேதி கூறிய தென்ற லோடு
அஞ்சலிப் பூக்கள் கொஞ்சம் அம்புலி அனுப்பி வைக்கும்.

அள்ளியே அமுதி றைக்கும் வெண்ணில வன்னை – தென்னம்
பிள்ளையும் வாய் திறந்து பாலெனப் பருகும் – பின்னர்
மெல்லெனச் சிரிக்கு முன்னர் எறிகணை உயிர் பிரிக்கும்
சில்லெனக் கண்ணீர் சிந்தும் சிறுநிலா பனியைத் தூவும்.

பகலிலே மனிதர் செய்த பாவத்தின் கறையைப் போக்க
இரவிலே குளிக்கும் அந்த நிலவொளி தன்னில் பூமி
கடலலை சேலை கட்டும் இருள்வந்து கண்மை பூசும்
சன்னமொன்றுயிர் பிரித்து உதிரத்தால் பொட்டு வைக்கும்.

முகத்திரை கிழித்து வானில் முழுநிலாத் தோன்றும் – கூரை
முகட்டினைத் துளைத்துப்பிஞ்சு முகத்திடை மகிழ்ச்சிதேடும்
உணவுடன் உறவிழந்து உவகையை இழந்துறங்கும்
உயிர்களைக் காணும் உலகில் விடிவிலாக் காலை விடியும்.

*- நவநீதன்*

## புவிக்கு வேண்டும் கவி


மணிக்கூட்டினுக்கும் துடிக்கும் இதயம்வைத்த
மனிதன் தன் இதயத்தை
'மெசினுக்கா' அடகுவைத்தான்?
மூளைவளர்ந்து புவியையுண்டு ஏப்பமிட
இதயம் மலக்கழிவாய் இழிகிறதே.. பார்கண்ணா!
பிணவாடை வீசப்
பிரயாணஞ் செய்கிறது
மனிதம்; நேற்றைவிட மணமின்று கூடியது.
நாளைக்கு இது இன்னும் நாறும்!
மறுநாளோ...
சீழ்வடியும் குஷ்டரோகியாகிக் குளறி அழும்!
யதார்த்தங்கள்... மனிதன்
குரங்காகி நரியாகி
தவளையாய்த் 'தலைகீழாய்க் கூர்ப்பதனை'ச் சொல்லுதுகாண்.
பலியானோர் எண்ணிக்கை பற்றிப் பதறாமல்
கிரிக்கட் ஸ்கோர் சுருண்டால்
கிரீச்சென் றலறிவிட்டு
அறிவால் வளர்ந்தமென்று ஆடுகின்ற என்தங்காய்...
இறந்த மனிதத்துக் கேனடி கொல் மணிமகுடம்?
பசுமை கெட்ட நாற்றினிலா பதிவைத்தல்?
சொல்? சமூக...
அத்திவாரந் தன்னை ஆழமாக்கி... அதன் குடலில்
சத்திரசிகிச்சை செய்து
சதியாய்ப் பெருகி எழும் புற்றுநோயைப் பொசுக்க;
மனிதத்தைப் புடம்போட;
உணர்ச்சி நரம்புகளுள் ஒளிபாய்ச்சி உயிரேற்ற,
இழந்த நிம்மதியை மீட்டெடுக்க,
மனிதத்தைப் பட்டைதீட்ட..., வேண்டும்!
பாரே... என்சொல்லைக் கேள்!!
அணுகுண் டறிவியலைச் சற்று அடக்கி வைத்து
பாவலரைப் போற்றி
'நோபல்' பரிசு கொடு!
கவிதைதான் மனிதத்தைக் காக்கும்!
எழுதவிடு.

*— த. ஜெயசீலன் —*

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூளைக்கு வேலை



மேலே காட்டப்பட்டுள்ள ஓர் சதுரக் காணியில் நடுவில் ஓர் கிணறும் நான்கு தென்னை மரங்களும் காணப்படுகின்றன. ஒவ்வொரு துண்டிலும் சரிசமமாக தென்னையும் கிணற்றுப் பங்குக் காணியும் வரக் கூடியதாக இக்காணியை நான்கு துண்டுகளாகப் பிரிக்க வேண்டும். உங்களால் இயலுமா பாருங்கள்.

— வி. பிரபாகரன் —

(விடை XI ஆம் பக்கத்தில்)

## யானையார்

அந்தக் காலம் ராஜாக்கள்
அமர்ந்து செல்லும் கரியப்பா
இந்தக் காலம் பிள்ளைகளை
முதுகில் ஏற்றும் பெரியப்பா

பீப்பா போன்ற வயிறப்பா
பென்னம் பெரிய ஆளப்பா
சுளகைப் போன்ற காதப்பா
சொல்லைக் கேட்கும் ஆளப்பா

கஷ்டப்பட்டு வேலைகளைச் செய்யும்
காட்டு மனிதன் தானப்பா
நாட்டில் உள்ள மனிதர்களின் நண்பர்
யார் சொல்லப்பா?

— அ டொலன்ரினோ நிலக்சன் —
(ஆண்டு 7,
சில்லாலை, றோ. க. த. க. பாடசாலை)

## எழுத்துக்களின் குணங்கள்

1. மயக்கும் எழுத்து — பூ
2. பறக்கும் எழுத்து — ஈ
3. பல் இழிக்கும் எழுத்து — ஹி
4. அழைக்கும் எழுத்து — வா
5. அனுப்பும் எழுத்து — போ
6. அலறும் எழுத்து — ஆ
7. அதிகார எழுத்து — ம்
8. குறிக்கும் எழுத்து — நீ
9. வெறுக்கும் எழுத்து — சீ
10. உமிழும் எழுத்து — தூ
11. கேட்கும் எழுத்து — தா
12. மாத எழுத்து — தை
13. கனி எழுத்து — மா
14. அழிக்கும் எழுத்து — தீ
15. அணைக்கும் எழுத்து — கை

— த. சுபாஸ்கரன் —
(ஆண்டு 11,
ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தி.).

## நொடிப் பொழுது

1. அனலிலே பிறப்பாள்; ஆகாயத்தில் பறப்பாள். அவள் யார்?
2. அடி மலர்ந்தும்; நுனி மலராது. அது என்ன?
3. அம்மா படுத்திருக்க மகள் ஓடிக்கொண்டிருப்பாள். அவள் யார்?
4. ஆடி ஒய்ந்ததும் அம்மணி வருவாள். அவள் யார்?
5 இருட்டு வீட்டிலே குருட்டு எருமை மேயுது. அது என்ன?
6. ஐந்து அடுக்கு; நான்கு இடுக்கு. அவை என்ன?
7. கொண்டையிலே பூவுண்டு. எடுக்க முடியவில்லை. அது என்ன?

— யோ. ஹம்ஸானந்தி

### விடைகள்

1. புகை. 2. வாழைப்பூ 3. அம்மிக்குழவி. 4. ஆவணி. 5. பெருச்சாளி. 6. விரல்கள். 7. சேவல்

# ஊக்கத்துடன் உழைக்கும் தேனீயின் குடும்பம்

தேனீ, ஈ வகையைச் சேர்ந்தது. தேன் சேர்ப்பதனால் 'தேனீ' என்று பெயருண்டாயிற்று. இது மலர்களில் இருக்கும் தேனைச் சிறிது சிறிதாகக் கொண்டுபோய்க் கூட்டில் சேர்த்து வைக்கும். சேர்த்த தேனை மக்கள் கொள்ளையடிப்பர்.


தேனீ மரங்களிலும், புதர்களிலும், மலையிடுக்குகளிலும் கூடு கட்டும். இதற்குத் தேன்கூடு என்று பெயர். கூடுகள் தட்டையாகவும், வட்டமாகவும், சிறு சிறு அறைகள் அமையப் பெற்றுப் பார்வைக்கு அழகாக இருக்கும். இவ்வறைகள் அறுகோண வடிவமானவை.

ஒரு திறமையான பொறியியலாளனால் கூட அவ்வளவு நேர்த்தியாக ஒரு கூட்டை வடிவமைக்க முடியாது.

### பிராணிகள் உலகம்

தேனீக்களுக்குத் தேனே உணவு. அதன் உடலிலிருந்து வரும் ஒருவகை மெழுகினால் கூடுகட்டி அதில் தேனைச் சேகரிக்கும். தேனீயில் மூன்று வகை உண்டு. அவற்றை 'இராணி ஈ' (படம் 1) 'ஆண் ஈ' (படம் 3) 'வேலைக்கார ஈ' (படம் 2) என்பர்.

தேனீக்கள் தனியே வசிக்க முடியாதவை; ஒரே குடும்பமாகவே வசிக்கும். கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் ஒன்றில் ஒன்று தங்கி வாழும் முறை தேனீக்களுக்கு சிறப்பான இயல்பு.



இராணி ஈ முட்டையிடும். ஆண் ஈயை சோம்பேறி ஈ என்றும் சொல்வர். வேலைக்கார ஈக்கள் தேனைச் சேகரிக்கும்; கூடும் கட்டும்; குஞ்சுகளுக்கு உணவு சேர்க்கும். இவை மிகவும் சுறுசுறுப்பானவை.

காட்டுமக்கள் பானையில் வெண்ணெய் தடவி தேனீக்களை விட்டு, கூடு கட்ட வழி செய்வார்கள். தேன் நிறைந்ததும் கூட்டை யழித்துத் தேனை எடுத்துக்கொள்வார்கள். இக் காலத்தில் தேன் சேகரிக்கப்பல புதிய முறைகளைமேற்கொண்டு வருகின்றனர்.

மலைத் தேனீக்கள் நஞ்சு உடையவை. அவை கொட்டினால் மக்கள் இறந்து விடுவதும் உண்டு. தேனீ வளர்ப்பு நல்ல ஊதியம் தரும். தேன் சுவையானது; நல்ல மருந்தாகவும் பயன்படுகிறது; ஆயுளை வளர்க்கும் என்று சொல்கிறார்கள்.

தேனீக்களைப்போல மக்களும் ஒற்றுமையாக ஊக்கத்துடன் உழைத்து வாழ வேண்டும்.


## கண்டுபிடியுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ளி | சு | பு | கு | மு | ல் |
| வா | ல் | பூ | ரை | மா | மு |
| தி | ஆ | னை | சு | பு | ப |
| த் | அ | ம் | ர | ன் | அ |
| நெ | தெ | லி | வ | லா | க |
| ப | ழை | ர | தி | னை | வே |

மேலேயுள்ள அட்டவணையில் 36 எழு[illegible] ளன. இந்த எழுத்துக்களை வைத்துக்கொ[illegible] ஊரில் உள்ள பதினான்கு மரங்களின் பெயர்க[illegible] லாம். ஆனால் ஓர் எழுத்தை ஒரு தடவை[illegible] படுத்த முடியும். எங்கே பதினான்கு பெயர்க[illegible] பிடியுங்கள் பார்க்கலாம்.

— சுரேஷ் மியு[illegible]

(விடை XI ஆம் பக்கத்தில்)




சிறுவர், சிறுமியரே;... இது ஒரு வார்த்தை விளையாட்டு. மேலே உள்ள வட்டத்தில் ஒன்பது எழுத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்பது எழுத்துக்களையும் நீங்கள் முன்னும் பின்னுமாக எப்படி வேண்டுமானாலும் எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதன் மூலம் உங்களுக்கு நிறையத் தமிழ் வார்த்தைகள் கிடைக்கும். குறைந்தது இருபது வார்த்தைகளாவது உங்களால் உருவாக்க முடியுமா என்று பாருங்கள்.

( விடை XI ஆம் பக்கத்தில் )




## காகத்தின் புத்திசாலித்தனம்

மாரிகாலமும் முடிந்ததாம்
கோடை காலமும் வந்ததாம்
கொளுத்தும் வெயில் வெப்பத்தால்
நீர் நிலைகள் வறண்டதாம்.

கன்னங்கரிய காக்கையும்
தண்ணீர் தேடி அலைந்ததாம்
வீடு ஒன்றின் முற்றத்தில்
பானை ஒன்றைக் கண்டதாம்.

பானையை எட்டிப் பார்த்ததாம்
அடியில் நீரும் இருந்ததாம்
புத்திசாலி காக்கைக்கு
யோசனை ஒன்று வந்ததாம்.

அருகில் இருந்த கற்களை
எடுத்துப் பானையில் போட்டதாம்
பானை நீரும் உயர்ந்ததாம்
மகிழ்வுடனே நீரருந்திப் பறந்துதானே
சென்றதாம்.

— சி. நிலானி —
(ஆண்டு – 5, ஞானாசாரியர் கல்லூரி.)

## கோழியும் பருந்தும் நாயும்

பட்டு வீட்டுக் கோழியது
பத்து முட்டைகள் இட்டது
பக்குவமாய் அதன் மேல்
படுத்து அடைகாத்தது!

பஞ்சு போன்ற குஞ்சுகள்
பத்தும் அவை பொரித்தன
பக்குவமாய் தாயது
பகல் இரவாய்க் காத்தது!

பருந்து ஒன்று வானிலே
பட்டம் போல ஆடியே
பதிந்து பதுங்கி குதித்தது
பறித்து உண்ணத் துடித்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடியடி மனேச்சர்

சஞ்சீவி சிறுகதை

- புத்தூர் விஸ்வம் -

சங்குப்பிட்டி — கேரதீவு ஊடாக மன்னார் பஸ் ஓடிய காலம். பூநகரி வாடியடி சந்தியில் பஸ் தரிப்பு. வாடியடி நகரப்பகுதியையே குளிர்ச்சியாக்கி குடை நிழல் அமைத்தபடி அமைந்திருக்கின்றன ஆலமரங்கள். ஆலமரத்தின் கீழ் அடிமரத்தோடு வயிரவருக்கு கோயில் எழுப்பியுள்ளார்கள். ஆவணி மாதத்தில் வயிரவருக்கான திருவிழா கூட விடிய விடிய வெகு விமரிசையாக நடைபெறும்.

வாடியடிச் சந்தியில் மட்டுவில் நாடு சங்கக்கடை மனேச்சராகப் பணிபுரிந்து கொண்டிருந்தார் கிருஷ்ண பிள்ளை. அவர் பழைய பேர்வழி. ஒரு காதில் பூ; ஒரு காதில் பில் போடும் பென்சில் செருகி வைத்திருப்பது அவர் திருக்கோலம். வண்டி தொந்தியோடு வயிரவ சுவாமியின் மனிதக் கோலமாகக் காட்சியளிப்பார். பார்வைக்கு இரவின் உருவமாக இருந்தாலும் சனங்களோடு அன்பாக நடந்து கொள்வார். எவருக்கும் உதவிசெய்ய வேண்டும் என்ற மனப்பாங்கு உள்ளவர். அதற்காக யாருக்கும் கடன் கொடுக்க மாட்டார். ''கட் அன் ரைற்'' ஆக கதைத்துக் கொள்வார்.

சில வேளைகளில் அவருக்கு கொதி வாறது சனங்கள் அறிந்த இரகசியம். அந்த நேரத்தில் எவரையும் மதியாது பேசுவார். வயிர சுவாமிக்கு முன்னால் இருப்பதால்தான் இந்த மாதிரி உக்கிர தாண்டவம் ஆடுவாரோ தெரியாது. பாவம் மனிஷன். ஒரு சில நிமிடங்களில் கீழிறங்கி பச்சைத் தண்ணீராய் மாறிவிடுவார். அவர் உடலோடு அமைந்த ஒரு குறைபாடு செவிடு- காது கேளாத்தன்மையால் யாராவது குசுகுசுத்தால் உற்றுப் பார்ப்பார். சிரித்தால் போதும் மனுசனுக்கு பத்திக் கொண்டு வரும். விசயம் தெரிந்தவர்கள் அவர் முன் எதற்கும் இலேசாகக்கூட சிரிக்க மாட்டார்கள்.

தாம் செய்வது தவறு என்று அவர் உணர்ந்தே இருந்தார். ஆனால் அவருடைய பிறவிக்குணமான கொதியை மாற்ற அவரால் முடியவில்லை. ''கொதியன் கிருஷ்ணபிள்ளை'', ''செகிடன்'', ''செகிட்டுப்புடையன்'' என்ற மாதிரியெல்லாம் காரணப் பெயர், காரண இடுகுறிப் பெயர்கள் தனக்கு அமைந்து விட்டதைக்கூட, அவர் கேள்விப்பட நியாயமில்லை.

மன்னார் பஸ் வந்து தண்ணீர் தாகத்தை தணிப்பதற்கு வாடியடி பூநகரிச் சந்தியில் நிற்கும் வேளை சனத்தொகைக்கு குறைவில்லை. பக்கத்திலுள்ள தேநீர் சாலைகளைப் பதம் பார்த்த பின்னர் சனங்கள் சங்கத்தையும் மொய்க்கத் தான் செய்தன.

அது புதுவருடப் பிறப்புக்கு முந்திய வாரம். போகும் போது சர்க்கரை வேண்டிப் போவமே என்று நினைத்தவொரு பயணி மனேச்சரை நோக்கி ''ஐயா வெல்லம் இருக்கா?'' என்றார். வெகு வேகமாக. ''இஞ்சை வெந்தயம் இல்லையப்பா'' என்றார் உரத்த குரலில் மனேச்சர்.

அவ்வளவு தான் கூடி நின்ற பயணிகள் பலத்துச் சிரித்து விட்டார்கள். வயிரவர் உக்கிர வேடம் கொண்டார்,

''சும்மா வந்தா தண்ணி வெண்ணியை குடிச்சிட்டு பஸ்சிலை ஏறுங்கோவன். வீணே சங்கக்கடை எல்லாம் சுத்தி அதிருக்கா? இதிருக்கா? அதென்னவிலை? இதென்ன விலை? எண்டு மனிசருக்கு கரைச்சல் தாறியள். இந்த ஜீ.எம்முக்குச் சொன்னனான் கடையை எங்கையன் மாத்தச் சொல்லி'' என்று ஒரு காட்டுக் கத்ததே கத்திவிட்டார்.

ஆனால் அதுக்காக சனங்கள் ஓடி விடவில்லை. பஸ் சாரதி மணியண்ணை பஸ் கோணை அழுத்தி அமுக்கியதால் தான் சனங்கள் ஓடிச்சென்று பஸ்ஸை நிரவிக் கொண்டன.

பூநகரிச் சந்தியில் பிற்பகல் என்றால் கூட்டத்திற்கு குறைவில்லை. சங்கத்தில் வேலை பார்ப்பவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், தபாலக, வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எல்லோரும் தனித்தனியாகவோ கூட்டாகவோ சங்க மனேச்சரை சந்தித்து குசலம் விசாரித்து வேண்டிய பொருள் பண்டங்களை வாங்கிச் செல்வது வழக்கம். அப்போதெல்லாம் கிருஷ்ண பிள்ளை பகிடிகள் பேசி வாய் நிறையச் சிரித்தபடியே அவரவர் கேட்பவற்றைக் கொடுத்து அனுப்புவார், ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக காசு வாங்கி லாச்சியில் போட்டுக் கொள்வதில் தவறமாட்டார். அவர்கள் சினேகிதத்தை பெரிதாய் மதித்தார்: ஆனால் பஸ்ஸுக்கு அவசரமாய் இதை மாத்தித்தாரும் என்று யாரும் அவசரப்படுத்தினால் மட்டும் அவருக்கு பிடிக்காது.



கூடக்குறைய அவசரத்தில் கொடுத்து விடுவன் என்ற பயம் அவருக்கு. இரண்டாந் தரமும் எண்ணிப் பார்த்துத் தான் கொடுப்பார். பஸ்காரனுக்கு இது எங்கை தெரியப் போகுது. அவன் விட்டுட்டுப் போனதுக்காக மனேச்சரைத் திட்டி என்ன செய்கிறது?

ஐந்தரை ஆறு மணியானதும் சங்கத்தைப் பூட்டிக் கொண்டு பக்கத்து அறையில் இராச்சமையலை தன் உதவியாள் சகிதம் தொடங்கி விடுவார்:

''இவரும் யாழ்ப்பாணத்திலிருந்து வாடியடியில் வாடிவிட்ட ஒரு உத்தியோகத்தர் தான். தென்னை வளம் நிறைந்த தென்மராட்சியிலிருந்து வந்ததால் கறித்தேங்காய்களை வரும் போதே கொண்டு வருவார். செலவில் பலே கறார் பேர்வழி. காய்கறிகள்கூட ஆலடிச்சந்தையில் பார்த்துத் தவித்த முயலடித்து கணக்காக வைத்துக் கொள்வார். மனேச்சர் என்பதால் இவருக்குச் சலுகை விலைச் சகாயமும் உண்டு. யாராவதுவேட்டைஇறைச்சி, காட்டுப்பன்றி கொண்டு வந்தால் கொஞ்சம் வாங்கிக் கொள்வதும் உண்டு. முழங்காவில் மனேச்சர் நவரத்தினம் அனுப்பி வைக்கும் இறைச்சியெண்டா நம்பிக்கையுடன் வாங்கிக் கொள்வார். இது தொழில் பார்ப்பதற்கும், சமைப்பதற்கும் சங்கடங்கள் தருவதால் தாவர போசனத்தையே பெரிதும் பேணிக் கொண்டார்.

பூநகரி வாடியடி வீதியின் சருகுகள் சோளகக் காற்றில் பட்டமாகப் பறக்கும் மாதங்களிலும், அடைமழை பொழிந்து வயல்வெளிகள் வீதிகள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கும் மாதங்களிலும் ... கிருஷ்ணபிள்ளை ஓய்ந்து விடுவதில்லை. கடமையே கண்ணாக நேரந்தவறாது சங்கத்தில் காட்சி கொடுப்பார். சனி பிற்பகல், ஞாயிறு மட்டுமே அவர் வீடு செல்லும் தினங்கள், வானம் பார்த்த பூமியாகிய வன்னி மண்ணில் ஐப்பசி, கார்த்திகையில் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று நெல் வயல்கள் காட்சியளிக்கும். தை, மாசி மாதங்களில் முற்றிய நெல்மணிகள் பூமித்தாய்க்கு தலைவணங்கி பொன்னிறமாக ஒளிதரும். விவசாய மக்களின் தேவைகளுக்கேற்ப அந்தந்தக் காலத்தில் வேண்டிய கிருமி நாசனிகள், உரவகைகள் விநியோகிப்பதில் கூட அவர் முன்னிற்பார்.

மாலைப் பொழுதில் வாடியடியில் தங்கியிருக்கும் வேலை பார்க்கும் திருக்கூட்டத்தார், பூநகரியில் வளைந்து வளைந்து செல்லும் வீதிகளில் காற்றுவாங்கச் செல்வதுவும், வயல் வெளிகள், புல்வெளிகள், தரவைகளைப் பார்த்தும் இயற்கையை ரசிப்பதுவும் தினசரி நிகழ்வுகள். சிலர் பூநகரி கடல் காற்றுப்பட்ட கற்பக தரு தரும் பதநீர் நாடிச் செல்வர். சிலர் கதை கண்ட இடம் கைலாசம் என கூடியிருந்து கதைகள் பேசி அன்றைய பொழுதை 'கதை கண்ட கைலாசபுரி' யாக்கிக் கொள்வர்.

எங்கள் கிருஷ்ண பிள்ளை கூட கதை கண்ட இடம் கைலாசம் என்று திருக்கூட்டத்தில் கதாநாயகனாகிவிடுவார். நகைச்சுவையாக கிண்டல் பண்ணிக் கதை சொல்வதிலும் அவர் சமர்த்தன் என்பதால் ''நகைச்சுவை மணி'' ''மாயக் கிட்டினன்'' என்ற மறு நாமங்களும் நண்பர்களிடையே உலாவியது. நகைச்சுவைக் கதைகள் பேசுவதில் மட்டுமல்ல நகைச்சுவையாக காரியங்களைச் செய்து விடுவதிலும் தான் சமர்த்தன் என்பதை பல தடவைகளில் நிரூபித்துள்ளார்.

எங்கள் கிருஷ்ண பிள்ளைக்கு பிடிக்காத ஒரேயொரு பேர்வழி கிளைக் குழுத் தலைவர் பரமர். பரமரைப் பற்றியும் கொஞ்சம் சொல்லத்தான் வேண்டும். பரமர் அந்த ஊரைச் சேர்ந்தவர். தன்னை வன்னி மண்ணின் காவலன் என்று பிரகடனப்படுத்தியவர். ''யாழ்ப்பாணத்தான் வந்து சுரண்டிச் செல்கிறான்'' என்பது பரமரின் சித்தாந்தம். யாரையும் சந்தேகக் கண்ணோடு தான் பார்ப்பார். போகும் போது கொண்டு போகின்ற பார்சல்கள், பெட்டிகள் எதுவும் அவர் கழுகுக் கண்களிலிருந்து தப்ப முடியாது. 'எக்ஸ்ரே' கண் கொண்டு உள்ளுக்கு இருப்பது என்ன என்பதையும் ஊகித்து கதை கட்டி விடுவார். இதனால் பல உத்தியோகத்தர்கள் பல வித சங்கடங்களுக்குள் மாட்டிக் கொண்டதும் உண்டு. ஏன் ஆனானப்பட்ட கூட்டுறவுப் பரிசோதகர் மாட்டின் ஐயாவே ஆப்பிழுத்த குரங்கு போல மாட்டிக்கொண்டு தவித்தார் எனறால் சாதாரண பேர் வழிகள் பற்றிக் கூறவும் வேண்டுமா?

பிறகு அவர் இவரை மாட்டி பழிதீர்த்துக்கொண்ட கதையும்சொல்லப் போனால் விக்கிரமாதித்தன் கதையாய் நீண்டுவிடும்.

இருந்தாலும் எங்கள் கிருஷ்ணபிள்ளை பரமரை எல்லோர் முன்பும் தலை குனிய வைத்துத் தான் ஒரு 'மாயவன்', 'நகைச்சுவை மணி' என்பதை நிரூபித்தது அலாதியானது.

அன்று சனிக்கிழமை. சங்கங்கள் அரை நேரம். கந்தோர், வைத்தியசாலை எல்லாம் முடித்துக்கொண்டு சனக்கூட்டம் வாடியடியில் பஸ்ஸுக்கு முண்டியடித்துக் கொண்டிருந்தது. மன்னார் — சங்குப்பிட்டி பஸ் இப்படியான நேரத்தில் கையை விட்டுவிடும். தூரத்திலிருந்து வரும் பயணிகளே தொங்கிக் கொண்டு போகும்போது வாடியடியில் மறித்துச் சனத்தை வாரிக்கொள்ள எந்த பஸ் சாரதிக்கு மனம் வரும்?

திருக்கேதீச்சரம் தீர்த்தக் கரைபோல சனங்கள் வாடியடியில் பஸ்ஸுக்கு தவம் கிடக்கின்றனர். கிருஷ்ணபிள்ளையும் அவசர அவசரமாக கணக்கை முடித்து சங்கக் கந்தோரில் காசைக் கட்டிப் போட்டு திரும்பி வந்து தனது கிளைக்குப் பக்கத்து அறையைத் திறந்து தனது பார்சல்களைக் காவிக்கொண்டு பஸ்ஸுக்குதவம் கிடக்கிறார். கூட்டத்தோடு சங்கமமாகிறார். சொல்லி வைத்தாற் போல எங்கிருந்தோ வந்து சேர்கிறார் கிளைக்குழுத் தலைவர் பரமர்.

''மனேச்சர் உது என்ன பார்சல்?'' என்று வாங்கி அமர்த்திப் பார்க்கிறார். குறை சொல்லப்படாது சந்தோசமாகத்தான் கதையை ஆரம்பிக்கிறார் பரமர். ஆனால் அவரது கதையும் பரிசோதனைகளும் கிருஷ்ண பிள்ளையின் பதிலாலும் பக்கத்தில் நிற்பவர்களின் நக்கல் சிரிப்புகளாலும் ஆக்ரோஷம் அடைந்தன.

அது சிறிமாவோ காலம். புடைவை இறக்குமதிகளுக்கு பலத்த கட்டுப்பாடு. அதனால் வெளிநாட்டு 'ரவுசர் மற்றீறியல்' கிளைக் குழுக்கள் ஊடாக லொத்தரில் கொடுக்கப்படுகின்ற காலம். பெரிய பெரிய உத்தியோகத்தர் எல்லாம் சங்கத் தயவை நாடிவருகின்றதொரு காலகட்டம். அன்றைய தினம் காலையில்தான் பத்து ரவுசர் மற்றீறியல்களைக் கிளைக்குழு லொத்தர் போட்டு விநியோகித்தது பரமண்ணைக்குத் தெரியும். அவரே முன்னின்று நடத்தி வைத்த கைங்கரியம் அது. லொத்தரில் விழுந்தவர்களிடம் மனேச்சர் சுருட்டிப் போட்டார் என்பதே பரமரின் சந்தேகம். அதனால் தான் இந்தப் பரிசோதனை.

'மனேச்சர் நீர் இப்பிடியே நில்லும். நான் போய் ஜீ. எம். ஐக் கூட்டிவாறன். இது ரவுசர் மற்றீறியல் தான்'' என்று சத்தமிட்டவாறே பரமர் ஒரு சைக்கிள் வண்டியில் சங்க அலுவலகம் நோக்கி ஆனாய்ப் பறக்கிறார். சற்று நேரத்துக்கெல்லாம் திரும்பி வருகிறார். ''இதோ ஜீ. எம்மும் பஸ் நோக்கி வருகிறார் அப்ப பார்ப்பம்'' என்கிறார். ஜீ. எம்மும் வந்து விடுகிறார். சனங்கள் வேடிக்கை பார்க்க வளைத்துக் கொள்கிறார்கள். கிருஷ்ணபிள்ளையும் விட்டபாடாய் இல்லை.

''பார்சலை அவிழ்க்கக் கூடாது.ஐயா...அது என்னை அவமதிக்கிற மாதிரி இருக்கும் நான் இதற்கு விடமாட்டன்'' என்று பாசலை மறைக்க முனைந்தார் கிருஷ்ணர்.

ஜீ. எம்மும் அவரது கூற்றை ஆமோதிப்பது போல ''பரமண்ணை இது பஸ்நிலையம். ஒருதரின்ரை பார்சலை அவிட்டுப் பார்க்க எனக்கு அதிகாரமில்லை. அவர் விரும்பித் தந்தால்தான் அவிட்டுப் பார்க்கலாம். இல்லாவிட்டால்நான் ஒன்றும் செய்யஇயலாது''என்கிறார்.

பரமரின் கோவம் ஜீ. எம் பக்கம் திரும்புகிறது.''நீங்கள் எல்லோரும் சேர்ந்த கள்ளர். ஒருத்தருக்கு ஒருத்தர் துணை போறியள். இல்லாட்டா இப்படி சொல்லுவியளே'' என்று உரத்துக் கத்தினார்.

அதில் ஒரு சமாதானத் தூதுவர் மனேச்சரைப் பார்த்து ''உம்மாலை ஜீ. எம். கூட வம்பிலை மாட்ட வேணடியிருக்கு. குடுங்கோ பார்சலை அவிட்டுப் பார்க்கட்டும்'' என்றார்.

''என்ன அவிட்டுப் பார்க்கிறது. நான் சொல்லுறன் உதுக்கை காலமை லொத்தரில் போட்ட ரவுசர் மற்றீறியல் இரண்டு மூன்றுகிடக்கு... காலமை அவங்களோடை கண்ணடிச்சு சிமிட்டும்போதே நான் கவனிச்சனான்'' என்று புறுபுறுத்தார் பரமர்.

கிருஷ்ணபிள்ளை ''ஐயா நீங்க அவிட்டுத் தான் பாருங்கோ'' என்று ஜீ. எம். பக்கம் பார்சலை நீட்டவும் யாரோ வேண்டி விரைந்து அதை அவிழ்க்கவும் சரியாக இருந்தது.

கோயிலடியில் தலையில் தேங்காய் அடித்துடைக்கும் திருநாவுக்கரசு சுவாமியை சனங்கள் எட்டி எட்டிப் பார்ப்பதற்கு முண்டியடித்தது போல இங்கும் ஒருவர் தோளில் ஒருவர் கைபிடித்து எட்டி எட்டி ஆவலோடு பார்க்கின்றனர்.

அவிட்ட பார்சல் வழியே பிழிந்த தேங்காய்ப்பூ, வாழைக்காய்த் தோல், கத்தரிக்காய் மூழ்; மாயவன் கிருஷ்ணபிள்ளை ஒரு புன்சிரிப்போடு தலை நிமிர்த்துகிறார்.

மாயக் கிட்டினன் மிடுக்கோடு ''ஐயா ஆட்டுக்கிடாய்க்கு வாராந்தம் இப்படி நான் கொண்டுபோறது வழக்கம்'' என்றார் கிருஷ்ண பிள்ளை.

பரமர் பரம்பொருளாக மாறி பரமன்கிராய் ஒழுங்கை ஊடாக திரும்பிக்கொண்டிருக்கிறார். அவர் தலைக் கறுப்பு மறையவும் கிளிநொச்சி — சங்குப்பிட்டி பஸ் வந்து நிற்கவும் சரியாக இருக்கிறது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை உலுக்கிய இரு பெரும் குண்டு வெடிப்புகள்

உண்மைச் சம்பவங்களின் தொகுப்பாக்கம் இத்தொடர்

அத்தியாயம் 2

அமெரிக்காவை உலுக்கிய இரு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றிய தகவல்களைத் தரும் விறுவிறுப்பான கட்டுரைத் தொடர் இது.

பழைய கேஸ்களில் துப்பறியும் தனது புத்தியை நுழைத்துத் துழாவிக் கொண்டிருந்த டொனால்ட் சடோவ் கணகணத்த தொலைபேசியை கையிலெடுத்தான். உலக வர்த்தக நிலையத்தில் குண்டு வெடித்த சேதி சுடச்சுடக் கிடைத்தது.

சம்பவ இடத்துக்கு விரைந்த அவன் மீட்பு நடவடிக்கைகளில் தீவிரமாக இருந்த பலருக்கும் தனது ஆலோசனையையும் ஆதரவையும் வழங்கிக் கொண்டான்.

எங்கோ சற்றுத் தொலைவில் வீதியில் நடக்கும் அல்லோலகல்லோலங்களை ரசித்தபடி நின்றனர் குண்டை ஏவியவர்கள். விரையும் தீயணைப்புப் படையினரும், அம்புலன்ஸ்களும், வாகனங்களும், படையினரும் அவர்களின் கண்களுக்கும் மனதுக்கும் விருந்தாகின. எத்தனை லட்சம் லட்சம் மக்கள் கூடும் நியூயோர்க்கில் அவர்கள் இனிச் சாதாரண மனிதர்கள் ஆகிவிடலாம்.

அமெரிக்காவையே பழி வாங்கிவிட்ட பெருமிதம் அவர்களிடம் பிறந்தது. வரலாறு காணாத அக் குண்டு வெடிப்பின் விளைவின் விவரங்களை மேலும் அறிய அவர்கள் துடித்தனர்.

புகை மூட்டம் அடங்க அடங்க டொனால்ட் தளங்களை நெருங்கி ஆராய்ந்தான் குண்டு வெடித்த இடங்களில் மலைபோலக் குவியும் இடிபாடுகளுக்குள் ஒரு குண்டூசி கூட பெறுமதிமிக்க தடயம் ஆகலாம். ஆனால் அதை இனம் காண ஞானக்கண் வேண்டும்.

சனி, ஞாயிறு நாள்களிலும் டொனால்ட் குழுவின் தேடல் தொடர்ந்தது. குண்டு வெடித்த இடத்தில் கிடந்த இரும்புத் துண்டுகள் கூட ஆராயப்பட்டன. நாள்கள் கழியக் கழிய சலிப்புத் தட்டாமலா போகும்? குவிந்து கிடக்கும் தொன்கணக்கான அழிவுகளில் எதைத் தடயம் என எடுப்பது?

சூழ உலவும் லட்சக்கணக்கான மக்களில் எவரை குண்டு வெடிப்பின் சூத்திரதாரி என்பது? அகப்பட்டவரையெல்லாம் வாரிச் சுருட்டி அடைத்து — கதை ஜோடிக்க இது என்ன ஸ்ரீ லங்காவா? எனவே தொடர்ந்தும் வலுவான ஆதாரங்களைத்தேடியேஆக வேண்டிய நிலைமை.

அதிகம் சேதமடைந்த வாகன உதிரிப்பாகங்களை ஆராய்ந்தனர் அவர்கள், ஒவ்வொரு உலோகத் துண்டும் எந்த வாகனத்தின் எந்தப் பகுதி எனவும் அது என்னமாதிரி உருமாறி இருக்கிறது என்பதையும் ஆராய்வது சற்றுச் சிரமமாகவே இருந்தது.

சளைக்காத தேடல் — குண்டு கொண்டுவரப்பட்ட வாகனத்தின் கடினமான உருக்குப்பாகங்கள் அடியோடு உருமாறி இருப்பதைக் காட்டின. அவ்வாறான சில துண்டுகளை கற்பனையில் வளைத்துப் பொருத்தி ஒரு வாகன உதிரிப்பாகத்தை மண்டைக்குள் உருவாக்க முனைந்து கொண்டிருந்தான் டொனால்ட்.

எரிந்தும் கருகியும் உருகியும் கிடந்த உருக்குச் சட்டமொன்றில் சில இலக்கங்களை அடையாளம் கண்டு கொண்டான் அவன். அவை தெளிவாக இல்லைதான் எனினும் சாத்தியமான இலக்கங்களைக் குறித்துக் கொண்டான்.

மீதி வேலையை வாகனப் பதிவுக் கணனிகள் பார்த்துக் கொள்ளும் என்ற நம்பிக்கைதான்.

★ ★ ★

குண்டு வெடித்ததுமே இது இன்னாரின் சதி எனச் சற்றும் ஆராயாது அறிவிக்கும்நிலைமையில் அமெரிக்கா இல்லை. அறிக்கைகளை வெளியிடும் போது அங்கே ஆதாரங்களும் — நிதானமும் அவசியமாகிறது.

வாகனத்தின் 'செசி' இலக்கம் கிடைத்து விட்டது. அதைத் தொடர்ந்து அது ஒரு 'போட் எக்னோலைட்' வான் எனக் கண்டு பிடிக்கப்பட்டது. வாகனங்களை வாடகைக்கு விடும் றைடர் நிறுவனத்திடம் அது இருந்ததும் தெரிய வந்தது. FBI அதிகாரிகள் றைடரை நெருங்கியிருந்தார்கள். எதிர்பார்த்ததை விடச் சுலபமாக தடயங்கள் கிடைக்கத் தொடங்கின. முடிச்சுக்கள் விடுபட்டன.

குண்டு வெடிப்புக்கு 4 நாள்களுக்கு முன்னர் அந்த வானை 400 டொலர் வைப்புத் தொகை செலுத்தி மொகமட் சலாமி என்பவன் வாடகைக்கு எடுத்துப் போயிருந்தான். அவனது சாரதி அனுமதிப்பத்திர விவரங்கள் அங்கே இருந்தன. அவனது விலாசம் 'இஸ்லாமிய கலாசார' நிலையம்' என இருந்தது.

மூன்று நாள்கள் கழித்து — அதவாது குண்டு வெடிப்புக்கு முதல்நாள் — அவன் மீண்டும் றைடரிடம் வந்திருந்தான். வாடகைக்குப் பெற்ற வாகனம் களவு போய் விட்டதாக கூறி தனது வைப்புத் தொகையான 400 டொலர்களைக் கோரினான். பொலீஸ் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்என றைடர் நிறுவனத்தார் எதிர்பார்த்தனர். பொலீஸ் அறிக்கை கிடைக்கும் வரை அவன் காத்திருந்தான். அவனது நிலமையில் 400 டொலர் பெரிதாக இருந்தது. மறுநாள் குண்டு வெடித்தது. அதில் தமது வாகனம்தான் அடிபட்டது என றைடர் நிறுவனத்தார் நினைக்கவில்லை.

இரசாயனப் பகுப்பாய்வாளர்கள் குண்டு வெடித்த இடத்தை ஆராய்ந்து வெடிமருந்தின் தன்மையை ஊகித்துக் கொண்டிருந்தனர். படப்பிடிப்பாளர்கள் படங்களைப் பிடித்துத் தள்ளினர். குண்டு வெடித்த இடத்தில் ஏற்பட்ட உடைவுகள் வெடிப்புகள் ஆராயப்பட்டன. பலகுழுக்கள் தடயங்களைத் தேடின. இடிபாடுகள் அங்குலம் அங்குலமாக ஆராயப்பட்டன. தீயணைப்புப் பிரிவினரின் உதவிப் பணிகள் அங்கே 28 நாள்கள் தொடர்ந்தன.

குண்டு வெடித்து ஒரு வாரம் கழிந்தது. எல்லாம் சுமுகமாக இருந்தது. மொகமட் சலாமி மீண்டும் றைடரிடம் வந்தான். அவன் வைப்புத்தொகையை மீளப் பெறுவதற்கான கருமங்களில் ஈடுபட்டான். றைடருக்கு வரும் தொலைபேசி அழைப்புகள் — அங்கிருந்து செல்லும் அழைப்புகள் என மிக பிஸியாக இருந்தது அந்த அலுவலகம்.

கருமபீடத்தில் புதிதாக அமர்ந்திருந்த ஆளோ சுறுசுறுப்பாக இயங்கவில்லை. அவனுக்கு எரிச்சலாக இருந்தது. கடைசியில் தனது 400 டொலர்களையும் பெற்றுக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியெறினான்.

அவன் முகத்தில் வெற்றிப் பூரிப்பு. விஸா தயாராக இருந்தது. நண்பர்கள் இருவரும் கிடைத்த பணத்தைக் கொண்டு டிக்கெட்டைப் பெற்று ஏற்கெனவே அமெரிக்காவை விட்டு வெளியேறி விட்டார்கள். டிக்கெட்டைதானும் வாங்கிக் கொண்டு நாளையே அமெரிக்காவை விட்டு வெளியேறி விடலாம்.

1988இல் 5 வருட விஸாவுடன் அமெரிக்கா வந்திருந்த மொகமட் சலாமிஒரு ஜோர்தானியன். அவனுக்கு அமெரிக்காவில் சில முஸ்லிம் நண்பர்களின் கூட்டுக் கிடைத்திருந்தது. அவன் படித்தவன்தான். ஆனால் பட்டப் படிப்பை எட்டாதவன்.

அவனது நண்பன் நிடால் ஐயட் 1967 இல் பிறந்த ஒரு பலஸ்தீனியன். அமெரிக்காவில் அவனுக்கு நிரந்தரக் குடியுரிமை இருந்தது. அவன் இரசாயன பொறியியல்துறைப் பட்டதாரி ஆவான். முஸ்லிம்களுக்கு உலக நாடுகளில் –குறிப்பாக அரபுப் பிரதேசங்களில் — இழைக்கப்படும் அநீதிகள் குறித்து இவர்கள் அதிருப்தி அடைந்திருந்தார்கள். ஒரு குண்டை வெடிக்க வைத்து அமெரிக்காவின் விண்ணை முட்டும் கட்டடங்களில் ஒன்றைத் தகர்க்க வேண்டும் என்பது அவர்களின் திட்டம்.

1992 செம்டெம்பர் முதலாம் திகதியன்று பாகிஸ்தானிலிருந்து அமெரிக்காவில் இறங்கினான் 25 வயதான ராம்ஸி யூசுப். இன்னும் சில முஸ்லிம் இளைஞர்கள் இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

இவர்களுக்கு வங்கிக் கணக்குகள் அமெரிக்காவில் திறக்கப்பட்டன. ஒரு லட்சம் டொலர் வரையான வெளிநாட்டுப் பணம் கணக்குகளில் புரண்டது. அமெரிக்க உல்லாச வாழ்வில் பணத்தோடு இவர்கள்......

★ ★ ★

நானூறு டொலர்களை பொக்கட்டில் பத்திரப்படுத்திக் கொண்டு வெளியேறிய மொகமட் சலாமியை பல FBI அதிகாரிகள் மொய்த்துப் பிடித்துக்கொண்டனர். கருமபீடத்தில் காத்திருந்த புதிய காசாளர்கூட ஒரு FBI அதிகாரிதான் என அவன் அறிந்திருக்கவில்லை.

இவ்வளவு விரைவாக ஒரு சூத்திரதாரி அகப்படுவான் என அதிகாரிகள் எதிர்பார்க்கவேயில்லை. அவன் கைது செய்யப்பட்டு ஒரு மணி நேரம் கழித்து அவனது இருப்பிடத்தில் துருவித் துருவி ஆராய்ந்த நிபுணர்கள் மேலும் பல தகவல்களைப் பெற்றிருந்தனர். அவனது நண்பர்கள் எகிப்திலும், பாகிஸ்தானிலும் போய் நிம்மதியாக இறங்கி இருந்தனர்.

**-மு. சிவநேசன்-**

மார்ச் 14 அன்று அதிகாலை அபோஹலிமா என்ற நண்பன் எகிப்தில் தனது வீட்டில் வைத்து எகிப்திய இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டான். குண்டு வெடித்துப் பதினாறாம் நாள் — பல ஆயிரம் மைல்கள் தொலைவில்—பிடிபட்ட அவனது நிம்மதியான தூக்கம் அப்போது கலைந்தது.

பத்து நாள்கள் அடியுதை பட்ட அவனிடம் பலகேள்விகள் கேட்கப்பட்டன. கண்கள் கட்டப்பட்டு சங்கிலியால் பிணைக்கப்பட்ட அவனை ஏற்றிய விமானம் மார்ச் 24ஆம் திகதியன்று நியூயோர்க்கின் விமான நிலைய ஓடுபாதையைத் தொட்டது.

இஸ்ரேலுக்கான அமெரிக்க ஆதரவு தளர்த்தப்படல் வேண்டும் என்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் குண்டுவெடிப்பை நடத்தியமைக்கான ஆதாரங்கள் கிடைத்தன.

அதுசரி அமெரிக்காவில் வெடிப்பொருள்களை எங்கே இவர்கள் பெற்றுக் கொண்டார்கள்?

சந்தையில் சாதாரணமாகக் கிடைக்கும் மலிவான மூலப்பொருள்களைக் கொண்டே இவர்கள் குண்டைத் தயாரித்தனர். அதுவும் ஓர் இரசாயனம் படித்த சாதாரண மாணவனுக்கு இருக்கும் அறிவு அதைத் தயாரிக்கப் போதுமானதாக இருந்தது. இவர்களுடன் ஓர் இரசாயன பொறியியற்துறை பட்டதாரியே இருந்தது வாய்ப்பாகி விட்டது.

தேவையான இடங்களை வாடகைக்குப் பெற்றனர். உலக வர்த்தக நிலையத்துக்கு அப்பால் ஹட்சன் ஆற்றோரம் இவர்களது களஞ்சியம் இருந்தது. பத்து அடி நீளம் பத்து அடி அகலமான இடம் அது. அங்கே இவர்கள் 450கிலோயூரியா, 475 லீட்டர் நைத்திரிக் அமிலம், 275 லீட்டர் சல்பியூரிக் அமிலம் ஆகியவற்றையும் திரி, சிறிதளவு வெடிஉந்து பொருள்கள் என்பவற்றை

(XIஆம் பக்கம் பார்க்க)

---

வீதியில் வைத்தே பலரின் விதிகள் நிர்ணயிக்கப் படுகின்றன. வீதி ஒழுங்கு மீறலே இவர்களின் தலைவிதிகள் மாறக் காரணம் ஆகிறது.

இன்று வீதிக்கு இறங்குபவர்களில் பெரும்பாலானோர் இந்த ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடிப்பது இல்லை. இது குறித்து உரிய அறிவுரை பெறக்கூட சந்தர்ப்பங்களும் அவர்களுக்கு இல்லை: பலருந் பரம்பரைக் கேள்விஞான அடிப்படையில்தான் வீதி விதிகளை அறிந்து கொண்டுள்ளனர்.



வாகனம் செல்லத் தடை

பல்வேறு சோலி சுரட்டு சிந்தனைகளுடன் வீதிக்கு இறங்கும் பலரின் கவனம் இன்று வீதியின் மீதே இருப்பதில்லை. வேலியே பயிரை மேயும் சந்தர்ப்பங்களும் கூட இங்கு நிறையவே உண்டு.

## திருத்தாத வீதிகள்

குடாநாட்டின் வீதிகள் பெரும்பாலும் திருத்தப்பட்டாலும்திருந்தாத நிலையில்தான் உள்ளன. பிரதான வீதிகளின் அகலம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. எனவே போக்குவரத்து நிலமைகள் விரைவில் மோசமடையக் கூடும். விபத்து விகிதமும் அதிகரிக்கக்கூடும்.


அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களுக்கென வந்து யாழ். முற்றவெளியை நிறைத்த வாகனங்களின் எண்ணிக்கை ஏராளம். அவை அத்தனையும் வீதிக்கு இறங்கினால் யாழ்ப்பாண வீதிகளில் மக்கள் இறங்கவே அஞ்ச வேண்டும். அவற்றின் உடல் நிலையும்—வீதிகளின் நிலமையும்தான் அச்சத்துக்குக் காரணம்.



இடப்பக்கம் திரும்பத் தடை

நிறையவே வாகனங்கள் யாழ் வருகின்றன எனப் பெருமைப்பட ஏதும் இல்லை: வீதியின் நிலமையும், வீதிக்கு வரும் மக்களின் அறிவியல் நிலமையும், முதலில் அவசியம் மாற வேண்டும்.

அண்மைக் காலமாக இங்கு துவிச்சக்கரவண்டிகளின் பாவனை வெகுவாக அதிகரித்து வந்திருக்கிறது. பாடசாலைகள், டியூட்டரிகள், கடைத்தெருக்கள் என எங்கு பார்த்தாலும் சைக்கிள் மயம். பலமைல்கள் நடந்துபோய் படித்தகாலம் மலையேறி விட்டது. இந்தக் காலத்தில் முளைக்க முதல் சைக்கிள் வேண்டும் என அடம்பிடிப்பு என்று அலுக்கிறார்கள் வயதான



வலப்பக்கம் திரும்பத் தடை

வர்கள்.

இப்படி அலுப்பதை விடுத்து இளசுகளுக்கு வீதியில் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளைப் பற்றித் தெளிவாகக் கற்றுக்கொடுப்பது பயன் தரத்தக்கது. வீதியை அடைத்துக் கொண்டு பலபேர் சைக்கிளில் — தோளில் கை போட்டபடி — கலகலத்துக் கொண்டு செல்வது சர்வ சாதாரணமான காட்சி.

இப்படிச் செல்வது சில

ஆண்டுகளுக் முன்
தடைக்கு வந்த போது
தரப்பினர் ஆரிப்பாட்
நடத்தவும் முனைந்த
அங்கே அத்தவர்க
ஏற்படும் இடைஞ்சல்
பற்றி எவரு கவலைப்
வில்லை,

முன்பெல்லாம் சில பிர
பாடசாலைகள் தமது
லூரி மாவர்கள்
கிளில் இரர் போக
கூடாது எறும் —
கருகே செலக்கூடாது
றும் விதிமுறைகளை நல
முறைப்படுன. இவற்
மீறும் மர்வர்களை
காவது ஆர் ஒருவரே
மாணவ லைவர்
வரோ கண்டால் அ
களுக்குப் பாடசாலைப்
வைத்து தடனை வழ
கப்படுவதுவழக்கம்.

சீருடைபக் கண்டு
இறங்கிடியகாலம்
சைக்கிள்ாரில் இரு
இருவர் பயம் செய்
தடை யெப்பட்டிரு
காலம் —பாற்காரன்



U முடக்குதிரும்பத் தடை

சீருடைய தூரத்
கண்டு —பொலீஸ் எ
கருதி—இறங்கி ஓடிய கா
கள் பல பரியவர்களு
இன்னும் நினவில் இ
கும்.

போக்குவத்தில் அ
மைக் காலங்களில் ஏற்ப
இடைஞ்சல்கள் இன்று
விதிகளை நடைமுன



முந்திச் செல்லத் தடை

படுத்த டம்தர
மாட்டா.

இன்று நகருக்குள்
சைக்கிள்க ஒன்றன்
ஒன்றாகத்தன் வரல்
கும் என்று நிபந்த
போட்டால்கியூ பல
கள் நீண்டுவிடும். ந
எட்டப் பல மணித்தியா
கள் பிடிக்கும்,

### பொலீஸாரின் கேள்வி இது

சோதனைச் ச
யென்றில் நின்ற ஒரு
ஸார் ஒரு மோட்டார்
ளோட்டியை துருவி
''அய் ஹெல்மெட்?''
ஹெல்மேட் போட்ட
என ...... காலம் அ
என்றால் விதியை என்
பது? அது மட்டுமா
மெட்டை கழற்றிக்கொ
—மோட்டார் சைக்
உருட்டிக் கொண்டு —
தியை கடக்கும்படி
டளையிட்டார்.

வந்தவர் முழித்



ஒலி எழுப்பத் தடை

வழுக்கும் முட்டியை
படிப் பிடித்துக் கெ
எந்தக் கைகளால்
டார் சைக்கிளை உ
வது?

சாவடியில் நிற்கும்
யினரை — தாமாகவே
திக் கொண்டு பந்தம்
கும் மக்களும் இருக்கத்
செய்கிறார்கள். ம
குழந்தைகளை மோட
சைக்கிளில் ஏற்றிக்கொ
வரும் ஒருவர் சாவ
நெருங்கியதும்
கொண்டே தொப்
கழற்றுகிறார்: த
அடுத்தவர்களினதும்
ருக்கு உத்தரவாதம்
மறுத்து இவர் மரிய
அதிகம் செலுத்துகிற

இப்படி முட்டா
இருக்கும்வரை ப
ரைப் பழி சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர்
த போது ஒரு
ஆர்ப்பாட்டம்
முனைந்தனர்.
த்தவர்களுக்கு
இடைஞ்சல்கள்
கவலைப்பட

ாம் சில பிரபல
ள் தமது கல்
வர்களுள் சைக்
ர் போகக்
றும் — அரு
லக்கூடாது என்
றகளை நடை
தின. இவற்றை
வர்களை எங்
யர் ஒருவரோ,
தலைவர் ஒரு
விட்டால் அவர்
பாடசாலையில்
டனை வழங்
வழக்கம்.
யக் கண்டு
ஓடியகாலம்
பாரில் இருந்து
னம் செய்வது
ப்பயப்பட்டிருந்த
பாற்காரனின்



திரும்பத் தடை

ப தூரத்தில்
ாலீஸ் எனக்
கி ஓடிய காலங்
பரியவர்களுக்கு
னைவில் இருக்

த்தில் அண்
களில் ஏற்பட்ட
ள் இன்று இவ்
நடைமுறைப்



செல்லத் தடை

டம் தரவும்

ருக்குள் வரும்
ஒன்றன்பின்
ன் வரல் வேண்
நிபந்தனை
கியூ பலமைல்
விடும். நகரை
மணித்தியாலங்
ம்,
லீஸாரின்
வி இது
னச் சாவடி
ன்ற ஒரு பொலீ
ாட்டார்சைக்கி
துருவினார்.
மெட்?'' (ஏன்
போட்டனி?)
ாலம் அப்படி
தியை என்னென்
ட்டுமா ஹெல்
ழற்றிக்கொண்டு
ர் சைக்கிளை
காண்டு — சந்
க்கும்படி கட்
ர்.
முழித்தார்.



ழப்பத் தடை

முட்டியை எப்
துக் கொண்டு
களால் மோட்
கிளை உருட்டு

நிற்கும் படை
தாமாகவே முந்
டுபந்தம் பிடிக்
இருக்கத்தான்
ள். மனைவி
ள மோட்டார்
ரற்றிக்கொண்டு
ர் சாவடியை
பதும் ஒடிக்
தொப்பியைக்
: தனதும்
ினதும் உயி
ுவாதம் தர
வர் மரியாதை
லுத்துகிறார்.
ட்டார்கள்
ர படையின
சொலி என்ன

# விதியும் வீதியும்!

லாபம்?

### கவலைக்கிடமான வாகனங்கள்

இன்று வீதிக்கு வரும் வாகனங்களில் பலவற்றின் உடல்நிலை கவலைக்கிடமாகவே இருக்கின்றன. முக்கிமுனகி இயலாமல் அவை இழுக்கும்போது ஊதித் தள்ளும் கரும்புகை பின்னால் வருபவர்களை படுகுழிக்குள் தள்ளி விடுகிறது. பின்னால் வருபவர் கண்களை மூடிக்கொண்டும், மூச்சை அடக்கிக் கொண்டும், முகத்தைச் சுழித்துக் கொண்டும் வாகனத்தை செலுத்த முடியுமா?

அதனோடு சேர்ந்து வீதியின் நிலமையையும் ஆட்டிப்படைக்கிறது. வாகனம் போகும்போது வீதிகளில் கிளம்பும் புழுதிப்படலம் அடுத்துவரும் வாகனங்களுக்குச் சிக்கலைத் தருகிறது.

வீதியோரம் இருக்கும் வீட்டுக்கூரைகள், மரங்கள் எங்கும் எதிலும் புழுதிமயம். இப்படிப் புகையையும் புழுதியையும் தினம் தினம் சுவாசிக்கும் மக்களின் கதி என்னாவது? புகைப்பவரை விட இவர்களின் நிலமை மோசமடையக்கூடும்.



சகல வாகனங்களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது

### நாய்களின் இராஜ்ஜியம்

குடாநாட்டில் இருக்கும் நாய்களில் பெரும் பங்கு தெருவில்தான் காலம் கழிக்கின்றன. பிரதான வீதிகளில் கூட அவை மிக பிஸியாக ஓடித் திரிவதும் குடும்பம் நடத்துவதும் நடுத்தெருவில் சொகுஸாகப் படுத்து குட்டித் தூக்கம் போடுவதும் வழக்கம்.

இவற்றைப் பாதுகாக்கப் போய் பல சாரதிகள் மக்களையும் மரங்களையும் மோதி விடுகிறார்கள். அதுவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கோ நாய்களும், ஆடுகளும் மிகவும் சத்துராதிகள். நடு றோட்டில் நின்று அப்பக்கம் போவதா அல்லது இப்பக்கம் பாய்வதா என அவை தாண்டவம் ஆடும். நடக்கப்போவது தெரியாமல் இசகு பிசகாக



பஸ் வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது

வெட்டி, விழுந்து எழும்பி அல்லற்படுவது மோட்டார் சைக்கிள் ஓட்டிகள்தாம்.

எனவே வளர்ப்பு மிருகங்களை வீதிக்கு விடுபவர்கள் விபத்துக்கான பழியை ஏற்கத்தான் வேண்டும்.

பட்டியாக ஆடுமாடுகளை விரட்டி வருபவர்கள் வீதியை அடைத்துக் கொண்டு வருகிறார்கள். தினமும் சில பிரதேசங்களில் இது ஒரு பெரும் தலைவலியாக உருவெடுக்கிறது. வீதியின் ஓர் ஓரமாக



லொறிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது

அவற்றை ஓட்டி வர இவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

வாகனங்களை கண்டாலும் — சாரதிகள் திண்டாடினாலும் — மிருகங்களை ஓட்டி வருபவர்கள் கவலைப்படுவது குறைவு. அவர்கள் வாகனங்களை வேடிக்கை பார்க்கிறார்கள் அல்லது கையாளத் தெரியாமல் ஆடு மாடுகளை கலக்கியடித்து நிலமையை மேலும் மோசமாக்குகிறார்கள்.

வீதியோரம் மாடுகளை மேயக் கட்டுபவர்கள் இருக்கிறார்கள். கயிறு வீதிக்குக் குறுக்கே படுத்திருக்கும் முன் சில் கயிற்றைத் தாண்டியதும் மாடு எழும்பி ஓடும். பின் சில் கடக்க முதல் கயிறு எழும்பி வாகனம் மாட்டுப்படும்.

இந்த நிலைமையில் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகளின் உயிரோடுதான் இவ்வாறு மாடு கட்டுபவர்கள் விளையாடுகிறார்கள்.

இவ்வாறு அடுத்தவர் உயிரோடு விளையாடி — வீதிக்கு இடைஞ்சல் தந்து — அசண்டையாக இருக்கும் மனப்போக்கை மக்கள்



மோட்டார் வாகனங்களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது

தவிர்க்கப் பழக வேண்டும்.

### சாரதிகளின் 'சாமர்த்தியம்'

ஒடுக்கமான வீதிகளில் அடுத்தடுத்து வரும் வீதித் தடைகளில் வளையாத வாகனங்களை வந்த வேகத்திலேயே பாம்பாட்டம் வளைத்து நிமிர்த்தி எடுக்கிறார்களே சாரதிகள், இவர்களுக்கு நோபல் பரிசு தரலாம். தற்சமயம் வாகனம் பரல் ஒன்றில் முட்டிவிட்டால் மன்னிப்புக் கேட்க வேண்டி வரலாம்.

காலம் கடந்த Stop அறிவிப்புகள், 'இறங்கி உருட்டுங்கள்' என்ற உத்தரவுகள் ஆங்காங்கோ தென்படும். அந்தச் சாவடிகளில் இருந்து படையினர் வெளியேறிப் பல மாதங்கள் போயிருக்கும். புதிதாக வருபவர்கள் போவதா நிற்பதா என முழிப்பதில் வீதி மீது கவனம் செலுத்தத் தவறிவிடுகிறார்கள்.

வீதிக்குக் குறுக்கே போடப்பட்டிருக்கும் வேகத் தடைகள் — பிட்டிகள் எல்லா இடங்களிலும் தெளிவாக தெரிவதில்லை. புதிதாக வருபவர்கள் இவற்றில் இடறிய பின்பேவாகனத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள். இவற்றுக்கு மஞ்சள் வர்ணம் பூசி எச்சரித்தால் தேவலை. அத்துடன் அவசியமின்றி எங்கும் வேகத்தடைகள் அமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இப்படியான வேகத்தடைகள் — வீதித்தடைகளால் — வாகனங்களுக்கு தினம் தினம் ஏற்படும் சேதம் கணிசமானது. அத்தோடு விபத்துக்கள் ஏற்படவும் இவை ஏதுவாகின்றன. அப்பாவி



வாகனங்கள் நிறுத்தக் கூடாது

களின் வாகனங்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகின்றன. இதனால் போக்குவரத்துச் செலவீனங்கள் அதிகரிக்கின்றன.

### சாவடிகளில் நடக்கும் குளறுபடிகள்

பிரதான சந்திகளில் அமைந்திருக்கும் சோதனைச் சாவடிகளில் அனை



வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது

வரும் இறங்கி நடப்பதும் — உருட்டி வருவதும் — மேலும் போக்குவரத்து நெரிசலை அதிகரிக்கவே செய்கின்றன. இதனால் சந்திகளில் நாற்றிசையில் இருந்தும் வந்து — பிரியும் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் கூடிய நேரத்தை அவ்விடத்தில் கழிக்கின்றன. இவை இயல்பாகப் போய் வர அனுமதிக்கப்பட்டால் சந்திகளில் நெருக்கடியையும் முட்டுப்பாடுகளையும் தவிர்க்கலாம்.

படையினருக்கு உள்ள இடைஞ்சல்களை மக்களும் மக்களுக்கு உள்ள இடைஞ்சல்களைப் படையினரும் புரிந்து கொண்டு பரஸ்பரம் ஒத்துழைத்தால் வீதிகளில் எழும் பல சிக்கல்களைத் தவிர்க்கலாம்.

சில சாவடிகளில் சோதனை செய்பவர் வலது



ஒற்றை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது

பக்கமாக நிழல் ஒன்றின் கீழ் நிற்பார். வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் அல்லது சைக்கிள்கள் வரும்போது — கடக்கும் சமயம் வெடுக்கென மறித்துத் தம் பக்கம் வரும்படி சைகை காட்டுவார்.

வாகனத்தை — வருபவரை பிழையான பக்கத்துக்கு (Wrong Side) இழுக்கும்போது வீதியை பார்க்க இவருக்கு அவகாசம் இருக்காது. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. பிஸியான இடங்களில் வாகனங்களை வலது பக்கத்துக்கு எடுத்து சோதனை முடித்து மீண்டும் இடது கரைக்கு அனுப்புவது தினம் தினம் சிக்கலாக எழுகிறது.

தற்போது வீதிக்கு வரும் சைக்கிள் ஓட்டிகளின் எண்ணிக்கை அதிகம். அவர்களின் கவனக் குறைவு அதைவிட அதிகம்.

போக்குவரத்துப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, நேரமின்மை போன்ற பல சிக்கல்களுக்கு ஒரே தீர்வு இந்த மிதிவண்டிதான். ஆனால் அதில் வருபவர்களோ ஏதேதோ யோசனைகளில் வருகிறார்கள். திடீரென அக்கம்பக்கம் — பார்க்காமல் சிந்திக்காமல் வீதிக்கு குறுக்கே மறுபக்கம் வருகிறார்கள்.

விபத்து நடந்தபின்பு பிழையை யார் தலையில் எவர் போட்டு என்ன




இரட்டை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது

லாபம்? இழப்பு உயிரோ, ஏகயோ, காலோ, இரத்தமோ என்றாகி விடுகிறது. இப்படித் தவறு செய்பவர்களால் அப்பாவிகளும் அவதானமாக வருபவர்களும் பாதிக்கப்படுகிறார்கள்.

சில பிரதேசங்கள் குழந்தைகளின் குறுக்கு மறுக்கான ஓட்டத்துக்குப் பெயர் போனவை. பெரியவர்கள் — பெற்றவர்கள் குழந்தைகளை வீதியோரம் விளையாடவிட்டு தாம் வம்பளந்துகொண்டு நிற்கிறார்கள். குழந்தை குறுக்கே திடீரென வந்துவிட்டால் வாகனச் சாரதிமீதுதான் பழியும் போட்டு அடித்து நொருக்கியும் விடுகிறார்கள்.

பொதுவாகச் சந்தைப் பிரதேசங்களில் குறுக்கும் மறுக்கும் ஓடிவரும் பெரியவர்களின் தொல்லை பெரும்பாடு. நடுரோட்டில் வாகனத்தை கண்டதும்தான் திடுக்கிட்டு நிற்பார்கள். சிலர் வாகனங்களைப் பற்றிச் சற்றும் சட்டை செய்யாமலே கடந்து போய்விடு




இடப்பக்கம் திரும்பவும்

கிறார்கள். சாரதி பிறேக் போட்டதும் — முறைத்ததும் கூட இவர்கள் அறிய நேரமில்லாத பிஸி. அதையும் இதையும் சுமந்து கொண்டு அந்தரத்தில் ஓடுவார்கள்.

### பெண்மணிகள் சமாச்சாரம்

சேலை அணிந்து சைக்கிளிலும், சாளியிலும் சேலை காற்றில் அசைய வரும் பெண்களின் அழகுக்காட்சி தனிதான். ஆனால் சேலை சில்லுக்குள் அகப்பட்டு குப்புற விழுந்து எலும்பை உடைக்காவிட்டால் சரி. குடும்பமாக மோட்டார் சைக்கிளில் வரும் பெண்கள் இத்தகைய கவனக் குறைவால் குடும்பம் முழுவதையுமே விபத்தில் மாட்டிவிடுகிறார்கள்.

சைக்கிள் ஓடும் பெண்களில் பலருக்கு சைக்கிள் ஓடுவதற்கான தகுந்த பயிற்



வலப்பக்கம் திரும்பவும்

சியோ, பரிச்சயமோ, 'பலன்ஸோ' (சமநிலையோ) இருப்பதில்லை.

திடீரென நெருக்கமாக எதையும் பார்த்து விட்டால் பிரேக்கைப் பிடித்து சைக்கிளின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, அதை வெட்டி விலத்திச் செல்வதற்கு இவர்களுக்குத்



நேரே செல்லவும்

தெரிவதில்லை. திடீரென நெருக்கமாக எதையாவது கண்டுவிட்டால் அந்த அதிர்ச்சியில் என்ன செய்வது என்று தெரியாமல் சடன் பிறேக் 'பிடித்து' நடுவீதியில் பொத்தென்று சைக்கிளை நிறுத்தி, அதி


**அம்பிகா**

லிருந்து பாய்ந்து இறங்கி — சைக்கிள் கால்கள் இரண்டுக்கும் நடுவே கொழுவ — நடுவீதியில் நின்று விடுவார்கள். பின்னால் தமது வேகத்தில் வந்து கொண்டிருக்கும் சைக்கிள்காரரோ, மோட்டார் சைக்கிள்காரரோ, வேறு வாகன ஓட்டியோ, முன்னால் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் பெண்மணி திடீரென நடுவீதியில் 'சடன் பிரேக்கு



முன்னால் இடப்பக்கம் திரும்பவும்

டன்' திடுதிப்பென நின்று விடுவார் என எதிர்பார்க்காமல் முன்னேறி அந்தச் சைக்கிளுடன் முட்டி மோதுவார்; அல்லது அந்த சைக்கிளுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காக தனது வாகனத்தைக் குறுக்கு மறுக்காக வெட்டி வேறு



முன்னால் வலப்பக்கம் திரும்பவும்

விபத்தில் சிக்குவார்.

வழியில் ஒரு வீட்டில் சுருட்டிய ஓடுகளையோ, தகரங்களையோ, விறகுகளையோ அகப்பட்டவரையில் லாபம் என்று கருதி, அளவுக்கு மீறி சைக்கிளில் கட்டி, செலுத்த முடியாமல் சைக்கிளைச் செலுத்தி, சமநிலை தவறி, குறுக்கு மறுக்காக வீதியில் குழம்பி, தமக்கும் விபத்துக்களைத் தேடி, ஏனையோரையும் சிக்கல்களில் சிக்க வைக்கும் பல பிரகிருதிகளும் நம்மத்தியில் உள்ளனர்.

### இளைஞர்களின் சாகஸம்

இரண்டு கைகளையும்



இந்தப் பக்கம் செல்லவும்

விட்டுவிட்டு சைக்கிள் ஓட்டி சாகசம் காட்டும் இளைஞர்கள் கூட போக்குவரத்து அதிகமான வீதிகளிலும் தங்கள் கைங்கரியத்



கட்டாயச் சுற்று வட்டம்

தைக் காட்டுகிறார்கள். சல்லிக் கல்லில் முன்சில் ஏறினால் நிலமை தலைகீழாக மாறிவிடும். எதிரில் வருபவர்களையும் மாட்டி விடும்.


மோட்டார் சைக்கிளை ஓட்டும் இளைஞர்கள் வேகத்தில்தான் தீவிரம் காட்டுகிறார்கள். வேகமாக ஓட்டினால் ஹீரோக்கள் என நினைத்துவிடுகிறார்

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 44



சொற்சிலம்பம் இல. 44
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................
விலாசம்: ..........................................
..........................................

......... ......... இங்கே வெட்டுக ..........................

முடிவு திகதி; 10 — 04 — 1998

**இடமிருந்து வலம்**

1. இது செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இரு. 4. அந்தியேட்டி போன்ற சடங்கு. 7. மகாபாரத கதாநாயகர்கள். 8. அத்தாட்சி. 9. பொதிகட்டுவதற்கு உரிய நூல் இத்தாவரத்திலிருந்து கிடைக்கிறது. 10. இதுவும் வாய்ப்பும் இருந்தால் உயர்வது சுலபம். 12. மகிழ். 13. அன்னை. 15. உயிர்ப்பின் ஆரம்பநிலை. 16 தினசரி மாறுவது. 18. இனிப்பானது. 20. வீதியமைக்க ஊற்றுவது. 21. பிறன்மனை நோக்காத தன்மை இந்தப் பண்பின் உயர்நிலை என்கின்றார் வள்ளுவர். 22. எந்நேரமும். 24. உள்ளே தள்ளு. 25. வாசம் மிக்க மலர்.

**மேலிருந்து கீழ்**

1 துதிப்பவன். 2. கருணை. 3. விட்டு விடுகை. 4. அகங்காரம். 5. அநுமன். 6. மென் படலம். 11 அடக்கம் செய்த இடம். 13. அரிய எனப் பொருள்படும். 14. காற்றில் இது ஏற்பட ஒலி பரவுகிறது. 15. கறுத்த நிறத்தன்மை. 17. பிரசங்கம் செய்வது இதை. 18. சிக்குவதற்கு வைக்கப்படுவது. 19. கொள்ளளவு அலகு. 21. தொடக்கம். 23. பெண்ணுக்கு வேலி.

**சொற்சிலம்பம் 42 — முடிவுகள்**

**இடமிருந்து வலம்**

1 சேது. 3. அதிகம். 6. திக்கு. 8. வாலி. 10. கம்மல். 12. பாசி. 13. கம்பன். 14 உடை. 15. கனிதல். 18. குமர். 20. கலாபம். 22. துணர். 23. சம்பா. 24. பூரான். 25. தும்பை.

**மேலிருந்து கீழ்**

1 சேதி. 2. துக்கம். 4. திவால். 5. கலி. 7. கும்பகர்ணன். 9. மாசி. 11. மன்னி. 12. படை. 13. கடுகு. 14. உல்லாசம். 16. தக. 17. கும்பா 19. மதுரா. 21. பம்பை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: ஞா. அமலன், புகையிரத நிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.

★ இரண்டாம் பரிசு: செல்வி செ. அபிராமி, 566, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: வி. செல்வநாயகம், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 43 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

கற்பு என்ற சொல் இன்று பலருக்கும் வேம்பாய்க் கசக்கிறது. காரணம் உலகம் முன்னேறி வருகிறது. இது அடிமைத்தனத்தினதும் அடக்கு முறையினதும் சின்னம் எனவும் சிலர் நினைக்கிறார்கள்; மேற்கு நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்; பழமை வாதம் என்கிறார்கள்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்ணிடம் கற்பை வலியுறுத்திய வள்ளுவர் ஆணையும் பிறன் இல் புகாதே, பொருட்பெண்டிரை கூடாதே என்றெல்லாம் கட்டுப்படுத்தவே முனைந்து வந்திருக்கிறார்.

இதன் மூலம் வீட்டுக்கு வீடு ஏற்படக் கூடிய வழமையான சிக்கல்களை விடுவிக்கவே அவர் முயன்றிருக்கிறார். தவறுகின்றவர்களை சமுதாயம் கண்டுகொள்ளாமல் இருக்கலாம். கண்டிக்கத் தவறலாம். ஆனால் ஊர்வாயை மூட உலைமூடி இல்லை. எங்கும் பேச்சடிபட்டு மானம் காற்றிலே பறக்கும்.

அன்றல்ல — இன்றல்ல — என்றுமே இந்த நெறி தவறல் உலகம் எவ்வளவுதான் முன்னேறிய பின்பும்கூட — குடும்ப வாழ்வில் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே அமையும் என்பதில் இரு கருத்துக்களுக்கு இடம் இருக்க முடியாது.

மேற்கிலும் வாழ்க்கை திசைதப்பிப் போகிறது என்ற கற்பனையில் ஓரளவுக்கு உண்மை இருப்பினும் தன்மனைவி வழி தவறிப் போகிறாள் என்றதை ஜீரணிக்க எந்த ஆடவனாலும் இலேசில் இயலுவதில்லை.

கற்பெனும் திண்மை — தன் கணவனே பெரிது எனும் மன உறுதி — அவனே தெய்வம் — குடும்பமே கோவில் என்ற நிலைப்பாடும், பண்பும், நினைவும் மனைவி மனதில் குடிகொண்டுவிட்டால் போதும். குடும்பத்திலே அமைதி தவழும். சச்சரவுகள் அரவம் இல்லாமலே நழுவி விடும்.


இதைவிடப் பெரிய செல்வம் — சுகம்— வாழ்வினிலே கிட்டுமா?

பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின் — 0054)
(வாழ்க்கைத் துணைநலம்)

— அம்பிகைபாகன் —

# இந்த வார இராசி பலன்

## [04 - 04 - 1998 முதல் 10 - 04 - 1998 வரை]




★ தொழில் என்ற இடத்தில் மாணவர்கள் கல்வி என்று நினைத்துப் பலனை வாசித்தறியுங்கள்.

இலங்கை அரசியலில் சட்டதிட்டங்களை மாற்ற யோசனை எழும். எதிர்க்கட்சியில் படபடப்பு ஏற்பட்டபடி இருக்கும். மாணவர்களுடனும், தொழிலாளர்களுடனும், மக்களுடனும் புதிய பேச்சுவார்த்தைக்கு அணுகுமுறைகள் தோன்றும். இந்திய அரசியலில் மாறுபட்ட கருத்துக்கள் ஏற்பட இடம் உண்டு. ''அச்சாணிகள் கழலும் நிலை இருந்தாலும் கொஞ்சக் காலம் வண்டில் ஓடிக் கொண்டிருக்கும்.'' உலகில் அமெரிக்க அரசியலில் திசை திருப்பங்கள் ஏற்படும். மத்தியகிழக்கு நாடுகளில் யுத்த பயம் ஏற்படும். கிழக்கு நாடுகளில் விட்டு விட்டு இயற்கை, செயற்கை அழிவுகளும், அரசியல் கொந்தழிப்புகளும் மாறி மாறி ஏற்படும்,

**மேடம்:** உங்களுக்கு உதிரத்தவன் — உதயத்தில் வருவதனால் குடும்பத்தில் கலக்கமொன்று காத்திருக்கும். விதி சதி செய்யும் பலன் உண்டு. எதையும் தாங்கிச் செயற்பட்டபடி இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் ஒரு மந்தநிலை ஏற்படத்தான் செய்யும். காலமறிந்து செயற்படவும். எதிர்ப்பாலாருக்கோ, சகோதரங்களுக்கோ சோதனை, வேதனை கொடுக்கும். நெஞ்சுநோ, வாய்வுத் தொல்லை, கைகால் உளைவு கொடுக்கும் பலன் காணப்படுகின்றது. உடல்நிலையில் அவதானமாக இருக்கவும். தெய்வவழிபாடு முக்கியம். சனீஸ்வரன் தாக்கம் இருப்பதனால் பிரீதி செய்யவும். உங்களைப் பற்றி நாலு பேர் நாலுவிதமாகக் கதைப்பார்கள்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி.

**இடபம்:** நிதானமான நிலை, நிமிர்ந்த போக்கு, சலிக்காத உழைப்பாளியான நீங்கள் கொஞ்சம் கொடுக்கல் வாங்கலில் அவதானமாக இருக்கவும். தொழில் ஸ்தானத்தில் கொஞ்சம் நிதானமாக இருக்கவும். திடீரெனப் பிரச்சினைகள் உருவாகலாம். பெரியவர்கள் உதவி கிடைத்துவிடும். நெஞ்சுநோ, சல வருத்தம், நரம்புவியாதி என வருத்தங்கள் தந்துவிடும். அதிகமான பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நாட்டிற்கு நல்ல பலதையும் செய்து வரும் உங்களுக்கு வீட்டில் பல பிரச்சினை எழத்தான் செய்யும். ஓடி ஓடித் தேடினாலும் கூடிவருவது கொஞ்சம்தான். குல தெய்வவழிபாடு நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**மிதுனம்:** உங்கள் கருத்தை எதிர்ப்பாலார்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதனால் ஏட்டிக்குப் போட்டி தான் ஏற்பட்டபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் கிடைத்தபடி இருக்கும். தெய்வ பக்தி கொண்ட ஒருவரின் உதவியால் உங்கள் போக்கில் மாற்றங்கள் தெரியும். சகோதரங்கள் அல்லது புத்திரருக்காக அதிக பிரையாசைப்பட்டு ஓடியாடித் திரிவீர்கள். சிறுநீரகநோய், இருதயநோய்கள், வயிற்று வியாதிகள் சிலரை வருத்தியபடி இருக்கச் செய்யும். பாசத்தில் நேசங்காட்டி வரும் நீங்கள் பொருள் விசயத்தில் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**கடகம்:** உங்களை எவரும் இலகுவில் அறிந்து விட முடியாது. கடமை, கட்டுப்பாடான குடும்ப வாழ்வு வாழ்வீர்கள். அட்டமத்து வியாழனால் அவ்வப் பொழுது பொருள் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். ஏற்றத்தாழ்வுகள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி வரச் செய்யும். பொருள் வரவு அதிகரிக்கும். ஆயினும் பிறர் குற்றம், குறைகள் சொன்னபடி இருப்பார்கள். அதிக [illegible]ங்களைத் தீட்டி செலவுகளை அதிகரிக்காமல் நிதானமாக இருக்கவும். சலரோகம், கைகால் பிடிப்பு, நெஞ்சு வருத்தங்கள், தோல்வியாதிகள், சிரசு வருத்தங்கள் கொடுத்தபடி இருக்கும். வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**சிங்கம்:** விதியின் கைப்பாவை நீங்கள். எதையும் தைரியத்துடன் எதிர்கொள்ளல் வேண்டும். குடும்பத்தினருக்கு ஒரு சோதனை. உங்களுக்கு மனவேதனை கொடுக்கும். இருப்பினும் எல்லாம் இறைவன் செயல் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது அல்லவா? தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான மனோபாவச் செயற்பாடுகளுடன் சிலர் செயற்படுவார்கள். ஆயினும் உங்களை அவர்களால் வென்றுவிட முடியாது. ஆனால் உங்களைப் புகழ்ந்து, புகழ்ந்து சிலர் காரியங்களை உங்கள் மூலம் உங்களை அறியாமலேயே செயற்படுத்துவார்கள். இருதய நோய்கள், முதுகுவலி, கைகால்வலி, காலில் காயங்கள் ஏற்படலாம். உஷ்ணபீடைகளால் அவதிகள் ஏற்படும். சனீஸ்வரனுக்குப் பிரீதியும், ஏழைகளுக்கு தானதர்மமும், குல தெய்வவழிபாடும் உங்களுக்கு நன்மைகளைக் கொடுத்தபடி இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன்.

**கன்னி:** நீங்கள் எப்படியாவது காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். எதிலும் நிதானமாகச் செயற்பட்டபடி இருப்பீர்கள். உங்களுக்கு எல்லோரது உதவிகளும் கிடைக்கும். அளவுக்கு மீறிய யோசனை, கற்பனை எல்லாம் அடிக்கடி புயல் மாதிரி வீசி ஓய்ந்து கொண்டிருக்கும். தொழில் ஸ்தானத்தில் உங்களுக்குப் பலர், பல உதவிகளையும் செய்வார்கள். எதிர்ப்பாலாருடன் நிதனமாக நடந்து கொள்ளவும். சளி, இடுப்புவலி, வாதப்பிடிப்பு, நாரிநோ என அடிக்கடிக் கவலைப்படும் நீங்கள் அதற்காக சாப்பாட்டைக் குறைத்துக் கொள்ள மாட்டீர்கள். பொருளில் நிதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

(X ஆம் பக்கம் பார்க்க)

## சோதிட சஞ்சீவி

மகாதேவா ஜோதிடம்
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடையில் கொளுத்தும் வெயிலின் கொடுமை
# இயற்கையோடு இணைந்து சமாளிக்கலாம்

வெயில் கொளுத்தத் தொடங்கி விட்டது. உடலுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாமல் அதிக செலவின்றி இயற்கை மருத்துவ முறையிலேயே கடும் கோடையைச் சமாளித்துவிட முடியும்.

### வெயில் தலைவலி


வெயில் காலம் வந்துவிட்டாலே தலைவலியும் வந்துவிடும். வெயில் காரணமாக எல்லோருக்கும் தலைவலி வருவதில்லை. நோய் எதிர்ப்புச் சக்தி உள்ளவர்களைத் தலைவலி நெருங்காது.

வெயில் காரணமாக மூளையில் உள்ள இரத்த நாளங்கள் விரிவடைகின்றன. இதனால் இரத்தம் செல்லும் வேகம் குறைந்து முதலில் தலைப்பாரப் பிரச்சினை வருகிறது. தலைப்பாரம் தீவிரமாகும் நிலையில் கடும் தலைவலி ஏற்படுகிறது.

வெயில் காரணமாக ஏற்படும் தலை வலியைச் சமாளிக்க மாத்திரை தேவையில்லை. ஐஸ் தண்ணீரையோ அல்லது பச்சைத் தண்ணீரையோ எடுத்துக் கொள்ளவும். வெள்ளை நிற சிறு கைக்குட்டையையோ அல்லது சிறு துணியையோ அதில் நனைக்கவும். முன் தலையில் 10நிமிஷம் அதைப் பட்டியாகப் போடவும். மூளையில் விரிவடைந்த இரத்தக் குழாய்கள் சுருங்கும். அப்புறம் என்ன, தலைவலி 'போயே போச்சு'.

வெயில் தலைவலி மிகவும் கடுமையாக இருக்கும் போது, முன் தலையில் ஈரத் துணிப் பட்டி போடுவதோடு 'வெந்நீர் பாதக் குளியல்' செய்தால் உடனடி நிவாரணம் கிடைக்கும். தண்ணீரை லேசாக சூடாக்கி அகலமான பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டு இரண்டு கால்களையும் 10 நிமிஷம் வைத்திருப்பதே 'வெந்நீர் பாதக் குளியல்'. கணுக்கால் நனையும் அளவுக்கு தண்ணீரை நிரப்பிக் கொண்டால் போதும்.

வெயில் காரணமாக தினமும் தலைவலி வரும் நிலையில், ஈரத்துணிப் பட்டி போடலாம்; ஆனால் தினமும் வெந்நீர் பாதக் குளியல்



கூடாது; கால் நரம்புகள் பாதிக்கப்படும் என்பதால் வாரத்துக்கு மூன்று நாள்கள் மட்டுமே வெந்நீர் பாதக் குளியல் முறையைச் செய்யலாம்.

வெந்நீர் பாதக் குளியல் செய்யும் போது ஈர்ப்பு விசை காரணமாக மூளை இரத்த நாளங்களில் உள்ள இரத்தம் கீழே கால்களுக்கு இறங்குவதால் தலைவலியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

இரவில் மீதமாகும் சாதத்தில் தண்ணீர் ஊற்றி வைத்து காலையில் எழுந்தவுடன் நீர் ஆகாரமாக அதைக் குடிப்பது மிகவும் நல்லது. நீர் ஆகாரத்தில் சிறிதளவு உப்பைப் போட்டுக் குடித்தால் நல்லது. ஆனால் இரத்த அழுத்த நோயாளர்கள் உப்பு விஷயத்தில் உஷாராக இருக்க வேண்டும்.

நீர் ஆகாரம் கோடையில் உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதோடு 'பி கொம்பளக்ஸ்' மாத்திரை தரும் சத்தையும் இயற்கையாகத் தருகிறது. நீர் ஆகாரத்தை தினமும் குடிப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தி வலுவடையும்.

உடல் வலுவுக்காக 'பி கொம்பளக்ஸ்' மாத்திரையோ ஊசியோ எடுப்பவர்கள் இயற்கை வழியிலும் அந்தச் சத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

'விற்றமின் பி 2' மாத்திரை அல்லது 'ரிபோஃபிளேவின்' மாத்திரையைச் சாப்பிடுவதால் ஒற்றைத் தலைவலி கட்டுப்படுகிறது என பெல்ஜியம் விஞ்ஞானிகள் குழு அண்மையில் கண்டுபிடித்துள்ளது.

உடலில் அளவுக்கு அதிகமாக நச்சுப் பொருள்கள் தங்குவதால்தான் நோய்கள் வருகின்றன. நன்கு சுத்தம் செய்யப்பட்ட தண்ணீரில் வைரஸோ பக்டீரியாவோ வாழ முடியுமா? முடியாது. அதைப் போல உடலில் நச்சுப் பொருள் இல்லையென்றால் கிருமிகளுக்கும் அங்கு இடமில்லை.

தினமும் குளித்து உடலின் புறப் பகுதியைச் சுத்தம் செய்கிறோம். நச்சுப் பொருள்களை வெளியேற்றி உடல் உள் பாகங்களை எப்படி சுத்தம் செய்வது?

இதற்கு எளிய வழி உள்ளது. காலையில் எழுந்தவுடனேயே வெறும் வயிற்றில் குறைந்தது மூன்று டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும். பின்னர் ஒவ்வொரு ஒரு மணி நேர இடைவெளியிலும் ஒரு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும். இவ்வாறு மொத்தம்—குறைந்த பட்சம்—தினமும் 10 டம்ளர் தண்ணீராவது குடிக்க வேண்டும். கோடையில் குறைந்த பட்சம் 15 டம்ளர் தண்ணீராவது குடிக்கவேண்டும்.

காலையில் எழுந்தவுடன் தண்ணீர் குடிப்பதால் மலச் சிக்கல் இருக்காது. நன்கு கொதிக்க வைத்து ஆறிய தண்ணீரையே குடிக்க வேண்டும்.

கோடையில் குடிதண்ணீரில் இரண்டு எலுமிச்சைப் பழத்தைப் பிழிந்து, சிறிதளவு சர்க்கரை, உப்பு போட்டு அருந்தலாம். இதன் மூலம் உடலுக்கு விற்றமின் சி கிடைக்கும்; வெப்பத் தாக்கம் (Heat Stroke), தலை சுற்றல் ஆகியவற்றைத் தடுத்துக் கொள்ளவும் முடியும்.

'சைனஸ்', ஆஸ்துமா, ஒவ்வாமைநோய் உள்ளவர்கள், எலுமிச்சைச் சாறுக்கு பதிலாக, உப்பையும் சர்க்கரையும் கலந்து அருந்தலாம். இதன் மூலம் நீர்ச் சத்து இழப்புப் பிரச்சினை வராமல் தடுத்துக் கொள்ள முடியும்.

### நீரிழிவு நோயாளருக்கு

நீரிழிவு நோயாளிக்கு கோடையில் கால்களில் எரிச்சல் ஏற்படும். எலுமிச்சை—சர்க்கரை — உப்பு கலந்த குடிநீருக்குப் பதிலாக நீர் மோரை நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்துவது நல்லது; பாத எரிச்சல் இருக்காது. பாத எரிச்சலுக்கு நீர்மோர் ஒரு இயற்கை 'டானிக்'.

### வியர்வை வெளியேறுவது நல்லதுதான்

வெயில் காரணமாக வியர்வை வெளியேறுவது நல்லதுதான். தொடர் அலைச்சலையடுத்து குளிர் பானங்களைத் தேடிச்

(XI ஆம் பக்கம் பார்க்க)

## வெயில் காலத்தில்...

★ ஐம்பது வயதைத் தாண்டியவர்களுக்கு கோடையில் வெப்பத்தளர்வு (ஹீட் எக்சோஷன்'), வெப்பத்தாக்கம் ('ஹீட்ஸ்ரோக்') ஆகியவை ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு,

★ 'ஹீட்ஸ்ரோக்' பாதிப்பு ஏற்பட்டவருக்கு வியர்வை முற்றிலும் நின்று உடல் அனலாகக் கொதிக்கும்; மயக்க நிலைக்குத் தள்ளப்படுவார். மயக்கம் அடைந்தவரை முதலில் நிழல் உள்ள இடத்துக்குக் கொண்டு சென்று உடலின் மீது குளிர்ந்த நீரை ஊற்ற வேண்டும். நினைவு வந்தவுடன் குடிப்பதற்கு மோர் கொடுக்க வேண்டும்.

★ வீட்டுக்குள் இருந்தாலும் உடல் வெப்ப நிலை அதிகரிக்காமல் இருக்க ஈரத் துணியால் உடலை அவ்வப்போது துடைத்துக் கொள்வது நல்லது.

★ கோடைகாலத்தில் சூரிய ஒளி முகத்தில் படும்படி நடக்கவோ பயணம் செய்யவோ கூடாது. கறுப்புத் துணி வெகு வேகமாக வெப்பத்தை உள்வாங்கிக் கொள்ளும் என்பதால் கோடையில் கறுப்பு உடைகள், குடைகள் போன்றவற்றைப் பயன்படுத்தவும் கூடாது. வெள்ளை நிறத் தொப்பி அணிந்து கொள்ளலாம்.

★ டெரிக் கொட்டன், நைலோன் ஆடைகளைத் தவிர்த்து பருத்தித் துணிகளையே அணிய வேண்டும்.

# மூலத்தைக் கட்டுப்படுத்தும் 'தொட்டிக் குளியல்'

கோடையில் வெப்பம் தாங்காமல் உடலில் சில உபாதைகள் ஏற்படுகின்றன.

சிறுநீர் எரிச்சல், சிறுநீர்க் கடுப்பு, வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, மூலம் ஆகிய உபாதைகள் ஏற்படுவதற்கான வாய்புகள் அதிகம். உஷ்ணம் காரணமாக மூலநோய் அதிகரிக்கும். வெப்ப மாறுதலுக்கு ஏற்ப உடலின் சமச்சீர் கெடாமல் பார்த்துக் கொள்ளத் தவறுவதுதான் இந்த உபாதைகள் ஏற்படக் காரணம்.

பின் பனிக்காலம் மாறி, கோடை வெயில், தொடங்குகிறது. வெயில் தொடங்கும் முதல் இரண்டு நாள்கள் முழுமையாக உணவைத் தவிர்த்து உபவாசம் இருந்தால் உடலுக்கு நல்ல ஏற்பு சக்தி கிடைக்கும் உபவாசம் என்றால் பட்டினி என அர்த்தம் கிடையாது. இளநீர், பழச் சாறுகளைச் சாப்பிடலாம்: குறிப்பாக தர்பூசணி, மோர், பழச்சாறுகளைச் சாப்பிடலாம்.

ஆசன வாயில் உள்ள இரத்தக் குழாய்கள் விரிவடைந்து பெரிதாகி விடுவதால் மூல நோய் ஏற்படுகிறது. மலம் போகும்போது இரத்தம் கசிவது இந்த நோயின் ஆரம்ப அறிகுறியாகும்.

உள் மூலம், வெளி மூலம் என இந் நோய் இரு வகைப் படும். நோயளிகளுக்கேவெளி மூல நோய் தெரியும்.

### மூல நோய்க்கு காரணம் என்ன?

மூல நோய்க்கு முக்கியக் காரணமே மலச்சிக்கல்தான். ஆரோக்கியமாக உள்ளவர்களுக்கு மலம் கழிக்க இரண்டு நிமிடம் போதும். கழிப்பறையில் நீண்டநேரம், அதாவது பேப்பர் படிக்கும் அளவுக்கு உட்கார்ந்திருப்பதே மூல நோய் வருவதற்குக் காரணமாக அமையும். மூலநோய் கட்டுப்பாட்டுக்கும் வராது. மலம் கழிக்க அழுத்தம் கொடுப்பதே நோய் முற்றக் காரணமாகிவிடும்.

இந்தநோய் வருவதைத் தடுக்க மலச் சிக்கலைத் தவிர்ப்பது அவசியம். கீரை, வாழைத் தண்டு போன்ற அதிக நார்ச்சத்து உள்ள காய் கறிகள், பழ வகைகளைச் சாப்பிடவேண்டும்.

மூலநோய்உள்ளவர்களுக்கு கோடைக் காலத்தில் பிரச்சினை தீவிரமாகும். இதைத் தவிர்க்க முளைக்கவைத்த பயறு, வெங்காயத்தை அரைத்து அதில்எலுமிச்சை யைப் பிழிந்து சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கும்; அல்லது கறிவேப்பிலை, கொத்தமல்லி, புதினா ஆகியவற்றை வெல்லத்துடன் சேர்த்து அரைத்து சாறாகக் குடித்தால் நிவாரணம் கிடைக்கும். கறிவேப்பிலை, கொத்தமல்லி, புதினா ஆகியவை குளிர்ச்சியைத் தருவதோடு அவற்றில் நார்ச் சத்தும் உள்ளதால் பலம் அதிகம்.

மூல நோய் உள்ளவர்கள் கோடையில் தினமும் இரவில் ஒரு வாழைப்பழமும் பாலும் சாப்பிடுவது அவசியம். இதன் மூலம் மலச்சிக்கலை பெருமளவு தவிர்க்க முடியும்.

### அனல் தணிக்கும் அருகம்

குளிர்ச்சியைத் தரும் அரிய மூலிகை அருகம்புல். அருகம் புல்லை எடுத்து அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து அலசி, அரைத்துச் சாறு எடுத்து தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், மூல நோயைக் கட்டுப்படுத்தும்.

இவ்வாறு அருகம்புல்லை எடுத்து அதைச் சுத்தம் செய்ய அவகாசம் இல்லாதவர்கள் அருகம்புல் தூளை வாங்கி வைத்துக் கொள்ள லாம். தினமும் இரவில் ஒரு தேக்கரண்டி தூளை வெந்நீரில் போட்டுக்குடிக்க வேண்டும். அருகம்புல்லில் உள்ள நார்ச்சத்து காரணமாக மலச் சிக்கல் பிரச்சினை தீர்ந்து மூல நோய் கட்டுப்படும்.

### தண்ணீர் செய்யும் தீமை

அருகம்புல் சாறைச் சாப்பிட்டால் வயிற்றுப் போக்கு ஏற்படும் என்று நினைப்பது தவறானது. ஏனெனில் சாறைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் தண்ணீர் அசுத்தமானதாக இருந்தால், வயிற்றுப் போக்கு ஏற்படும். அருகம்புல் சாறை விலை கொடுத்து வாங்காமல், நன்கு காய்ச்சி ஆற வைத்த தண்ணீரில் வீட்டிலேயே தயாரித்துக் குடித்தால் பிரச்சினை எதுவும் வராது.

### இயற்கை மருத்துவ சிகிச்சை

மூல நோய் உள்ளவர்கள் வீட்டிலேயே பெரிய தொட்டி வைத்துக் கொண்டு அதில் தண்ணீரை நிரப்பிக் கொள்ளவும். தொட்டியில் தினமும் 20 நிமிஷம் உட்காருவதால் வலி குறையும். வீக்கமும் குறையும். இச் சிகிச்சைக்கு தொட்டிக் குளியல் எனப் பெயர்.

### வயிற்றுப் போக்கு

கோடையில்உஷ்ணம் அதிகரிப்பதாலும்சமிபாட்டு நொதியத்தின் செய்திறன் குறைவதாலும் வயிற்றுப் போக்கு ஏற்படுகிறது. எனவே கோடைக் காலத்தில் எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளைச் சாப்பிடுவது நல்லது. இட்லி, இடியாப்பம், புட்டு போன்றவை நல்லது; இரவில் பழங்கள் மட்டுமே சாப்பிட்டுத் தூங்குவதும் நல்லது.

வயிற்றுப் போக்கு ஏற்படும் சமயத்தில் உப்பு — சர்க்கரைக்கரைசல், நீர் மோர், இளநீர், மோர்ச்சோறு ஆகியவற்றைச் சாப்பிடலாம். மாதுளைப்பிஞ்சை அரைத்து அதன் சாற்றைக் குடிப்பதன் மூலம் வயிற்றுப்போக்கு கட்டுப்படும்.

### திடீர் வயிற்றுவலி

உஷ்ணம் காரணமாக திடீரென வயிற்று வலி ஏற்படும் சமயத்தில் அடிவயிற்றில் ஈரத் துணியை 10 நிமிஷங்கள் பட்டியாகப் போடுவதன் மூலம் உடனடி நிவாரணம் கிடைக்கும். தொப்புளைச் சுற்றி விளக்கெண்ணெயைத் தடவுவதன் மூலமும் நிவாரணம் கிடைக்கும்.

ஒவ்வொரு முறையும் பருவம் மாறும்போது உடல்அனுசரித்துப் (Adjust) போவதற்கு சிறிது அவகாசம் தேவைப்படுகிறது. பருவம் மாறும் காலங்களில் கவனமாக இருந்தால் நோய் வராமல் தடுத்துக் கொள்ள முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியும் வீதியும்...

(VII ஆம் பக்கத் தொடர்)

கள். நிதானம் விடை கொடுத்துச் செல்கிறது.

அதிகவேகத்தில் இரண்டு சில்லு வாகனங்களைச் செலுத்தும்போது இடையில் விபரீதம் சந்தித்தால் நிலமை என்னாகும்? எலும்பு எண்ண வேண்டியதுதான்.

மெதுவாகவும் நிதானமாகவும் வாகனம் ஓட்டி அதனை ரசிக்க அவர்கள் ஏனோ தவறிவிடுகிறார்கள்.

## அனுமதிப் பத்திரம் இல்லாத சாரதிகள்

சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துபவர்களின் எண்ணிக்கை வட பகுதியில் தற்போது மிகமிக அதிகம். அதற்காக அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் எல்லோரும் தகுதியானவர்கள் என்று சொல்வதற்கில்லை.

நீண்டகாலமாக இங்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் அலுவல்கள் நடைபெறவில்லை. அதுதான் பரவாயில்லை. வீதி ஒழுங்குகள் பற்றிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. தான்தோன்றித்தனமாக எல்லோரும் வாகனங்களை வீதிக்கு எடுத்து வரத் தொடங்கிவிட்டார்கள்.

சிறுவர்கள்கூட வயதானவர்களை ஏற்றிக்கொண்டு சாலியில் வீதிக்கு வருகிறார்கள். அவர்களால் சமாளிக்க இயலாத சுமையுடன் வரும்போது சமநிலை தளம்பினால் தாக்குப்பிடிக்க இயல்வதில்லை.

தட்டிக் கேட்கவும் சட்டத்தை நிலைநிறுத்தவும் ஆள்கள் இல்லை என்பது பலரும் வீதி நடைமுறைகளை மீறிச் செயற்பட வழி வகுத்து விடுகிறது.

## பிள்ளைகளுக்குப் போதியுங்கள்!

சிறிய வயதிலேயே பாடசாலையிலும் வீட்டிலும் நடைமுறையில் வீதி ஒழுங்குகள் பற்றியும் நடைமுறைகள் பற்றியும் பிள்ளைகளுக்குப் போதிக்கப்படுதல் வேண்டும். சரியான தகவல்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படல் அவசியமாகிறது.

பாடசாலைக்குச் செல்லும்போது வீதியின் வலது பக்கமாக நடந்துசெல்வதன் அவசியத்தை பிள்ளைகளுக்கு விளக்கலாம். அப்படி நடந்தால்தான் எதிரில் வரும் வாகனங்கள்— சைக்கிள்களுக்கு— முகம் கொடுத்து நடக்க முடியும் என்பதைத் தெளிவுபடுத்திவிடலாம்.

வீதியில் நடந்து செல்லும்போது கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் குறித்தும் ஆரம்பத்திலேயே புத்தி புகட்டி விடுதல் நல்லது. வீதியோரம் நின்று விளையாடக்கூடாது என்பது அவர்களுக்குப் புரியாமல் இருக்கலாம். வீதிகளிலேயே பட்டம் விட்டும்—கிரிக்கெட் ஆடியும் காலம் கழிக்கும் சிறுவர்களை தினமும் காண்கிறோம். இவர்கள் ஓடும்போது எதிரில் வருவது எதுவானாலும் கண்ணில் படுவதேயில்லை.

அடுத்து மிதிவண்டிகளில் சாரிசாரியாக பாடசாலைக்கும், ரியூஷனுக்கும் செல்லும் மாணவர் கூட்டம் வீதியை முழுவதுமே அடைத்து நிற்கிறது. வாகனங்கள்தான் இடம் இருந்தால் விலகிப்போக வேண்டிய நிலைமை. இதற்கிடையில் எதிரும்புதிருமாக வரும் இரண்டு வாகனங்கள் விலகிச் செல்வதோ பெரும் பாடாகிவிடும்.

எனவே இவ்விடயங்களில் மாணவர்களைச் சரிவர வழிநடத்த பாடசாலை நிர்வாகங்களும் ஆவன செய்வது சகல தரப்பினருக்குமே நன்மையைத்தான் தரும்.

அடுத்து வாகனங்களில் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் படுகிறபாடு சொல்லி மாளாது. அளவுக்கு அதிகமாக நெரிசல் வாகனங்களில் ஏற்படுவதுண்டு. இதுவும் விபத்துக்களுக்கு வழி கோலக்கூடும்.

அண்மையில் இந்தியாவில் பாடசாலை பஸ் ஒன்று ஆற்றுக்குள் பாயவும்— பல மாணவர்கள் பரிதாபமாக உயிரிழக்கவும்— மாணவர்கள் போட்ட கூச்சல் குழப்பமே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. முன்னால் செல்லும் பாடசாலை பஸ் ஒன்றை முந்திக் கொள்ளும்படி இவர்கள் தமது சாரதியிடம் கூச்சல் போட்டு நச்சரிக்கவும் அவர் பாலத்தில் வைத்து பஸ்ஸை துரத்தவும் விதி விளையாடி விட்டது.

அகலம் குறைந்த வீதிகளில் வாகனங்கள், மரங்களையும் வேலிகளையும் தடவிச் செல்லும் நிலமையில் மிதிபலகையில் பயணம் செய்வது மிகவும் ஆபத்தானது. உள்ளே இடமிருந்தும் மாணவர்கள் மிதிபலகையில் பயணம் செய்ய நினைப்பது தொடரத்தான் செய்கிறது. இவ்விடயத்தில் சாரதிகளும் நடத்துநர்களும் கூடுதல் அக்கறை எடுத்தல் அவசியமாகிறது.

## தப்புக்கணக்கு

வீதியைக் கடக்கும் போது வாகனம் வரமுதல் ஓடிவிடலாம் எனப் பலரும் தப்புக் கணக்குப் போட்டுவிடுகிறார்கள். வீதி ஓரத்தில் நின்று இரு மருங்கும் பார்த்து நிதானமாகக் கடந்துவர இவர்களுக்குக் கற்றுத்தர வேண்டாமா?

வருகின்ற வாகனங்களையும்—அவற்றின் பிரேக்குகளையும்—சாரதிகளின் சாதுரியத்தையும் நம்பி நாங்கள் வீதிகளில் இறங்கக்கூடாது. நம்மை நாமே பாதுகாக்கும் பக்குவத்துடன் ஒவ்வொருவரும் செயற்பட்டால்தான் விபத்துக்களைத் தவிர்க்க இயலும்.

மஞ்சள் கோடிட்ட இடங்களில் வீதிக்கு குறுக்கே கடப்பவர்கள்கூட வாகனங்கள் நிறுத்தப்படும் வரை கடக்க முயலக்கூடாது. மஞ்சள் கோட்டில் வைத்து வாகனம் இடித்தால் காயம்படாமலா தப்ப முடியும்? சரிபிழை பற்றிப் பின்னர் பேசியாருக்கு என்ன லாபம்?

பஸ்களில் ஏறவும் இறங்கவும் முயலுபவர்கள் வாகனம் நிறுத்தப்படும்வரை காத்திருப்பது இல்லை. சீற்பிடிக்கவேண்டும் என்ற அவசரம் உயிரைக் குடித்துவிடுகிறது. முன்பெல்லாம்போல ஓரிடத்தில் ஏறினால் போகுமிடம் வந்ததும் இறங்கும் நிலைமைகள் இப்போது இல்லை. வழியில் பலப்பல சோதனைச் சாவடிகளில் பெரும் எண்ணிக்கையில் பலரும் இறங்கி ஏறவேண்டிய தேவைகள் எழுகின்றன.

இறங்கும்போது சோம்பலாகத் தெரியும் பலரும் ஏறும்போது முண்டியடிக்கிறார்கள். சாவடிகளில் இறங்கி கூட்டமாக நடக்கும் போது வாகனமும் அதற்குள் வளைந்து நெளிந்து ஊருகிறது. களைத்த பயணத்தில் இப்படிப் பல அலுப்புக்கள். இதற்கிடையில் விபத்துக்களையும் சந்திக்காமல் சாதுரியமாகத் தவிர்க்கத்தானே வேண்டும்!

## போதையிலே...!

சாரதிகள் மதுபோதையில் வாகனம் ஓட்டுவது பல விபத்துக்களுக்கு காரணம் ஆகிறது. அவதானிக்கும் சக்தியை அவருக்குத் தெரியாமலேயே மது மழுங்கடிக்கிறது.

நீண்டதூரம் — நீண்ட நேரம் — வாகனத்தைச் செலுத்தி வரும் சாரதிகளின் இமைகள் அவர்களை அறியாமலே தூக்கம் போட முனைகின்றன. இவர்களுக்குப் போதிய தூக்கமும் ஓய்வும் அவசியமாகிறது.

தற்போது வீதியோரம் உள்ள சமிக்ஞைகள் பெரும்பாலும் இப்பிரதேசங்களில் காணப்படுவதில்லை. அவை பராமரிப்பு இன்றி உருக்குலைந்தே போயுள்ளன. இவற்றை அவதானித்தோ அடையாளம் கண்டோ வாகனம் ஒட்டும் பழக்கத்தை இங்குள்ள சாரதிகள் மறந்தே விட்டார்கள்.

இந்தஅடையாள சமிக்ஞைகளுக்குப் புத்துயிர் ஊட்டி வீதி நடைமுறைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டிய காலம் கடந்து கொண்டிருக்கிறது. வாகன வரிகளை மட்டும் அறவிடுதலில் கவனம் செலுத்தப்படுகிறது.

பல சாரதிகளுக்கு பின்னால்—முன்னால் வரும் வாகனங்களுக்கு சரியான சமிக்ஞைகளைக் கொடுக்கும் முறை தெரிவதில்லை. கொடுத்தாலும் அடுத்தவர்கள் அவற்றை விளங்கிக் கொள்ளும் உணர்வு நிலையில் இல்லை.

வாகனங்களை நல்ல நிலைமையில் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. அவை எழுப்பும் தேவையற்ற ஒலிகள் பற்றி சாரதிகள் அசண்டையாக இருக்கக்கூடாது. பிரேக்குகள், சமிக்ஞை, லைட்டுகள் மற்றும் அவசியமான விடயங்களில் அதிக கவனம் செலுத்தப்பட்டு அடிக்கடி அவை சரிபார்க்கப்படல் வேண்டும்.

அனுமதிப்பத்திரமின்றி புதிதாக வாகனம் ஒட்டி வருபவர்கள் 'L' தகடுகளை தெளிவாக வாகனத்தின் முன்னும், பின்னும் பொருத்தி வைத்தால் எதிரில் வருபவர்கள் ஒதுங்கி ஒடி விடுவார்கள். அடுத்தவர்களைக் காப்பாற்றவேண்டிய சமுதாயக் கடமை வீதிக்கு வரும் ஒவ்வொருவருக்கும் உண்டு அல்லவா?

## காப்புறுதிக்கு பின்னடிப்பு!

தற்போது வாகனங்களுக்கான காப்புறுதி வசதிகள் யாழ்ப்பாணத்தில் கிடைக்கின்றன. வீதியில் வருகின்ற மூன்றாம் நபருக்கான காப்புறுதியினையாவது ஒவ்வொரு வாகன உரிமையாளர்களும் பெற்றிருக்கவேண்டியது அவசியமாகிறது.

நடக்கக்கூடாததுதான் என்றாலும் விபத்து என்று ஒன்று நடந்துவிட்டால் அதில் சம்பந்தப்பட்டு பாதிக்கப்படுகின்றவருக்கு — ஆறுதலுக்காதல் ஒரு நட்டஈட்டைத் தர இக்காப்புறுதி வழிசமைக்கிறது. சட்டத்துக்காக அன்றி —மனிதாபிமானக் கடமையாகவும் கூட—இக் காப்புறுதிவினை பெறவேண்டிய அவசியம் எழத்தான் செய்கிறது.

விபத்துக்கள் சந்திக்கும் போது யாரும் காணாவிட்டால் ஓடித்தப்பிவிடும் மனிதாபிமானமற்ற சாரதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் காப்புறுதிகளும் பயனற்றுப் போய் விடுகின்றன.

நாற்சந்திகளில் வரும் சாரதிகள்—வலதுபக்கம் வரும் வாகனங்களுக்கு முதலிடம் கொடுக்கும் நடைமுறையினை மறந்து—போட்டிக்கு முந்திக்கொள்ளவே துடிக்கிறார்கள். இவர்களின் அவசரத்தில் வாகனங்கள் ஒன்றோடொன்று சந்திசிரிக்க முட்டிக்கொண்டு நிற்கின்றன.

அதிவேகமாகச் செல்லும் சக்தியுடைய வாகனங்களை பயன்படுத்துபவர்கள் அவற்றை அதி உச்ச வேகத்தில்தான் செலுத்தவேண்டும் என எப்போதுமே நினைக்கின்றார்கள்.

'சைரன் ஒலி', 'சுழலும் சிக்னல் லைட்டுக்கள்' பொருத்தப்பட்டு ஓடித்திரியும் வாகனங்கள் தேவை ஏற்படும்போது மாத்திரம் அன்றி எப்போதுமே அவற்றைப் 'பாவித்தபடி—எந்நேரமும் அந்த சிறப்புரிமையைப் பயன்படுத்திக்கொண்டு—வீதியைக் கிழித்துக்கொண்டே—செல்கின்றன. அவர்கள் இவற்றை அதிஉச்சப் பயன்பாட்டுக்கு உட்படுத்துவது பற்றி எவரும் ஆராயப் பின்நிற்கிறார்கள்.

எனவே பலரும் தான்தோன்றித்தனமாகவும் அலட்சிய மனப்பாங்கிலும் வீதிக்கு வருதலைத் தவிர்க்கவேண்டும். எப்போதும் விழிப்புணர்வுடன் செயற்படுவது அவசியமாகிறது. வீதியில் தமதும் அடுத்தவரதும் விதியை நிர்ணயிப்பது இவர்களின் தலையாய கடமை ஆகிறது. இளமை முதலே இவற்றைக் கற்றுக்கொண்டால் எதிர்காலம் பிரகாசமானதாக அமையும்.

சாரிசாரியாக பெருமளவு வாகனங்கள் யாழ்—குடா நாட்டு நகரங்களுக்குள் நுழையும் காலம் வெகுதொலைவில் இல்லை. அந்த யுகத்துக்காக எம்மைத் தயார்ப்படுத்துவோமாக!

★

# இந்த வார இராசி...

(VIII ஆம் பக்கத் தொடச்சி)

துலாம்: வாழ்கையென்ற நடைபாதையில் எத்தனை சுழிவு நெளிவுகள்? நாம் நேர்ப்பாதை என எண்ணிப் பிரயாணம் செய்யலாமா? என அடிக்கடி மற்றவர்களுக்கு ஆறுதல் சொல்லுவீர்கள். ஆனால் உங்களாலும் அதைச் செயற்படுத்த முடியாமல் உள்ளதே! தொழில் ஸ்தானத்தில் சடுபுடுதான். கொஞ்சம் நிதானமாகப் போகவும். அல்லது கண்டபடி மற்றவர்களின் பேச்சுக்கும் ஆளாகக் நேரிடும். சமாதானமும் பேசுவீர்கள். இடைக்கிடை சண்டையும் போடுவீர்கள். ஆனால் மற்றவர்களுக்கு கெடுதிகளைச் செய்யமாட்டீர்கள். சளி, நரம்பு, தோல், மனச்சலிப்பு இப்படி அடிக்கடி மாறி மாறி இக்காலத்தில் ஏற்பட்டபடி இருக்கும். ஏழைகளுக்கு தானதர்மம் செய்து வருங்கள். அதனால் பல நன்மைகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி, ஞாயிறு.

விருச்சிகம்: நீங்கள் தன்னம்பிக்கை நிறைந்தவர்கள். எதற்கும் அஞ்சமாட்டீர்கள். சாதூரியமாகச் செயற்பாடுகளைச் செய்து வருவீர்கள். தொழில் ஸ்தானத்தில் உங்களைக் கண்டு உங்கள் மேலதிகாரிகளே பேசாமல் தலையாட்டி விட்டுப் போவார்கள். நீங்கள் மட்டும் தர்க்கப்பட்டு, ராஜநடை போட்டபடி இருப்பீர்கள். எல்லோரும் விசுவாசமாக நடக்க வேண்டும் என அடிக்கடி எதிர்பார்ப்பீர்கள். ஆனால் நீங்கள் எடுத்த எடுப்பில் வேகமாக எச்செயலிலும் ஈடுபட்ட பின்புதான் யோசிப்பீர்கள். பரவாயில்லை. எவருக்கும் தீமை செய்யாது சமாளித்து விடுங்கள். கிருமித்தாக்கங்கள், இரத்த நோய்கள், எலும்பு நோ, விபத்துக்காயங்கள் என்பன ஏற்படலாம். தகுந்த வைத்தியங்கள் செய்யுங்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

தனுசு: மிகவும் கௌரவமான, கண்ணியமானவர் நீங்கள். தன்னம்பிக்கை, மத நம்பிக்கை கொண்டவர்கள். ஆனால் மூடப்பழக்கவழக்கங்களை நம்ப மறுக்கும் ஒரு வெளிப்படையானவர்கள். எந்த இரகசியத்தையும் உங்களால் மறைக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் ஒரு வேகம் ஏற்படும். நேர்மைக்கு மாறாகச் செயற்படுபவர்களை எதிர்க்கும் தன்மைகள் கொண்டவர் நீங்கள். அதனால் இக்காலத்தில் சில பிரச்சினைகள் ஏற்படச் செய்யும். குடல்வியாதி, சளித்தொல்லை, கைகால் உளைவு, தலையிடி, உஷ்ண பீடைகள் கொடுக்க இடம் உண்டு. பொருள் செலவுகளைக் கட்டுப்படுத்தவும்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி

மகரம்: எக் காரியத்தையும் அடக்கமாக இருந்து செயற்படுத்தி வெற்றி காண்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் தொடர்ந்து விடாப்பிடியாக இருந்து பல நன்மையான மாற்றங்களை அடைவீர்கள். வெளியவர்கள், அரச துறையினர்கள் [illegible] செய்வார்கள். எதிர்பாலார் கருத்தறிந்து நடக்க முயல வேண்டும். வயிற்றுக் கோளாறுகள், நரம்புவியாதிகள், கைகால் மூட்டுவலிகள் சிலரை வருத்தலாம். கைகால் விறைப்பு சிலரை வருத்தலாம். தகுந்த வைத்தியம் நன்மை தரும். நண்பர்களையும் அயலவர்களையும் நம்ப வேண்டாம்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

கும்பம்: எந்த விஷயங்களையும் துருவித் துருவி அலசி ஆராய்ந்தபடி இருப்பார்கள். உண்மைக்கு அழிவு இல்லை என்பார்கள். இவர்கள் வாழ்விலும் உண்மைகள் மேலிடும். உங்களுக்கு நம்பிக்கை, விசுவாசமே மிக முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் உறுதியான பலன்கள் நடக்கும். மாற்றங்கள் சகஜமாகும். கைகால் வலிகள், படபடப்பு, நரம்புத்தளர்ச்சி, உஷ்ணபீடைகள் என்பன ஏற்பட்டபடி இருக்கும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்வதுடன் குல தெய்வ வழிபாடு செய்துவரவும். சுகம் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: வெள்ளி, திங்கள்.

மீனம்: நீங்கள் ஏன் ஓடி ஓடி திரிகின்றீர்கள்? கலை, ஆராய்ச்சித்துறை, சங்கீதத்துறை, பொதுத் தொண்டுகள் என மாறி மாறி செயற்பாடுகளைச் செய்தபடி இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் சனீஸ்வரனின் பந்தாட்டம் இருக்கும். விதிவழியே ஊடுருவிச் செல்லும் பலாபலன்கள் காணப்படுகின்றன. புதிய தொழில்களைப் பெருப்பிக்காமலும், மாற்றங்களைக் கண்டபடி எடுக்காமலும் சமாளிக்க முயலவும். பழைய நிலைகளை நடுநிலைப்படுத்தி வாழ முயற்சிக்கவும். அல்லது வீண்கஷ்டங்கள் கொடுக்கும். குல தெய்வ வழிபாடும், சனீஸ்வரப்பிரீதியும் முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை...

(VI ஆம் பக்கத் தொடர்)

யும் 3600 அமெரிக்க டொலர்களுக்கு வாங்கிப் பத்திரப்படுத்தினர்.

களஞ்சியத்துக்குச் சற்றுத் தொலைவில்—நடைதூரத்தில் — ஆற்றோரமாக தனித்த இடத்தில் 1100 டொலர் கொடுத்து வாடகைக்கு ஒரு கட்டடத்தை எடுத்தனர். அங்கே நாளாந்தம் அளவாக பெட்டிகளில் பொருள்களை சுமந்துவந்து அவற்றை உரிய விகிதங்களில் கலந்து பதப்படுத்தினர்.

அக் கட்டடத்திலே குடியிருக்கும் காள் பட்லர் என்பவன்—தினமும் இரவில்தனது நாயுடன் நடைபயிலும் போதெல்லாம் — பெட்டிகளுடன் நடமாடும் இவர்களைத் தெளிவாகக் கண்டுள்ளான். அப்போது சந்தேகம் எழவில்லை.

ஆய்வுகூட முகமூடிகளை அணிந்தபடி இவர்கள் பூட்டிய அறைக்குள் இருந்து தினமும் நைதிரிக்கமிலத்துடன் யூரியாவை பெரிய பரல்களில் கலந்து களியாக்கி எடுத்து கடதாசிகளில் பரப்பினர். அவற்றை உலரவைத்து சேகரித்தனர்.

மிகவும் ஆபத்தான படிமுறைகளை அவர்கள் செய்ய வேண்டி இருந்தது. சல்பியூரிக் மற்றும் நைத்திரிக் அமிலங்களை கிளிசரீனுடன் கலக்கும் போது அமிலம் பொங்கி எழும். அவர்களின் உடைகள் தீய்ந்து போயின. தோலில் எரிவு அடையாளங்கள் தோன்றின. நிலமும் பீங்கான் உபகரணங்களும் அரித்துப்போயின.

கதவுகளின் பூட்டுக்கள், பிணைச்சல்கள் துரு ஏறின.

மிகச் சுலபமான விஞ்ஞானப் படிமுறைகளையே இவை கொண்டிருப்பினும் —செயல் ஆபத்து நிறைந்ததாகவே — இருக்கும். இவற்றை நுட்பமாகவும் தந்திரமாகவும் செய்து முடித்திருக்கிறார்கள்.

குண்டு வெடிப்பிற்கு ஓர் எரிபொருளும்—ஓர் ஒட்சிசன் (பிராணவாயு) வழங்கியும் தேவை என்பது அனைவரும் அறிந்த விடயம். துரிதமாக எரியக்கூடிய ஓர் எரிபொருளாக இவர்கள் மலிவான யூரியா—நைத்திரிக் கலவையை ஆக்கிவிட்டார்கள். இது வெடிக்கத் தேவையான ஒட்சிசனை விரைவாக வழங்கச் சல்பியூரிக் அமிலத்தைத் தெரிந்தெடுத்திருந்தார்கள். அதன் வலுவை மேலும் கூட்ட ஐதரசன் வாயுவையும் அவர்கள் பெற்றிருந்தார்கள்.

நீண்டகால பிரயாசையின் விளைவாக குண்டு வாகனத்துடன் பொருத்தப்பட்டுவிட்டது. றைடர் நிறுவனத்திடம் வாடகைக்குப் பெற்ற மஞ்சள் நிற வான் குண்டை ஏந்தியபடி உலக வர்த்தக நிலையத்தை நோக்கி விரைகிறது.

வாகனம் களவுபோய் விட்டதாக றைடருக்கு தகவல் தந்த மொகமட் சலாமி—400 டொலர்களை மீளப்பெறுவதில் குறியாக இருந்தபோது — குண்டு வெடிக்கும்வரை பொலிஸாரிடம் முறைப்பாடு ஏதும் செய்யவில்லை.

எனவே சுலபமாக வாகனம் உலக வர்த்தக நிலையத்தினும் சாதாரணமாகப் புகுந்து கொண்டது. வாகனத்தை நிறுத்திவிட்டு சூத்திரதாரிகள் அவ்விடத்தைவிட்டு கிளம்பிவிட்டார்கள்.

ஆனால் விதிவிடவில்லை. அது அவர்களைத் தொடர்ந்து கொண்டது. அழிவுகள் பெரிதாக இருந்தபோதும் உயிர்ச் சேதம் மிகக் குறைவுதான். அத்துடன் உலக வர்த்தக மைய கட்டட அமைப்புக்குப் பாரிய சேதம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை. சில தளங்களில் அழிவுகள் அதிகமே தவிர கட்டடம் முழுவதும் தீக்கு இரையாகவில்லை.

இறந்தவர் குடும்பங்களுக்கு அவரவர் இழப்புப் பெரியதுதான்.

★ ★ ★

இத்தகைய குண்டு வெடிப்புக்கள் உலகின் பலபாகங்களிலும் இடம்பெறுகின்றன. அரசுகள் விடுகின்ற தவறுகளோ—சவால்களோ அல்லது இன மத மோதல்கள் தொடர்பான விரிசல்களோ இவற்றுக்குக் காரணமாகின்றன.

குண்டை வெடிக்கவைப்பவர்கள் தமது செயல்களை நியாயப்படுத்தலாம். அரசுகளும் தமது பதில் நடவடிக்கைகளை நியாயப்படுத்தலாம். ஆனால் பாதிக்கப்படுபவர்களுக்கோ எதைக் கொடுத்தாலும் அது நிவாரணம் ஆகாது.

மீட்பு வேலைகளிலும்— துப்பறியும் முயற்சிகளிலும் வசதிபடைத்த நாடுகள் துரிதமாகவே செயற்படுகின்றன. எனினும் அடுத்த குண்டு வெடிக்கும் இடத்தையோ ஏற்படப்போகும் சேதத்தையோ அவர்களால் எதிர்வுகூற இயல்வதில்லை. நாடுகளின் தொழில்நுட்ப வளம் இவற்றுக்கெல்லாம் ஏனோ இடங்கொடுப்பதில்லை.

மீண்டும் அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரத்தில் இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில் ஒரு குண்டு வெடிப்பு நிகழ்கிறது. 1995 ஏப்ரல் 19 ஆம் திகதி இடம்பெற்ற அக் குண்டு வெடிப்பில் 168 பேர் பலியாகி இருக்கிறார்கள்.

முன்னையதைவிட ஐந்து மடங்கு எடை கூடிய வெடிப்பொருள்கள் அங்கே பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. அழிவும் அதிகமாகவே இருந்திருக்கிறது. மீண்டும் மீண்டும் இவ்வாறான குண்டுகள் உலகின் முன்னணி நகரங்களிலே வெடித்துக்கொண்டே இருப்பின் உலகம் இயங்கமுடியாத மூட்டுக்கட்டை நிலை ஏற்படும்.

நகரமொன்றிற்குள் சாரி சாரியாக நுழையும் கணக்கில்லாவாகனங்கள் அனைத்தையும் கண்காணிப்பது என்பதோ, பரிசீலிப்பதோ, கட்டுப்படுத்துவதோ இயலாத காரியம். குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்துபவர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாதவரை அப்பாவிகளின் கண்ணீர்க் கதைகள் தொடரத்தான் செய்யும்.


இத்தகைய கண்ணீர்க் கதைச் சம்பவம் ஒக்லஹோமா நகரிலும் நடந்தது. அதன்விவரம் அடுத்த வாரத்தில்......

(தொடரும்)

## விடைகள்

VI ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### மூளைக்கு வேலை



### கண்டுபிடியுங்கள்

பூவரசு, பனை, தென்னை, புளி, வேம்பு, ஆல், அத்தி, அரசு, மா, கமுகு, முதிரை, பலா, நெல்லி, வாழை.

### வார்த்தை விளையாட்டு

தேன், தேமா, தேடி, தேர், தேடு, தேர்தல், தேடுதல், மான், மாடி, மாதா, மார், மாதர், மாமா, மாடு, மால், தான், தாடி, தடி, தன், தடு.

# கொழும்பு...

(II ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்ற புள்ளி பெற்றதால் வாய்ப்பை இழந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

அமைச்சர் லக்ஷ்மன்ஜெயக்கொடி பிரதமராவார் என்பதனை நம்பிக்கையாக அறிந்து கொண்டு, ஆளுங்கட்சி எம். பிக்க நாடாளுமன்றத்தில் கைலாகு கொடுத்துப் பாராட்டினார்கள். ஜனாதிபதி வைத்த விருந்தொன்றில் இசைமாரி பொழிந்த லக்ஷ்மனை பல எம். பிக்கள் ஆரத்தழுவி புதிய பிரதமர் என்று வாழ்த்தும் தெரிவித்தனர்.

அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி மூத்த அரசியல் வாதி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினருமாவார். பிரதமர் சிறிமாவோவின் அரசில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர். ஆகையால் அவரையே பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக்கினால் பொருத்தமாக இருக்கும் என்று ஆளுங்கட்சிக்குள் உள்ளோட்டமான கருத்துக்கள் முன் வைக்கப்பட்டுள்ளனவாம்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதைவிட இப்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வேறு எதனையும் போர்த்துறையில் பிரமாதமாகச் சாதித்து விடவில்லை. வெற்றி உறுதி அவரின் இயலாமைக்கும் தவறான திட்டமிடலுக்கும் உதாரணம் என்று அத்தரப்பினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி பிரதிப் பாதுகாப்பு அமைச்சரானால் கால அட்டவணையின்றி போர் நீண்டு செல்வது நிறுத்தப் பட்டு விடும் என்ற கருத்து உண்டு. கலாசாரத்துறை அமைச்சராக இருந்த வேளை அவர் போர் அனர்த்தங்களைச் சாடியதனையும் அத்தரப்பினர் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் தாயார் சிறிமா மனது வைத்துப் பிரதமர் பதவியைக் கொடுப்பது போல பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியைக் கொடுக்க மகள் சந்திரிகா இசைய வேண்டுமே! அனுருத்த ரத்வத்தையின் ராஜினாமாவை ஏற்பதற்கு மறுத்த சந்திரிகா அவரை அப்பதவியிலிருந்து நீக்கி எப்படி வேறொருவருக்குக் கொடுப்பார் என்று இன்னொரு தரப்பினர் சந்தேகம் எழுப்பி முற்றுப் புள்ளி வைக்கிறார்கள்!

# தற்கொலைக்குத்...

(I ஆம் பக்கத்தொடர்)

மனப்பான்மை அல்லது மன்னிப்பு மனப்பான்மை உருவாகும், பிரச்சினைக்கான உண்மைக் காரணம் கண்டுபிடிக்கப்பட்டுவிடும். 'அன்பு' என்ற உணர்வு ஏற்பட்டு நல்லுறவுகள் வலுவடையும்.

மேற்கூறிய மனநிலைப்பாடுகள் சாதாரண மனிதர்களில் வழமையாகக் காணப்படும் உணர்வுகளேயாகும். ஆயின் சில மனிதமனங்களே வாழ்வா? சாவா? என்ற உணர்வில் தற்கொலை என்ற கணநேர முடிவை எடுத்துவிடுகின்றன.

தற்கொலை எண்ணம் உருவாகக் கூடியவர்களில் சில இயல்புகளைப் பொதுவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

### ஆருயிர் நண்பர்களற்றிருத்தல்

தம்மைப்பற்றித் தாழ்வாக எடைபோடுபவர்களுக்கு அநேகமாக நெருங்கிய நண்பர்கள் அமையமாட்டார்கள். அவர்கள் தம்மையே விரும்பமாட்டார்கள்; தனிமையை நாடுபவர்களாகக் காணப்படுவர்; எதிரான நடத்தைகளைக் காண்பிக்க முயல்வர். ஆக்கிரமிப்புத் தன்மை, அதிகவலு, கட்டளையிடும் தன்மை கொண்டவர்களாக அமைவர். இத்தகைய இயல்பு நட்பை நிலைநாட்ட எதிர்மறையாக அமைந்துவிடும்.

### வெற்றியீட்டவேண்டும் என்ற அவா

முயற்சியில் வெற்றியடைய வேண்டும்; எல்லா நேரமும் சரியாக ஒழுகுதல் வேண்டும் —என்று நினைப்பவர்கள் அதனை மற்றையவர்களுக்கு நிரூபித்துக்காட்ட முயற்சித்துக் கொண்டேயிருப்பர். மற்றையவர்களை விடத் தாம் ஒரு படி மேல் என்ற இலட்சியம் உடையவர்களாக இருப்பர்.

### பதிலீடுகளை நாடுவர்

வாழ்க்கைத் தேவையைப் பூர்த்தி செய்ய பதிலீடுகளை சிலர் நாடுவர். இத்தகையோர் தம்மைத் தாமே வெறுப்பதனால் தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய வேறு பதிலீடுகளை நாடுகின்றனர். துன்ப உணர்வை மறக்க போதைப் பொருள்களை உள்ளெடுப்பர்; அதிக உணவை உள்ளெடுப்பர். மருந்துப்பொருள்களை உள்ளெடுப்பர்; குடிப்பர்; புகைப்பர். இவற்றின் மூலம் தற்காலிக சுக உணர்ச்சியைப் பெறுவர்.

### தம்மைப்பற்றிய அதைரியம்

ஒரு வேலையைத் தம்மால் செய்துமுடிக்க இயலாது என்ற எண்ணம் மனத்தளர்வு அல்லது சோர்விற்கு இட்டுச் செல்கின்றது. மற்றையவர்களால் செய்து முடிக்கக்கூடிய ஒன்றைத் தம்மால் செய்ய முடியாத விடத்து சமுதாயத்தில் தாம் வேண்டப்படாதவர்கள் என்ற எண்ணத்தை அது உருவாக்கச் செய்கின்றது. தங்கள் எதிர்பார்ப்புக்களைப் பெறமுடியாவிடத்து உருவாகும் மனவுடைவுகள் மற்றையோருடன் ஒப்பிடும்போது தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி விடுகின்றது.

### விவாகரத்து

தாழ்மையுணர்வின் நேரடி வெளிப்பாடே விவாகரத்து ஆகும். கணவன்—மனைவியிடத்தே ஒருவர் மீது மற்றையவரின் கட்டுப்பாடு, ஆதிக்கம், உரிமை பாராட்டுதல் அதிகரிக்கும் போது தாழ்மையுணர்வு ஏற்படுகின்றது. ஒருவர் மீது ஒருவர் குற்றங்காணல், வாழ்க்கையின் கசப்புத்தன்மை, கோபம் என்பன வெளிப்படுகின்றன. எனவே ஒருவரையொருவர் விரும்பவும் விரும்பப்படவும் முடியாது விடுகின்றது.

### பேராசை, சுயநலம்

பேராசை, சுயநலமுடையவர்களுக்கு 'போதாமை' என்ற உணர்வு எப்போதும் சூழ்ந்து கொண்டேயிருக்கும். எனவே தமது தேவையை எவ்வளவு விலை கொடுத்தாயினும் பெற்றுக்கொள்வர். இவ்வாறானவர்கள் அவர்களை விரும்பியவர்களுடன் கூட தொடர்பாட நேரமில்லாதிருப்பர்.

### தம்மைத் தாழ்வாக எடை போடல்

இவர்கள் இப்போதும் தாம் தவறு செய்துவிடக்கூடும் என்ற எண்ணம் உடையவர்களாக இருப்பர். எனவே ஒரு வேலையைச் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படும். தாம் எடுக்கும் முடிவே சரியானது என்ற கொள்கையுடையவர்களும் காணப்படுகின்றனர்.

### போலி வேடம்

சிலர் தம்மை மற்றையவர்கள் முன்னிலையில் போலியாக வெளிப்படுத்திக்கொள்வர். தமது தாழ்வுநிலையை மற்றையவர்களுக்குக் காட்டிக்கொள்ளமாட்டார்கள். இதற்காக உரத்த குரலில் கதைப்பர்; கடுமையாகச் சிரிப்பர்; தம்முடைய உடைமைகளை மற்றையோருக்குக் காண்பிப்பர். தம்மைப் பற்றிய விவரங்களை மற்றையோர் அறிந்துகொள்ள விரும்பமாட்டார்கள்.

### அனுதாபத்தைப் பெறல்

சிலர் தம்மீது மற்றயோர் அனுதாபத்தை உண்டாக்கச் செயற்படுவர். அநேகர் வருத்தங்கள் வருமிடத்து அதனை ஏற்றுக்கொள்வர். ஏனெனில் தாம் நோயுற்றபோது மற்றையோரின் கவனம் தம் பக்கம் அமைந்துவிடும் என்பதனாலாகும்.

மேற்கூறிய மனநிலைகள் அமையுமிடத்து அவற்றை உளவியல் ரீதியில் மாற்றிக் கொள்வதன் மூலம் தற்கொலை விகிதத்தைப் பெரிதும் குறைக்கலாம் என எதிர்பார்க்கலாம்.

★

# கோடையில்.

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

செல்ல வேண்டாம். ஏனெனில் உடலின் வெப்ப நிலையைத் திடீரென குளிர்பானம் குடித்து மாற்றுவது நல்லது அல்ல. உடலுக்கு நீர்ச் சத்தைத் தரும் தர்பூசணி, இளநீர் குடிப்பது நல்லது. எலுமிச்சை, ஓரஞ்சு பழசாறுகளை 'ஐஸ்' போடாமல் குடிப்பதும் நல்லது. 'ஐஸ் வாட்டர்' குடித்தால்கூட, அதை சிறிது நேரம் வெளியே வைத்துவிட்டு பின்னரே குடிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் தடிமன், தொண்டைக்கட்டு, காய்ச்சல் போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும்.

### வேர்க்குரு பிரச்சினை

கோடையில் இரு வேளையும் குளிப்பதன் மூலம் தோல் நோய் பிரச்சினைகளை எளிதில் தவிர்த்து விடலாம். மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை காலையில் தலைக்குக் குளிப்பாட்டலாம். மாலையில் உடலுக்கு மட்டும் குளிப்பாட்ட வேண்டும். தலைக்கு குளிப்பாட்டும் போது நன்கு துடைப்பது அவசியம். தண்ணீரில் வேப்ப இலையை போட்டு நன்கு கொதிக்க வைத்து அது, ஆறிய பிறகு குளிப்பதன் மூலம் வேர்க்குரு ஏற்படாமல் தடுத்துக் கொள்ள முடியும். வேர்க்குரு அதிகமாக இருந்தால் வேப்ப இலையை அரை மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்து, அதை அரைத்து உடலில் பற்றாகப் போட்டுக்கொண்டு விட்டு சிறிது நேரம் கழித்து குளிப்பதன் மூலம் நிவாரணம் கிடைக்கும்.

கோடையில் இட்லி, தோசைக்கு அரைக்கும் போது, உளுந்துடன் வெந்தயம் சேர்த்து அரைத்தால் குளிர்ச்சியைத் தரும். அதிக காரம் சாப்பிடுவது நல்லது அல்ல; கோடையில் கோழிக் கறி, முட்டை சாப்பிடுவதைத் தவிர்ப்பதும் நல்லது.

★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இளவரசர் றணறித்தின் கம்போடிய வருகை

# பிரச்சினைக்கு தீர்வாகுமா?

## தேர்தல் முடிவுகளை ஹூன்சென் மீண்டும் குழப்ப முயலலாம்

பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த கம்போடியாவின் முன்னாள் பிரதமர் இளவரசர் நொரொடம் றணறித் ஒன்பது மாதகால அஞ்ஞாத வாசத்தின் பின்னர் கடந்த திங்கட்கிழமை தலைநகர் நொம்பென் திரும்பினார்.

இளவரசர் றணறித்துடன் அவரது மனைவி மாறி மற்றும் ஐ. நா. உயர் அதிகாரிகள் விமானத்தில் வந்திருந்தனர்.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இருந்து விசேட விமானம் ஒன்றில் புறப்பட்டு வந்த இளவரசர் றணறித்துக்கு விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்களினால் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

★ இளவரசர் றணறித்துக்கு மன்னிப்பு வழங்குவது

★ அவரை நாடு திரும்ப அனுமதிப்பது.

★ 1998 ஜூலையில் நடைபெறும் பொதுத் தேர்தலில் றணறித் பங்குபற்றுவது.

என்ற ஜப்பானிய தீர்வுத் திட்டத்தின் அடிப்படையிலேயே றணறித் நாடு திரும்பி பொதுத் தேர்தல் ஒன்றில் பங்குபற்றஉள்ளார்.

எதிர் வரும் ஜூலை மாதம் நடைபெற உள்ள தேர்தல் நீதியாகவும் நியாயமாகவும் நடத்தப்பட வேண்டும் என்றும் —

தேர்தல் முடிவுகளுக்கு சகல தரப்பினரும் மதிப்பளிக்க வேண்டும் என்றும் விமானநிலையத்தில் றணறித் வேண்டுகோள் விடுத்தார்.

### 1993 தேர்தல்

கடைசியாக ஐ நா. வின் ஏற்பாட்டில் 1993 ஆம் ஆண்டு பலகோடி டொலர்கள் செலவில் கம்போடியாவில் தேர்தல் நடத்தப்பட்டது.

அத்தேர்தலில் றணறித்தின் Funcinpec கட்சி அறுதிப் பெரும்பான்மை பெற்றது.

ஹூன்சென் தலைமையிலான கம்போடிய மக்கள் கட்சி CPP இரண்டாவது இடத்தைக் கைப்பற்றியது.

தேர்தல்முடிவுகளை ஹூன்சென் ஆட்சேபித்தார். தேர்தல் முடிவுகளை ஏற்கமறுத்து போராட்டம் நடத்தப்போவதாக எச்சரித்தார்.

இதனால் பாரிஸ் சமாதான ஒப்பந்தம் குழம்பிப் போகும் நிலையை அடைந்தது.

ஏற்கெனவே 1990 பாரிஸ் சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்த கெமர்ரூச் இயக்கம் 1993 தேர்தலில் பங்குபற்ற மறுத்தது சமாதான ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட முதலாவது அச்சுறுத்தல் ஆகும்

தேர்தல் முடிவுகளை ஏற்க மறுத்த ஹூன்சென் குழம்புநிலை ஏற்பட்ட போது ஹூன்சென்னை அழைத்து றணறித் பேச்சு நடத்தினார்.

இதன் மூலம் அப்பொழுது ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் அதிகாரப் பங்கீடு செய்யப்பட்டு இரு பிரதமர்கள் நியமிக்கப் பட்டனர்.

இளவரசர் றணறித் முதலாவது பிரதமராகவும் ஹூன்சென் இரண்டாவது பிரதமராகவும் நியமிக்கப்பட்டனர்.

## உலக உலா


என்.பி. சீலன்

1998 பொதுத் தேர்தலின் பின்னர் ஒரு பிரதமர் மட்டுமே இருப்பார் என்று அப்பொழுது (1993 இல்) இணக்கம் காணப்பட்டது.

1997 ஜூலை மாதம் றணறித் பதவி நீக்கம் செய்யப்படும் வரை இரு பிரதமர்கள் ஆட்சியே கம்போடியாவில் இருந்து வந்தது.

### றணறித் பதவி கவிழ்ப்பு

1997 ஜூலையில் றணறித் வெளிநாட்டுப் பயணம் ஒன்றை ஆரம்பித்திருந்த சமயம் அதனை வாய்ப்பாகப் பயன்படுத்தி அவரைப் பதவி



இளவரசர் றணறித் தலைநகர் நொம்பென் திரும்ப முன்னர் பாங்கொக்கில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக்கிறார்.

நீக்கம் செய்தார் ஹூன்சென்.

றணறித் ஆதரவுப் படைகளுடன் தலை நகர் நொம்பெனில் நடந்த மூன்று நாள் சண்டையின் பின்னர் தலை நகரை தனது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தார் ஹூன்சென்.

பதவி நீக்கம் செய்யப்பட்ட நாளில் இருந்து வெளி நாடுகளில் இருந்து வந்த றணறித் தனது ஒன்பது மாதகால அஞ்ஞாதவாச காலத்தில் தனது நிலைப்பாட்டுக்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதில் வெற்றி பெற்றிருந்தார்.

### சர்வதேச நிர்ப்பந்தம்

ஹூன்சென் அவருக்கு மன்னிப்பு வழங்கி நாடு திரும்ப அனுமதி அளித்ததுக்கு ஆசியானும் சர்வதேச நிர்ப்பந்தமுமே முக்கிய காரணம் என்று நம்பப்படுகிறது.

கம்போடிய விவகாரத்தில் ஆசியான் எடுத்த நிலைப்பாடே ஹூன்சென் பணிந்து வரக் காரணமாக இருந்து. றணறித் நாடு திரும்பி மீண்டும் பதவி ஏற்கும் வரை கம்போடியா ஆசியானில் அங்கம் வகிப்பதை ஆசியான் நிறுத்தி இருந்தது.

அத்துடன் றணறித்தையே கம்போடியாவின் முதலாவது பிரதமராக ஆசியான் அங்கீகரித்தது. கம்போடியாவில் யுத்தம் நிறுத்தம் செய்யும்படியும் ஆசியான் கோரியது.

அத்துடன் அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான் ஆகிய நாடுகளும் கம்போடியாவுக்கான உதவிகளை கடந்த ஒன்பது மாத காலத்தில் நிறுத்தி இருந்தன.

### நெருக்கடி ஏற்பட கெமர்ரூச் காரணம்

முதலாவது பிரதமராக இருந்த றணறித்துக்கும் இரண்டாவது பிரதமராக இருந்த ஹூன்சென்னுக்கும் இடையில் நெருக்கடி தோன்றுவதற்கு முக்கிய காரணமாக இருந்தது கெமர்ரூச் இயக்கமே.

கெமர்ரூச் இயக்கம் 1975 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை கம்போடியாவின் பதவியில் இருந்தது.

இதன் ஆட்சிக் காலமே கம்போடியாவின் இருண்ட காலமாக கருதப்படுகிறது.

கெமர்ரூச் ஆட்சிக்காலத்தில் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட கம்போடிய மக்கள் கொல்லப்பட்டனர்.

கம்போடியாவில் இவ் அமைப்பு [illegible] களின் உதவியுடன் எப்படிக் கவிழ்க்கப்பட்டதோ அதே போன்றே கம்போடியாவில் வியட்நாமிய தலையீடு ஏற்பட்டு பொல்பொட் ஆட்சியாளர்கள் பதவி கவிழ்க்கப் பட்டனர்.

வியட்நாம் கம்போடியாவைக் கைப்பற்றி தனது கைப்பொம்மையாக ஹெங் சாம்றின் (Heng Samrin) என்பவரை ஆட்சியில் அமர்த்தியது. பின்னர் ஹூன்சென் ஆட்சியை ஏற்றார்.

1990 இல் பாரிஸில் ஐ. நா. ஏற்பாட்டில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக ஹூன்சென்னின் தனி ஆட்சியே கம்போடியாவில் இடம் பெற்றிருந்தது.

### ஹூன்சென்னின் ஆரம்ப காலம் கெமர்ரூச்சில்

ஹூன்சென் முன்னர் கெமர்ரூச் இயக்கத்தில் இருந்தவர்.

1970 — 75 காலப்பகுதியில் பதவியில் இருந்து அமெரிக்க ஆதரவு லொன் நொல் அரசுக்கு எதிராக கெமர்ரூச் இயக்கம் போராட்டம் நடத்தியபோது அந்தப் போராட்டத்தில் ஹூன்சென் முக்கிய பங்கு வகித்தார்.

லொன் நொல்லின் அரச படைகளுடன் அப்பொழுது நடைபெற்ற சண்டை ஒன்றிலேயே ஹூன்சென் தனது இடது கண்ணை இழந்தார்.

1975 ஆம் ஆண்டு லொன் நொல் அரசு பதவி கவிழ்க்கப்பட்டு கெமர்ரூச் இயக்கம் ஆட்சியைக் கைப்பற்றிய போது கெமர்ரூச் ஆட்சியாளர்களினால் தாம் ஓரங்கட்டப்படுவதை ஹூன்சென் உணர்ந்தார்.

தனது உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலை உருவாகிய போது வியட்நாமுக்குத் தப்பிச் சென்றார்.

1979 இல் வியட்நாம் படைகளின் கட்டுப்பாட்டில் கம்போடியா வரும் வரை வியட்நாமிலேயே தங்கிஇருந்தார் ஹூன்சென்

1979 இல் வியட்நாம் படைகளால் பொல்பொட் அரசு பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் கெமர்ரூச் இயக்கம் காடுகளுக்குள் தலைமறைவாகி ஹூன்சென்னின் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது.



தலைநகர் நொம்பென்னில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் ஹூன்சென் கலந்துகொண்ட போது எடுக்கப்பட்ட படம்.

1990 இல் ஐ. நா. தலைமையில் பாரிஸில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தான போது கெமர்ரூச் இயக்கமும் அதில் கைச்சாத்திட்டது. ஆனால் 1993 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில்அதுபங்குபற்றமறுத்தது;

தேர்தலின் பின்னர் பதவிக்கு வந்த றணறித்—ஹூன்சென் கூட்டரசுக்கு எதிராக மீளப்போரை ஆரம்பித்தது.

கெமர்ரூச் இயக்கத்துடன் மிருதுவான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று றணறித் கருதுகிறார்.

அத்துடன் கெமர்ரூச் இயக்கத்தில் இருந்து விலகி வந்தவர்களையும் இணைத்து பிரத்தியேக படை ஒன்றை தமக்கு உருவாக்க முயன்றார் றணறித்.

கெமர்ரூச் இயக்கத்துடன் தொடர்பு வைப்பதை ஹூன்சென் வன்மையாக எதிர்த்து வருகிறார்.

1997 ஜூலையில் றணறித் பதவி கவிழ்க்கப்படுவதற்கு இதுவே பிரதான காரணமாக கருதப்பட்டாலும் அடிப்படை அதிகாரப் போட்டியே.

றணறித் பதவி நீக்கம் செய்யப்பட்டு 9 மாத காலம் வெளிநாடுகளில் தங்கியிருந்த காலத்தில் இராஜ துரோகக் குற்றஞ்சாட்டப்பட்டு அவருக்கு எதிராக கம்போடிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் அவர் இல்லாத நிலையிலேயே அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

### தீர்வு சாத்தியமா?

ஜப்பானிய சமாதான திட்டத்தின்படி கெமர்ரூச் இயக்கத்துடனான சகல உறவுகளையும் துண்டிக்க வேண்டிய நிலையில் றணறித் இருந்து வருகின்றார்.

ஆனால் அது சாத்தியமா என்பது என்னும் கேள்விக் குறியாகவே இருந்து வருகின்றது.

கடந்த 9 மாதகாலம் நடந்த உள்நாட்டுப் போரில் றணதித்தின் படைகளுக்கு ஆதரவாக கெமர்ரூச் படைகள் செயற்பட்டு வந்தன.

ஹூன்சென்னின் அரச படைகளுக்கு எதிராக அவை இணைந்து போரிட்டு வந்தன.

றணறித் பதவி நீக்கத்தை கெமர்ரூச் இயக்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

கெமர்ரூச் இயக்கத்துக்குக் கம்போடிய அரசு 1994 ஆம் ஆண்டு தடை விதித்தது.

எதிர் வரும் ஜூலையில் நடைபெறவுள்ள தேர்தலை பகிஷ்கரிக்கப் போவதாகவும் ஹூன்சென்னும் அவரது அடிவருடிகளும் இன்னும் வியட்நாமியர்களின் கைப்பொம்மையாகவே செயற்படுவதாகவும் கெமர்ரூச் இயக்கம் குற்றஞ் சாட்டி உள்ளது.

ஐ. நா. ஏற்பாட்டில் ஜப்பானால் வகுக்கப்பட்ட சமாதான திட்டத்தின் பிரகாரம் றணறித்துக்குதற்போது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் கம்போடியா திரும்பி இருப்பதும் ஜூலையில் நடைபெறும் பொதுத் தேர்தலில் பங்குபற்ற இணங்கி இருப்பதும் கம்போடியப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகக் கருத முடியாது.

ஆயுதப் படைகளின் ஆதரவைப் பெற்றுள்ள ஹூன்சென்னுக்கு கம்போடியாவில் இன்றும் செல்வாக்கு இருந்து வருகிறது.

தேர்தலில் ஹூன்சென் தோல்வி அடைவாரானால் மீண்டும் சமாதானத் திட்டத்தை குழப்ப முயலலாம்.

வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியினால் சிதறுண்டு போன நாடுகளில் கம்போடியாவும் ஒன்றாகும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org